"மனதின் உள்ளே புதைக்கப்பட்டிருக்கும் ஆசைகளும், எண்ணங்களும், நினைவுகளும், கனவில் வெளிப்படும் அத்தகைய கனவுக் காட்சிகளையே கலை இலக்கியங்களாகப் படைப்பது தான் மிகையதார்த்தவாதம் ஆகும்" எனும் இலக்கியக் கோட்பாடு ஒரு சிறுகதையைப் படித்தவுடன் அப்படியே பொருந்துகிறது அந்தச் சிறுகதை தான், எழுத்தாளர் சுந்தரிமணியன் எழுதிய

'நிறைவேறாத ஆசை'

உலக உயிர்களின் அடிப்படை மூலக்கூறுகள் தன் தாயின் பாசத்திற்கு நெருங்கிய தொடர்பை எப்பொழுதும் பெற்றிருப்பவை ஆகும். தாயின் உடலோடு, தாயின் மனதோடு, தாயின் செயல்களோடு உருவாகி அதை உள்வாங்கித் திரிபவைகள் தான் எல்லா உயிர்களும்.

அம்மா... அம்மா... அம்மாவின் கருவறையை விட உலகில் பெரிது எது? அம்மாவோடு நெருங்கிய நினைவலைகள், இறக்கும் வரை நீண்டு கிடக்குமே, அதனைத் தொட்டுத் தடவிப் பார்த்து எவ்விதக் கற்பனையும் கலக்காமல் அப்படியே உருவம் அமைத்துத் தந்திருப்பது தான், இச்சிறுகதையின் மாபெரும் உத்தியாக இருக்கிறது.

'மிகைஎதார்த்தவாதம்' எதையும் ஆராய்வதை மறுக்கிறது. ஒழுங்கு அமைத்தலை வெறுக்கிறது. இருப்பதை அப்படியே ஆழ்மனத்தைத் தூரிகையோடும், பேனாவோடும் நினைத்துக் கலையழகும் கவினழகும் காண வேண்டும்' என்பது மிகைஎதார்த்த வாதத்தின் அறிவுரையாகும்.

சிறுகதையின் தொடக்கமானது, அந்த நாளில் நடந்த நிகழ்வுகுறித்த சிந்தனையாகத் தொடங்குகிறது. ஒரு நிமிடச் சிந்தனை, பத்து ஆண்டுகளை அது சுமந்து நிற்கிறது.

தாய் இறந்து இன்றோடு மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டது என்பதாகக் கதை தொடங்குகிறது. அந்த நிமிடத்தில் தாயின் வாழ்வில் குறைந்தது 10 ஆண்டுகளினுடைய சிறப்பை மனம் அசை போடுகிறது. அன்புமகளின் மனம் படுகிற வேதனையை இந்தச் சிறுகதை அப்படியே வெளிப்படுத்துகிறது.

ஜி. நாகராஜனின் 'நாளை மற்றும் ஒரு நாளே' என்கின்ற நாவலில் உள்ள காலம் எவ்வளவு குறுகியதோ, அத்தன்மையைப் போல் இச்சிறுகதையும் காலத்தால் சிறிதாகி, நினைவூட்டங்களால் நீண்டு தரமிக்க இலக்கியமாக மாறி இருக்கிறது.

அன்புமகள் தன் தாயின் நினைவுகளைத் தன் ஒவ்வொரு செயலின் பொழுதும் நினைத்துப் பார்த்துக் கொள்ளும் தன்மையை இச்சிறுகதை எடுத்துக்காட்டுகிறது. தன் வாழ்க்கையில் நடந்த சோகங்களின் ஒட்டுமொத்தப் பிரிவையும் அந்த நினைவோட்டத்தில், சிறுகதை ஆசிரியர் நினைத்துப் பார்த்துத் தன் வலியைக் கதையினூடாக

வாசகனுக்கு அனுப்புகிறார்.

அம்மா இறந்ததற்குக் காரணம், அப்பாவின் இறப்பும், அண்ணனின் இறப்பும் தான் காரணம் எனக் காரணம் கற்பிக்கின்றாள். அது முக்கியமான காரணம் அல்லவா? எந்தத் தாயாலும் தன் மகன் இறப்பை, தன் முன்னால் காணவா முடியும்?

தன் கணவனுக்கு முன் தான் இறந்து விட வேண்டும் என்று எல்லாப் பெண்களும் வயது முதிர்ந்த காலத்தில் நினைக்கிறார்கள். இதுவே அன்பின் முதிர்ச்சியாகும். ஒருவரைப் பிரிந்து ஒருவர் இருக்க முடியாது என்பதை அன்றில் பறவை கொண்டு கூறும் இனமல்லவா நம் இனம்.

மூவரின் இறப்பு. அதாவது அப்பா முதலில் இறக்கிறார். பின் அண்ணன் இறக்கிறார். இதெல்லாம் தாங்க முடியாது தாயும் நோய் வாய்பட்டு இறக்கிறார். இதை எல்லாம் தாங்கிக் கொண்டு அன்புமகள் துன்பத்தோடு நினைத்துப் பார்க்கிறார். வலியின் நெருடல்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வடிவில் இருக்கின்றன என்பது விளங்குகிறது.

இது ஒரு பக்கம். இன்னொரு பக்கம், அம்மாவோடு வாழ்ந்த நாட்கள். அன்பு மகள் கண் முன்னே நிழலாடுகின்றன. அம்மாவின் சர்க்கரை குறைவான காப்பி. அவள் போடுகின்ற அந்த முறை. தினம் தினம் பேரக்குழந்தைகளுக்குச் செய்து தரும் உடனடிப் பலகாரங்கள். அதன் சுவை, பணம் இருந்தும் இப்பொழுது எங்களால் அதனைச் செய்து சாப்பிட முடியவில்லை. செய்தாலும் அந்தச் சுவை வரவில்லை என்பதாக ஒவ்வொரு செயல்களிலும் தன் தாயை நினைத்து நினைத்துப் பூரிக்கிறாள் அன்பு மகள்.

அப்பாவிற்கும் அம்மாவிற்கும் இடையில் வாக்குவாதம் தொடர்ந்து இருக்கும். அப்படி இருந்து வந்தாலும் அதற்குள் காணப்பட்ட அன்பையும், பாசத்தையும் உணர்ந்து பார்க்கும் உணர்வுகள்,

முதியோர்காதலை ரசிக்கும் ரசனையே தம்மை ஈடற்ற வாழ்வை வாழச் செய்யும் என்பது தானே படிப்பினை. அதனை இக்கதையில் ஆசிரியர் பலவாறாக நினைத்துப் பார்த்துச் சந்தோஷப்படுகிறார்.

அப்பாவின் மேல் அம்மா கொண்ட காதலை உணர்ந்த உணர்வு அத்தகையது.

அப்பாவின் குணம், அம்மாவை நேரடியாகப் பாராட்டாமல் தன் நெருக்கமானவர்களிடம் அம்மாவின் செயல்களைப் பாராட்டிக் கூறுவதும், கோலத்தை ரசிப்பதுமான உணர்வு, அதைக் கண்டும், அதன் உள்ளார்ந்த உணர்வுகளைப் புரிந்து கொண்டு கூறியிருக்கின்ற விதம் சிறப்பாகும்.

அன்பு மகள் தன் அம்மாவைப் போலவே வாழ வேண்டும் என இயங்குகிறாள். ஏங்குகிறாள். சேலை கட்டும் அழகு உள்பட. சேலை கட்டும் லாபகம் கூடத் தன் தாயின் சாயலில், அதன் மென்மையில் இருக்க வேண்டும் எனும் ஆவல். அதன் உணர்வு மிகவும் மெல்லியதானது.

தாயின் வாழ்வியல் கூறுகள் அனைத்தும் ரசனைக்கு உட்படுத்தப்பட்டு அடுத்த தலைமுறைக்கு அப்படியே பரிணாமம் ஆகி இருக்கின்றன.

தாய் சமைத்து வைக்கும் இடியாப்பமும் புதினா சட்னியும் இனி எப்பொழுது சாப்பிட போகிறோம் எனும் ஏக்கம் சிறுகதை ஆசிரியரின் எழுத்தில் தெரிகிறது. பிரிவு எவ்வளவு கசப்பானது. அதுவும் முழுமையாகப் பிரிந்து விடும்பொழுது ஆழமான துன்பம் வாட்டி வதைக்கத்தான் செய்கிறது.

படைப்பின் பரிமாற்றம் இந்த இடத்தில், உலகளாவிய மானிட சமூகத்தின் ஆழ்மனப் பதிவு ஒற்றுமைகளை எல்லாம் தொட்டுப் பார்க்கின்றன. உண்மையான இலக்கியம் எதுவோ, அது இவ்வேலையைக் கட்டாயம் செய்யும். அவ்வாறான இலக்கியமே, பொதுவியல் தன்மை பெற்று உலகம் தழுவியதாக அடையாளப் படுகிறது. அவ்வகையில் நிறைவேறாத ஆசை சிறுகதை உலகப் பொதுமைக்குமான தரத்தைத் தன்னிடத்தில் கொண்டுள்ளது என்பதைக் காலம் இலக்கியவாதிகளுக்கு விளக்கும்.

சிறுகதை ஆசிரியரின் மன ஓட்டங்கள் அப்படியே சர்ரியலிச பாணியில் ஒன்றன் பின் ஒன்றாக அல்லாது, சரியாக மனப் பேதலித்தல் நிலையில் எங்கெங்கு செல்கிறதோ, அங்கங்கு கதையின் ஓட்டம் இருக்கிறது.

எண்ணங்கள் அலைபாயும் போக்கில், அதை அப்படியே எழுதுவது எழுத்தாளனுக்கு பெரும் சவால். அதைவிட அந்த அனுபவ வெளிப்பாட்டை வாசகனுக்குக் கடத்துவது அதைவிடச் சவாலாக இருக்கும். ஆனால், இச்சிறுகதை அப்படியே சென்று விடாமல், வாசகனுக்கு அந்த உணர்வுகளைக் கடத்துகிறது.

மேம்பட்ட எழுத்து நடை கொண்ட எழுத்தாளர்களே இது போன்ற உணர்வுக் கடத்தலைச் செய்ய முடியும். அதற்கு இச்சிறுகதை ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

ஒரு பக்கம் தாயின் சோகம். இன்னொரு பக்கம் தாயோடு வாழ்ந்த வாழ்வியலின் இன்பம். இவை இரண்டும் இக்கதையில் சாமர்த்தியமாக வெளிப்படுத்தப் பட்டுள்ளன.

தாயின் பிரிவு தாங்காத அன்பு மகளின் தூக்கத்தைக் கெடுக்கும் பேரழுத்தம் இது. கதை படித்து முடிக்கும்பொழுது, இந்தப் பேரழுத்தம், நம் தூக்கத்தையும் கெடுக்கத்தான் செய்கிறது.

மு.ஆறுமுகவிக்னேஷ்

அழவணம்

மருதோன்றி மைலாஞ்சி
அழவணம் மருதாணி

பசியத்தைச் சிகப்பாக்கும்
மருதாணி வேதியியலில்

உன் விரல்கள் மட்டும் எப்போதும்
அதிக மதிப்பெண்களுடன்
தேர்ச்சி பெற்று விடுகின்றன
பூக்கள் மேல்
அபிலாசை நிறைந்த உலகத்தில்
இலைகளில்
மருதாணிக்கு மட்டும் தான்
மவுசு
அதனால் மனமுடைந்த
மருதாணி பூக்கள்
நெஞ்சில் கனல் சுமக்கின்றன
அவை சுமந்த கனலை
நீ உள்ளங்கைகளில்
பிரதிபலிக்கிறாய்
அவ்வளவே.

● சிறுகதை

இரா. மதிராஜ்,

தாத்தாவும், பேரன்களும்

"என்ன தாத்தா ஒன்னுமே பேச மாட்டேங்கிறீங்க "அப்படி உனக்கு என்னவே பிரச்சனை?

"யோவ் பெரிய மனுஷன் என்னய்யா அழுதுட்டு இருக்க?

"ஒழுங்கா ஏதோ ஒன்னு வாய தொறந்து சொல்லுவோய்"

அப்புறம் தானே தெரியும்

தன்னை சுற்றி கேட்க பெரியவரும் அமைதியாக அமைதியை பதிலாக கொடுத்தார். பின்பு சற்று நேரம் அமைதி காத்த அந்த பெரியவர் இல்ல

"அந்த தோட்டத்து முதலாளி ஐயா கூட என்னை எதிர்த்து ஒரு வார்த்தை கூட கேட்டதில்லை டா எப்போ வெனாலும் வந்து தோட்டத்தில் ஒரு ஓரமா மேச்சிட்டு போ பெரியவரே ன்னு சொல்லி இருக்கார்"

"அந்த காவக்கார பையன் நம்மள கன்னத்தில் அறைந்து அவமானப்படுத்திட்டான்டா"

தன் கண்களை மூடி அழுது கொண்டு

"ஏலே இத்தனப் பேராண்டி எனக்கு இருந்து எனக்கு என்ன லே பிரயோஜனம்?"

"அந்த காவக்கார பையன் என்னை அன்னைக்கு அடிச்சுப்புட்டான் லே"

"ஏலே நான் ஒன்னும் சொல்றேன் இல"

"இனி நான் வாழ்ந்தா நல்லா இருக்காது நான் தூக்குல தொங்கப் போறேன் டா"

"யோவ் தாத்தா அப்படி சொல்லாதீங்க

தாத்தா,உங்களை யாரு தாத்தா அடிச்சா என்ன தாத்தா நடந்துச்சு?"

"கொஞ்சம் விபரமா சொல்லுங்க தாத்தா"

"நான் ஆடு மேச்சிட்டுப் போனேன் அந்த காவக்கார பையன் என் கைத்தடியைத் தட்டி விட்டு சென்று, என்னையும் அடித்துவிட்டான் டா

அதுவும் இல்லாம கெட்ட வார்த்தைச் சொல்லி அசிங்கமா ஏசிட்டான் டா"

"அதுக்கு பிறகு இப்ப ரெண்டு நாள் வந்து நான் ஆடு மேக்காமத் தான் இருக்கிறேன்"

"யோவ் தாத்தா உனக்கு இவ்ளோ தான்னையா பிரச்சனை?"

"அதுக்கு நாங்க ஒரு வழியை பண்றோம்

நீர் இனிமேல் அழ வேண்டாம்"

"ஏல நீங்க சின்ன பையலா இருக்கீங்க நீங்க ஏதோ ஒன்னும் பண்ணிடாதீங்க"

"ஊர் துன்பத்தை வாங்கிடாதீங்க"

"எல்லாரும் நீங்க சும்மா இருங்க"

என்று தாத்தா இளவட்டங்களை தடுக்க

அப்போ,

ஒரு வெள்ளிக்கிழமை இரவு கோயில் பூஜை முடிந்ததும் தாத்தாவோட பேரன் எல்லாரும் ஒன்னு கூடிக் கூட்டம் போடுறாங்க

காவக்காரன் வந்து நம்ம தாத்தாவ அடிச்சுப்புட்டான் அதுக்கு நம்ம ஏதோ ஒன்னு பழிக்குப் பழியா செஞ்சாதான் நம்ம தாத்தா மனச நம்ம ஆத்த முடியும்

பெரிய மனுஷன் ஒன்னும் செய்ய வேண்டாம் என்கிறார்,

காவல்காரன் தாத்தா பெரிய ஆள் என்று தெரியாம அடிச்சு போட்டுட்டுடா அவனுக்கு ஒரு பாடத்தை நம்ம சொல்லணும், இனி மேல் நம்ம யார் போனாலும் காவக்கார பையன் நம்மை இளக்காரமா நினைச்சு எல்லாரையும் அடிப்பான்டா

என்னடா இந்த பிரச்சனையை சும்மா விட கூடாது

"நீ என்ன சொல்ற"

பேச்சிமுத்து கேட்டதும்

அமைதியா இருந்த அந்த மாடசாமி

"ஏன் இந்த பிரச்சனையை சும்மா நீங்க போட்டு மனசுல குழப்பிடாதீங்க வேற எனக்கு ஒரு ஐடியா இருக்கு

இது அப்போ சொல்ல முடியாது"

"நாளைக்கு மத்தியானம் ரெண்டு மணிக்கு என் கூட காட்டுக்கு வாங்க,மீதியை நான் அங்க சொல்றேன்"

இளவட்டக் கூட்டம் முடிக்கப்படுகிறது,

காவல்காரர் அந்த பணக்காரரோட தோட்டத்துல காவல் காத்துட்டு இருக்காரு,

அதுக்கு எதிர்தாப்புல்ல இருக்குற ரோட்டு ஓரத்துல இருக்குற பனை மரத்தில்

நொங்கு வெட்டி சாப்பிட்டு இருக்காங்க

"ஏனா இங்க பாரு நம்ம வச்ச குறி தப்ப கூடாது"

ஏதோ ஒரு சின்ன பிரச்சனையில் நம்ம மாட்டினாலும் நம்ம எல்லாரோட உயிருக்கும் ஒரு ஆபத்தா தான் முடியும்

நல்லா கேட்டுக்கோங்க,

நுங்கு சீவுற மாடசாமி

'நுங்கு சீவற மாதிரி காவுகாரனோட தலையும் சீவப் போறேன்"

ஒருவேளை என்னோட குறி தப்புச்சுன்னா காவக்காரன் கால்ல நீதான் போடணும் மாடசாமி அப்படியே சொல்லி முடித்தவன் தான் தாமதம்

"அதான் நீ சொல்லிட்ட இல்ல இது கூட எனக்கு தெரியாமலா போகுது?

சம்பவத்தை கரெக்டா பண்ணுவோம்"

என சொன்னான் பேச்சிமுத்து,

இளவட்டங்கள் நுங்கு வெட்டி திங்கிறது பார்த்த உடனே காவக்காரர் மனசில் நினைக்காரு...

நாலஞ்சு பேரா வந்து இருக்காங்க நம்ம அவன்கிட்ட போய் சண்டை போட்டாலும் அது எக்கு தப்பாயிடும்,

அவனும் நம்ம தோட்டத்தில் வெட்டலையே?

அப்படின்னு நினைச்சு சின்ன பையன்கள் ளோடக் கூட்டத்தை நோக்கி வந்துட்டு இருக்காரு,

"ரெண்டு பேரும் நல்லா கேட்டுக்கோங்க காவக்காரர் வந்துட்டு இருக்காரு"

"இங்க என்னடா பண்ணிட்டு இருக்கீங்க?"

காவக்காரர் கேட்டதும்,

“ஐயா இந்த கோடை வெயில் பசிக்குதுன்னு நொங்கு வெட்டி சாப்பிட்டாங்க நீங்க ஏதும் நினைச்சுக்காதீங்க உங்களுக்கும் வேண்டுமா ஐயா?

சின்ன பயல்கள் திங்குறது எல்லாம் வந்து சத்தம் போடும் ஆள் நான் கிடையாது,

பேரப்புள்ள பெத்து எடுத்து வந்தவன் நான் எனக்கு தெரியாதா?

“டேய் நல்லா வெட்டி சாப்பிடுங்களேன், யார்

வந்துக் கேட்டாலும் நான் பார்த்துகிறேன்”

“என்ன காவக்காரப் பெரியவரே பாத்துட்டே இருக்கிறீரு?”

உக்காரும் ஒய் நீர் வந்து ரெண்டு சாப்பிடும் நான்

வெட்டி தரேன்”

என மாடசாமி கேக்க ஆரம்பித்ததும்

சரி சரி போ

“அதாவது நல்ல காய் யா பார்த்து வெட்டு”

காவல்காரர் கீழே வந்து உட்கார்ந்ததும்

நுங்க வெட்ட வேண்டிய அரிவாள் காவக்கார கூட தலையை வெட்டியது அதே நேரத்தில் ஒரு வெட்டுக் காலில் விழுந்தது

காவர்க்காரர் சம்பவ இடத்திலே துடித் துடித்து இறந்தார்,

“டேய் இப்ப என்ன பண்றது”

தப்பிக்கிறதுக்கு வழியப் பார்ப்போம்,

“காவக்காரரைத் தேட ஆரம்பிக்குதுக்குள்ள நம்ம இவரை எரிச்சிட்டு போயிறலாம்”

காவக்காரர் உடல் எரிக்கப்படுகிறது,

மறுநாள் போலீஸ் வந்து பார்க்கிறாங்க

ஆனா, காவக்காரர் கையில் இருந்த கைத்தடியில் இருந்த பித்தளைக்

குமிழ் மட்டும் எரியாம இருந்ததுனால சரியா இருக்கப்படாம அது மட்டும் போலீஸ்காரங்க கைல கிடைச்சுச்சு,

போலீஸ்காரங்க ஒரு முடிவு பண்ணினாங்க காவக்காரர் எரிக்கப்பட்டு இருக்காரு அப்படின்னு,

சம்பவம் பண்ணவங்களை போலீசார் வந்து ஓரிரு நாட்களில் புடிச்சிட்டாங்க,

தங்கராஜ் பழநி

பூமியை விழுங்கும் பொத்தல்

தன்னிலை யிழக்க
தொடங்கிவிட்ட
பனிப்பாறைகளும்,
அறிக்கைகளை
துல்லியமாக தரமுடியாமல்
குழம்புகிற
வானிலை ஆய்வகங்களும்,
அனலாய்
தகிக்கும் வெயிலும்,
கமழிப்படல
பொத்தலின் இருப்பை
உறுதிப் படுத்துகிறது...
சர்க்கரை நோயின் பாதிப்பில்,
புரையோடிய புண்
ஆற விடாமல்
மேலும் மேலும்
இனிப்பை யள்ளி
படலத்தின்
வாய்க்குள் திணித்து
கொண்டிருக்கிறோம்...
முறையான
ஆயுதங்களற்ற நாம்
புகை வழி கடிதமனுப்பி
வளிமண்டலத்தை
போருக்கிழுக்கிறோம்,
கண்ணுக்கு புலப்படாத
ஆயுதங்களோடு
நம்மீது உயிரிப்போர்
தொடங்குதற் கதுவும்
ஆயத்தமாயிருக்கிறது...
போகிற போக்கில்...
தீவிரமாய் ஊடுருவும்
புற ஊதா கதிர்களின்
தாக்கம் தணிய
நிழல் வலை அணிந்தபடியே
திரிய வேண்டிய காலமும்
வரலாம்...!

கி.சரஸ்வதி

வேண்டும்

நான் உன்னைக் கேட்பதெல்லாம்
என் கார்காலத்தில் உன் சூரியனின் சில துளிகள்
என் கோடையில் உன் மழைச் சாரல்
என் உள்ளங்கையில் உன் அன்பு ரேகை
என் இதழ்களுக்குள் உன் சுவை
என் கூந்தல் கோத உன் விரல்கள்
என் சிலிர்ப்புக்கு உன் வருடல்
எப்போதும் என் கனவுக்குள் உன் வருகை
இறுதியாக
நான் விடைபெறும் வேளையில் உன் விழியோர
நீர்த்துளி
அவ்வளவே....

ஃ

பூக்காடு

உன் பெண்மையை நினைவூட்டுகின்றன
ஆழ் கருநீலத்தில் இரவைப் பிரதியெடுத்த சங்குப்
பூக்கள்
என் முற்றமெங்கும் இறைந்து கிடக்கும் பன்னீர்ப்
பூக்களுக்கு உன் வேர்வை வாசம்
தோட்டத்து ரோஜா இதழ்களில்
இதுவரை ருசித்ததில்லை உன் அதரச் சுவை
கிளைகள் தாழ கனத்து நெருங்கிப் பூத்திருக்கும்
விருட்சிப் பூக்கள் உன் திரட்சியை மெச்சுகின்றன
கொத்தாய் மலர்ந்து வண்டுகள் மொய்க்கக்
கிடக்கும் மாம்பூக்களில்
உன் மலர்ச்சி
மலையை மூடியபடி விரிந்து கிடக்கும் ஊதாப்
பூக்கள் உனக்கான சேலை
வசந்தம் முழுதும் நீயாகவே இருக்கும் பொழுது
என் காடு பூப்பதில்
வியப்பென்ன இருக்கிறது



கவிஞர். செ நா

பணமே!

வீதியெங்கும் தேடுகின்றார்
உன்னை விடாமல் தேடுகின்றார்
நாடி முற்றி போன பின்பும்
உனை நாடியே ஓடுகின்றார்
தேவை என்ற வார்த்தை வைத்து
வாழ்வை தெரியாமல்
தேடுகின்றார்
அதானியும் தேடுகின்றார்
அம்பானியும் தேடுகின்றார்
உனை தேடாதோர் உலகில் உண்டோ!!
தெய்வ பலம் உனக்கும் உண்டோ
நானும் உன்னை தேடுகின்றேன்
நாளும் உன்னை தேடுகின்றேன்
எங்கேதான் போனாயோ!!!!
சிலர் சுருக்கு பையில் தேடுகின்றார்.
சிலர் சுட்டும் விரலில் தேடுகின்றார்
சிலர் அறிவெனும் போதைக்குள் அகந்தையாக
தேடுகின்றார்
எங்கேதான் போனாயோ!!!
இருந்தால் வந்து விடு
நானும் உன்னை தேடுகின்றேன்....
நேர்மையாக தேடுகின்ற
மனிதரெல்லாம் சேற்றுக்குள்ளே!!!
கொள்ளை பல அடிப்பவரோ பண சாற்றுகுள்ளே!!!
பலர் வாணிபத்தில் சேர்த்த பணம் வாசல் வந்து
சேரவில்லை
நாட்காட்டி குறிப்பு எல்லாம் நஷ்டத்தில்
சிரிக்கிறதே
நிலத்தில் பலர் தேடுகின்றார்
நீரில் பலர் தேடுகின்றார்
வானம் முழுவதிலும்
தேடிவிட்டு
உனக்கு வாழ்த்து பா பாடுகின்றார்
நல்லவர்கள் தேடும் பணம்
தெய்வப் பணி செய்கிறதே- அதில்
தேன் தமிழோ செழிக்கிறதே....
பாட்டுக்கு புலவன் அவன் கவி பாடி நின்றானே
காசு பணம் நீயின்றி
புத்தகங்கள் போட முடியாமல் தோற்றானே
“போன கவி மீண்டும் பிறப்பதில்லை”
எந்த பொறுப்பும் உனக்கு இல்லை!!!
“மாய பணத்தாலே காயம் பட்டோர் அதிகம்
உண்டே”
நன்மை கற்ற மனிதரிடம் நாளும் நீ போய்
சேர்ந்தால்
தொன்மை பல செய்திடுவார்-அவை
நாட்டின் நன்மையாக முடியும் அன்றோ...
அதனால் தான் தேடுகின்றேன்
தேடித்தேடி என்ன செய்ய
தெய்வ பலம் கூடிடுமோ
தேவைக்காக தேடி வைத்தால்
நியாயம் இங்கு மீறிடுமோ
கருப்பு பையும் உனக்கு உண்டு
வெள்ளை பையும் உனக்கு உண்டு
நல் காரியமாய் தேடுகின்றேன்
நாள்தோறும் வந்து விடு.

ஞா.முனிராஜ், ருப்புக்கோட்டை

துளிப்பாக்கள்

கண்ணத்தில் முத்தமிட
உருண்டோடுகிறதே
அடடா! கண்ணீர்துளிகள்

☙

பாஸ்மார்க் கிடைக்கவில்லை
மனம் குதித்து ஆடியது
டாஸ்மாக்கில்

☙

யாருக்கு நேர்த்திகடன்
உதிரும் இலைகள்
பட்டுபோன மரங்கள்

☙

ஒற்றை கிளை
தவித்து கொண்டிருக்கிறது
தனிமையில் ஆண் குயில்

☙

மேகத்தில்
விளையாடிக்கொண்டிருக்கிறது
பறக்கும் விமானம்

☙

நிலவுக்குள்
ஆயிரம் இருட்டு
கதை சொல்லும் பாட்டி

☙

சர்க்கரை வாங்க ரேசன்கடையில்
வரிசையாய் நிற்கிறது
எறும்பு கூட்டங்கள்

☙

கருவை சுமந்த தாய்
பிள்ளை கேட்கும் வரம்
பெண்ணாக பெற்றுவிடாதே..!

☙

எழுதியதும்
பெய்து விட்டதே
கவிதை மழை

☙

சிறுவனின் கேள்வி
மழைநிற்க யார் வரைந்தது
அழகிய வானவில்

☙

சிறகுகள் முளைத்ததும்
பறந்து செல்கிறது
காதல் திருமணம்

☙

திட்டும் அப்பா
கவிழும் முகங்கள்
அம்மா இல்லாத வீடு

☙

மார்கழி விடியல்
நகரவே இல்லை
பொழியும் பனி

● சிறுகதை

பிரேம்குமார்

அசுரன், யுவதி மற்றும் லாக்டவுன்

நகரத்தின் முக்கிய இடத்தில் எட்டு பிரதான சாலைகள் ஒன்று சேர்ந்து ரகசியமாகக் கைகுலுக்கும் இடமாகத்தான் இந்த சுரங்கப்பாதை எண் 712 இது நாள் வரை இருந்திருக்கிறது. எனில் இந்த நகரத்தில் இதுவரை 711 சுரங்கப்பாதைகள் இருக்கிறது என்று அவசரப்பட்டு யாரும் ஒரு முடிவிற்கு வந்துவிடவேண்டாம். அதிகபட்சம் சமீபத்தில் நிருவிய சுரங்கப்பாதையையும் சேர்த்து இந்த நகரத்தில் இருப்பது மொத்தம் 210 தான். அதுபோல 712 என்பது ஒரு ரகசிய எண்ணோ அல்லது மறைமுகமாக குறிப்பிட்ட சிலருக்கு உணர்த்தும் ஒரு அடையாள குறியீட்டு மொழியோ கிடையாது. இந்த எண்ணிற்கான காரணத்தை அறிந்தவர் இதுவரை யாருமில்லை எனலாம். என் வீட்டு ஜன்னலின் வழியாக பார்த்தால் சிகப்பு நியான் ஒளியில் 712 என்ற எண் பளிச்சென்று தெரியும்.

காலை முதல் பின் இரவு வரை மனிதர்களின் நடமாட்டம் தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருக்கும். அவசர கதியில் மனிதர்கள் ஏதோ சிந்தனை வயப்பட்டு கண் மூடிப்பயணிப்பதைப் போல சுரங்கப்பாதைக்கு அடிக்கடித் தோன்றும். சுரங்கப்பாதையின் மேல் விரைந்து செல்லும் வாகனங்களின் ஒலியை மீறியபடிக்கு

மனிதர்களின் காலடி சப்தங்கள் தம்பூராப் பெட்டியில் சிக்குண்டு சிறைப்படுத்தப்பட்ட அலுப்பூட்டும் ஒற்றை சுருதி மயக்கத்தில் கேட்கும். இரவு ஒரு மணிவாக்கில் சலிப்புடன் ஒரு முறை குலுங்கி அடங்கி சுருண்டு படுத்துக்கொள்ள சுரங்கப் பாதை ஏங்கித் தவிக்க மீண்டும் இரவுப் பணி முடிந்து வீடு செல்பவர்களின் காலடி சப்தங்கள் இரவின் அமைதியை மெலிதாக உடைக்கும்.

முக்கிய சுரங்கப்பாதையாதலால் காவலர்கள் அவர்களின் கையில் இருக்கும் லத்திக்குச்சியை சுட்டிக்காட்டி அங்கிருக்கும் சிறிய வியாபரிகளை வேளியேற்ற முயற்சிக்க சில நடுத்தர வயதுப் பெண்கள் நமுட்டுச்சிரிப்புடன் பொய்யாக வேளியேறுவதான பாவனையில் தங்களின் சுறுசுறுப்பைக் காட்டுவார்கள்.

இரண்டு மூன்று நாட்களாக சுரங்கப்பாதையைக் கடந்து சென்ற மக்கள் முன்பு போல இல்லாமல் வழக்கத்திற்கு மாறாக குரலை உயர்த்தி அதிகமாக பேசிக்கோண்டே நடந்தார்கள். இந்த முறை அவர்களின் காலடி சப்தங்களை விட அவர்களின் பேச்சுக் குரல்களே சுரங்கப்பாதை சுவர்களில் பட்டுத் தெறித்தது. அவர்களின் நடையில் கூட ஒருவித தளர்வு தெரிந்தது. ஏதோ ஒன்று நடப்பதற்கான முன் அறிவிப்பாக அவர்களின் தொடர் பேச்சு இருந்தது. அந்தச் சுரங்கப்பாதையைக் கடந்து செல்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வந்தது. சுரங்கப்பாதையின் மேல் செல்லும் சாலைகளிலும் அவ்வளவாக வாகனங்கள் செல்லவில்லை. அப்படிச் சென்ற ஒரு சில வாகனங்களும் பேரிரைச்சலுடன் அவசரகதியில் கடந்து போனது.

வழக்கமான காலை நேரம். சுரங்கப்பாதையின் நுழைவுப் படிக்கட்டுகளில் ஒரு வட நாட்டு நடுத்தர வயதுப் பெண் தன் குழந்தைக்குப் பால் கொடுத்துக்கொண்டிருந்தாள். கண்களை சுற்றும் முற்றும் சுழலவிட்டு தளர்வாக சுவற்றில் சாய்ந்துகொண்டாள். எதையோ தொலைத்துத் தேடுவது போல தோளில் தொங்கிய துணிப்பையிலிருந்து ஒரு நசுங்கிய பிளாஸ்டிக் பாட்டிலை தேடி எடுத்தாள். அதில் சிறிது தண்ணீர் இருப்பதைக்கண்டு சற்றே ஆசுவாசமானவள் ஜாக்கெட்டை மேலும் தளர்த்தி குழந்தையை பதட்டத்துடன் இறுக அணைத்துக்கொண்டாள். அப்போது பெண் துப்புறவுத்தொழிலாளிகள் இரண்டு பேர் கையில் துடப்பத்துடன் சுரங்கப் பாதையின் படிக்கட்டில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். இருவரில் ஒருத்தி நடுத்தரவயதிலும் மற்றவள் அவளைப் பார்க்கிலும் பதினைந்து வயதிற்கு இளையவளாகத் தெரிந்தாள். நடுத்தர வயது யுவதி புகையிலையை விரல்களால் முறித்து வாயின் இடது பக்கம் ஒதுக்கி வைத்து பொங்கி வரும் உமிழ் நீருடன் மென்று உதட்டைக் குவித்து உமிழ்ந்தாள்.

“இங்கேயெல்லாம் இப்படி வந்து உக்காரக்கூடாது” இளையவள் குழந்தையுடன் அமர்ந்திருக்கும் அந்தப் பெண்ணை விரட்ட நடுத்தர வயதுக்காரி வாயின் ஓரத்தில் துளிர்த்த புகையிலை எச்சிலை கைகளால் துடைத்துக்கொண்டே அந்தப் பெண்ணின் பெயரைக் கேட்டாள். அதற்கு அந்தப் பெண் பதிலளிக்காமல் ஒட்டிய வயிற்றில் இரண்டு முறை வலது கையால் தட்டி வாயருகே கொண்டுபோனாள். அவள் கண்களில் நீண்ட நாள் பசி அம்மணமாகத் தெரிந்தது

நீண்ட நாள் கழித்து எதிர்பாராமல் அந்த இரவில் பொழிந்த மழையின் இரைச்சல் தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருந்தது. பத்தியம் இருந்து பெற்ற குழந்தையை பக்குவமாகக் கொஞ்சுவது போல அனைவரின் கண்களும் விரிந்து மழையை வீட்டிலிருந்த ஜன்னலில் வழியாக ரசித்தது. ஒரே தாள லயத்தில் தொடர்ந்து மிதந்து வரும் மிதமான இசை மீட்டலில் கசிந்து வரும் துளிர் இசையை கேட்குமாறு மழை எனக்கு மட்டும் ஒரு சலுகை அளித்திருந்தது. மொட்டை மாடியில் அடைபட்டுச் சேர்ந்த மழை நீர் மண் குழாயின் முன் பொறுமை இன்றி பலவிதமான சப்தங்களை ஏற்படுத்தி சுதந்திரம் தேடி வெளியேறி பூமியில் பாய அந்த தொடர் பேரிரைச்சல் நான் ரசிக்கும் இயற்கை மழையின் தாள ஒலியினை சிதைத்து காதை செவிடாக்கியது. சீறி விழுந்த மழை நீர் சுடு மண் தரையில் பள்ளங்களைக் குழித்து தன் கொதிப்பை வெளிக்காட்டியது. மழை ஒன்று, குணங்கள் பல என்று நான் மெல்ல உணரும் சமயம், செல்லமான துள்ளலுடன் மழைச் சாரல் என் முகத்தில் பட்டுத் தெறித்து என்னை சுய நினைவிற்கு கொண்டு வந்தது. மழையின் உருவம் ஒரு சிறந்த கதகளி ஆட்டக்காரரின் சினேக முக பாவத்துடன் அழுத்தமான கால் முத்திரையை பூமியில் சீராகப் பதித்து அந்தப் பள்ளங்களில் தானே தன்னை முழுவதுமாக நிறைத்து வழிந்து புதுப் பாதைகளை கண்டறியும் தேசாந்திரியைப் போல இப்போது எனக்குத் தெரிந்தது.

சுவற்றிலிருக்கும் கடிகாரத்தை மீண்டும் பார்த்தேன். மணி இரவு ஒன்று. இடையில் விழித்துக் கொண்டால் தூக்கம் தொடர்வதற்கு ஒரு பெரிய போராட்டமே நடத்த வேண்டியிருக்கும். ஜன்னல் வழியாகப் பார்த்தேன். சாலை வெறிச்சோடிக்கிடந்தது. ஈரம் பாவிய சாலைகள் பளிச்சென்றிருந்தது. மனித நடமாட்டம் இல்லாத சாலை எனக்கு என்றும் உவப்பானதாக இருந்ததேயில்லை. அத்தகைய சாலை தனிமையை தன்னுள் வேண்டுமளவு போர்த்திக்கொண்டு தன் சோகங்களை யாரிடமும் பகிர்ந்துகொள்ள முடியாமல் மனதில் அடக்கி வைத்துக்கொண்டு திணறுவதைப் போல எனக்குத் தோன்றும். அரசமர இலைகளிலிருந்து வடிகட்டி வழிந்திறங்கிய நிலவின் ஒளி அனாதையான சாலையிடம் துக்கம் விசாரிக்க மரத்தின் கீழே அமர்ந்திருந்த பிள்ளையார் எதையும் கண்டுகொள்ளாமல் எதிரில் இருக்கும் சாலையையே

வெறித்துப் பார்த்துக்கொண்டிருக்கிறார். அவசரகதியில் மரக்கிளைகளில் இடம் பிடித்துக்கொண்ட பறவைகள் தங்களுக்கான இருக்கைகளின் இடைவெளிகளை சற்றே தளர்த்தி வசதியாக அமர்ந்து கொள்கிறது. அதனால் ஏற்பட்ட சிறிய சலசப்பில் தூக்கம் கலைந்த கருப்பு நிற நாய் தலை உயர்த்தி மரத்தினைப் பார்த்து மெலிதாக ஊளையிடுகிறது.

பிள்ளையார் கோயிலிற்கு எதிரில் இருக்கும் சாற்றிய அசைவ உணவு விடுதியின் முன்பு நடுத்தர வயதுள்ள யுவதி ஒருத்தியை இறக்கிவிட்டு கருப்பு நிற மாருதி விரைந்து சென்றது. அவள் உணவு விடுதியின் படிக்கட்டில் கால்களை தளர்வாக நீட்டி அமர்ந்து கொண்டாள். மிதமான ஒப்பனை. நொடியில் எவரையும் கவர்ந்துவிடும் பார்வை. அவசரமாக அள்ளிச் சொறுகிய கொண்டை அவளுக்கு மிகவும் அழகாக இருந்தது. அவளை நெருங்கி வாலாட்டிக்கொண்டே வந்த கருப்பு நாயை எட்டி உதைக்கும் பாவனையில் வலது காலை உயர்த்த தலை தெறிக்க ஓடிய நாய் படியின் ஓரத்தில் சுருண்டு படுத்திருந்த கடைக்காரச் சிறுவனின் மேல் தடுமாறி விழுந்தது. கடையின் காவலிற்காக அங்கே படுத்திருந்த அவனுக்கு வயது இருபதிற்கு மேல் இருக்காது. அவன் பதறியபடி விழித்துக்கொண்டான். சேலை மறைப்பில் அடங்க மறுக்கும் அவளின் திமிறிய இளமையை கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தான். அவனுடைய பார்வையை துளியும் பொருட்படுத்தாமல் யாரிடமோ தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தாள் அவள். ஒருவன் சுரங்கப்பாதையில் அமர்ந்திருந்த பெண்ணை தன்னுடன் அங்கே அழைத்து வந்தான்.

மேஜையில் வைத்திருந்த பாதி அருந்திய குளிர்பானத்தை கையில் எடுத்துக்கொண்டு மீண்டும் ஜன்னல் வழியாகப் பார்த்தேன். படிக்கட்டில் அமர்ந்துகொண்டு கடைக்காரச் சிறுவன் பீடி குடித்துக்கொண்டிருந்தான். அப்போது இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு இளைஞர்கள் உணவு விடுதியின் முன் வந்து நின்றார்கள். அதில் ஒருவன் கருப்புச் சட்டை அணிந்திருந்தான். அவனுடன் வந்தவன் ஏதோ கேட்க, கடைக்காரப் பையன் எதிரில் இருக்கும் சிமெண்ட் சாலையை சுட்டிக்காட்டினான். சுட்டிக்காட்டிய திசையில் வண்டி விரைந்தது. தூரத்தில் பாதி மூடிய ஜன்னலிலிருந்து ஜேசுதாஸின் பாடல் ஒன்று காற்றில் தவழ்ந்து வந்தது.

மீண்டும் அதே இரு சக்கர வாகனம் கடையைத் தாண்டி விரைந்து சென்றது. ஆனால் இம்முறை முதலில் வந்த இருவரில் ஒருவன் வண்டியோட்ட அவன் பின் இருக்கையில் அந்த வடநாட்டு யுவதி கையில் குழந்தையுடன் அமர்ந்திருந்தாள். கருப்புச் சட்டையணிந்தவனைக் காணவில்லை. சிறிது நேரம் கழித்து அங்கு நடந்து வந்த கருப்புச் சட்டைக்காரன் உணவு விடுதியின் படியில் அமர்ந்திருந்த கடைக்காரப் பையனின் அருகில் வந்தமர்ந்தான். தன் கையில் வைத்திருக்கும் சிகரெட் பாக்கெட்டிலிருந்து ஒன்றை உருவி எடுத்து அவனிடம் கொடுத்தான். மறுப்பேதும் கூறாமல் கடைக்காரப் பையன் வாங்கிக்கொண்டான். இருவரும் இதற்கு முன்பு ஏற்கனவே சந்தித்தது போல புன்னகைத்துக்கொண்டார்கள். அந்தப் புன்னகையே இருவருக்குமிடையில் இருந்த தயக்கத்தை தளர்த்த போதுமானதாக இருந்தது. தன் வலது கையை கடைக்காரச் சிறுவனின் தோளில் பற்றி இறுக அணைத்துக்கொண்டான். மீண்டும் மழை தொடர்ந்தது. உயரத்தில் பாதி கட்டிய இற்றுப்போன சாக்கை கருப்புச் சட்டைக்காரன் மேலும் தளர்த்த திரை போல படி வரை படர்ந்து இருவரையும் முழுவதுமாக மறைத்தது.

ஒரு கூர்க்கா தூரத்தில் விசில் ஒலி எழுப்பிக்கொண்டே கடையை நோக்கி நடந்து வந்தான். வழக்கமாக மாதம் ஒரு முறை எங்கள் வீட்டிற்கு வருபவர் என்பதால் அவரிடம் எனக்கு சிறிய பரிச்சயம் இருந்தது. காற்றில் ஆடிய சாக்கை லத்திக் குச்சியால் உயரே தூக்கினான். கடைக்காரச் சிறுவனிடம் தீப்பெட்டி கேட்டார். கருப்புச் சட்டைக்காரனை பார்த்து சிரித்தவன் கடையின் எதிரில் இருக்கும் சிமெண்ட் மேடையில் தளர்வாக அமர்ந்துகொண்டு அவர்களையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான். புன்னகைத்தபடியே கடையைக் கடந்து போகும் போது மீண்டும் ஒரு முறை அவர்களை திரும்பிப்பார்த்தான். அவர்களின் கையசைப்புக்குக் காத்திருந்தது போல உற்சாகமாகக் கையாட்டினான். விட்ட தூக்கத்தை கண்களில் முழுவது தேக்கி வைத்தது போல் கருப்புச் சட்டைக்காரனை ஏக்கமாகப் பார்த்தான் கடைக்காரச் சிறுவன். சுவர் கடிகாரத்தைப் பார்த்தேன். இரவு இரண்டு. அதிகபட்சம் இன்றைக்கு மூன்று மணி நேரத் தூக்கம்தான் என்று நினைக்கும் போது மிகவும் களைப்பாக இருந்தது. மீண்டும் ஜன்னலின் வழியாகப் பார்க்க கடைக்காரச் சிறுவன் தன்னை ஒரு நத்தைப்போல் சுறுக்கி அந்தச் சாக்கில் முழுவதுமாக நிறைத்திருந்தான்.

வழக்கமாக நாளிதழ், பால் என்ற எந்த குரலும் என்னை எழுப்பவில்லை. மணி ஏழிருக்கும். வாசலில் குரல் கேட்டுத் திரும்பினேன். அந்தச் வடநாட்டுப்பெண் கலைந்த தலைமுடியுடன், ஆங்காங்கே கிழிந்த உடையுடன் கையில் குழந்தையுடன் நின்றிருந்தாள். உரிமையுடன் என் அருகில் வந்தாள். கிழிந்த புடவையை தாராளமாக விலக்கி ஒட்டிய வயிற்றைக் காண்பித்தாள். இயன்ற மட்டும் போராடி தன்னை தற்காத்துக்கொண்டதற்கான அடையாளமாக உரைந்த உதிரக் கீரல்கள் பாவிய அவளின் உலர்ந்த மார்பகத்தை இறுகப் பற்றிக்கொண்டு குழந்தை தொடர்ந்து அழுதுகொண்டே இருந்தது. அவளின் கண்களில் தெரிந்த தணியா பெருஞ்சினமும், நகக் கிரீடங்களில் உரைந்திருந்த உதிரமும் காண அசுரர்களை வென்ற ஒரு காளியாக அவள் எனக்கு இப்போது தெரிந்தாள்.

ஸ்ரீவி.முத்துவேல்

தன்முனைக் கவிதை

நரகஉலகத்தில்செய்யும்
நற்செயல்மனிதனாக்குமே!
நமக்குள்துளிர்விடும்
நல்லெண்ணம்நல்லோராக்குமே!

மலைத்துநின்றால்
மணல்மேடும்மலையாகுமே!
முயன்றுதுணிந்தால்
முட்பாதையும்வரலாறாகுமே!!

புரிந்துநடத்தல்
பிரியத்தைப்பெருக்கும்
புரியாதாய்நடித்தல்
பிரிவைப்பரிசளிக்கும்



யாழ் எஸ் ராகவன்

கொஞ்ச நேரம் இரு

நகச்சுத்தி தந்த
வீக்கத்தை துணியால்
மறைத்து மலையென
குவிந்த பாத்திரத்தை
கழுவி சுத்தம் செய்துவிட்டு பலியாகிறேன்
கொஞ்ச நேரம் இரு
மூன்று நாள் உபாதை
இன்னும் முடியாமல் வழிந்து கொண்டிருக்கும்
யோனியை துடைத்துவிட்டு
இதோ வந்து விடுகிறேன்
கொஞ்சம் இரு
போதையில் நீ ஒட்டிய தால்
குண்டும் குழியுமான
எனது மேனி ரணங்கள்
ஆற இன்னும் தாமதமாகும்
கொஞ்ச நேரம் இரு..
உனது நாவின் அடங்காத வெறிக்கு
என்னையே பரிமாறும்
நிலை வந்த போதும் உணவு மேசையில்
ரத்த ருசிக்கு காத்திருக்கும்
நீ கொஞ்ச நேரம் இரு
எப்பொழுதும் உனது பார்வை வளையத்தில்
எனது சிந்தனைகளும் சிறை வைக்கப்பட்ட
தருணம்
உனது சந்தேக அரிப்பையும்
சொரிந்து விட கொஞ்ச நேரம் இரு
எதையும் விட்டுக்கொடுக்காத நீ
அடுத்த நுகர்வுக்கு எப்போதும்
ஆயத்தமாகவே இருக்கிறாய்..
எல்லா வலிகலோடும்
நான் உடன் வர
கொஞ்ச நேரம் இரு

ந க துறைவன் கவிதைகள்:

பனி

புகை மண்டலமாய் பனி
பூக்கள் மீது ஈரத்துளிகள்
இதழுகளுக்கு குளிர்
போர்த்திக் கொள்ள ஏதுமில்லை
சூட்டை உணரத் தெரியாமல்
வண்ணத்துப்பூச்சிகள்
வந்து வந்து போகின்றன
காற்றின் ஸ்பரிசம் சுகம்
தேன் உறிஞ்சும்
வண்ணத்திக்கு பேரின்பம்
இன்னும்
அந்த மார்கழித் பனி
விலகாமல்...!!

ஃ

வீடு

நேற்று வரை
அது என் தாத்தா வீடு
இன்று அதுவே
என் அம்மா வீடு
நாளை அது
என் வீடாக இருக்குமோ?
அல்லது
வேறு யாருடைய
வீடாக இருக்குமோ?
தெரியாது
நல்ல விலைக்கு விற்கப்படுமா?
யாரின் கைக்கு மாறிடுமோ?
தெரியாது
ஓ... வீடு என்பது
ஒரு தற்காலிக குறியீட்டு
அடையாளமோ?
அது சரி
எதுதான் எனக்கான
சொந்த வீடு?

தேடல்

உன்னை எங்கெல்லாம்
தேடுவது?
இங்கேயா இருக்கிறாய்.
இங்கே இருக்கிறாய் என்று
தெரிந்திருந்தால்,
நேற்றே வந்து பார்த்திருப்பேனே?
நேற்று இங்கே இருந்தேன்
இன்று தான் இங்கில்லை
இப்பொழுது எங்கிருக்கிறேன் என்று
உன்னில் தேடிப் பார்
அங்கே இருக்கிறேனா?
நீ தேடும்
அந்த நான்.

ஃ

சுண்டு விரல்

சிறுவனாக இருந்த போது,
அப்பாவின் சுண்டுவிரல்
பிடித்து நடந்த மகன்
திருமணத்தின் போது
மனைவியின்
சுண்டு விரல் பிடித்து நடந்த கணவன்
தாத்தாவின் சுண்டு விரல் பிடித்து
பார்க்கில் உலா வந்த பேத்தி
இப்பொழுது
அந்த சுண்டு விரல்
பிடித்து நடந்த கவனமே
தற்போது எவருக்கும் வருவதில்லை.
ந க துறைவன்

● சிறுகதை

சங்கர சுப்பிரமணியன்

எங்கே அவன்?

கால்ஃபீல்ட் தொடர்வண்டி நிலையத்தில் நின்றிருந்த தொடர்வண்டி சிறிது நேரம் நேரம் கடந்தும் கிளம்பவில்லை. அனிச்சையாக வாசித்துக் கொண்டிருந்ததை நிறுத்தி தலையைத்தூக்கி என்ன நடக்கிறது எனப்பார்த்தேன். என்னைப்போன்றே வாசிப்பில் ஈடுபட்டிருந்த அனைவரது தலைகளும் நிமிர்ந்தன. வாசிப்பு என்பது மனிதனுக்கு எவ்வளவு அவசியம் என்பது எல்லோருக்கும் புரிந்த ஒன்றே.

ஆனால் இவ்வாசிப்பு பொது அறிவைப் பெருக்கிக்கொள்ளவா? நம்மைச்சுற்றி என்ன நடக்கிறது என்பதை புரிந்து கொள்ளவா? அல்லது பொழுதைப்போக்கவா? என்ற நிலையில் நிறுத்தி எண்ணிப்பார்த்தால் உண்மையில் யார் யாருக்கு எது வாசிப்பு

என்பது புரிந்து விடும். ஆகையால் வாசிப்புக்கு வலிய நாமே ஒரு பொருளை எண்ணிக்கொண்டு அதையே மற்றவர்களும் எண்ணாவிட்டால் அவர்களுக்கு வாசிப்பில் ஈர்ப்பு இல்லை என்ற முடிவுக்கு வரக்கூடாது.

தொடர்வண்டி கிளம்பாததற்குண்டான காரணத்தை அறிவிப்பின் மூலம் உணர்ந்ததும் எல்லோரும் திரும்பவும் கைபேசியுடன் ஐக்கியமாயினர். இவர்கள் அனைவரும் வாசித்துக் கொண்டிருக்கிறார்களா என்பதை

உறுதியாகவும் கூறமுடியாது. சிலர் பாட்டு கேட்கலாம். சிலர் படம் பார்க்கலாம். சிலர் செய்தி வாசிக்கலாம். சிலர் பொழுது போக்குக்காகவும் வாசிக்கலாம். சிலர் அறிவைப்பெருக்கும் விதமானவற்றில் ஈடுபட்டிருக்கலாம்.

சட்டென்று என் மனக்குதிரை இருபது முப்பது ஆண்டுகளுக்கு முன் சென்றது. அப்போதெல்லாம் காலையிலும் மாலையிலும் பணிக்காக சிட்டிக்கு செல்பவர்கள் இரண்டு மூன்று மணி பயணநேரத்தை கையிலிருக்கும் நூலுடன் செலவிடுவார்கள். எப்படியும் ஒரு வாரத்துக்கு ஒரு நூலை முடித்துவிடுவார்கள். இன்று இரண்டு வாரத்துக்குள்ளாவது ஒரு நூலை முடிப்பார்களா? இப்படி பலவாறாக எண்ணவும் நான் இறங்க வேண்டிய சதர்ன் கிராஸ் நிலையம் வரவும் சரியாக இருந்தது.

தொடர்வண்டியிலிருந்து இறங்கி அடுத்த தடத்தில் சன்பரி செல்லும் தொடர்வண்டிக்காக காத்திருந்தபோதுதான் நான் அதிசயிக்கும்படியான ஒன்று நடந்தது. என் தடத்தைநோக்கி எஸ்கலேட்டரில் இருந்து ஒருவர் இறங்கி வந்தார். என்னருகே வந்து நின்றார்.

"சன்சைன் செல்லும் தொடர்வண்டி இந்த தடத்தில் வருமா?" என்னருகே நின்றவர் கேட்டார்.

"வரும். இன்னும் சில நிமிடங்களில் சன்பரி செல்லும் தொடர்வண்டி வரும். அது சன்சைனில் நிற்கும். நானும் அங்குதான் இறங்குவேன்." என்றேன்.

"ரொம்ப நன்றிங்க" என்று சொன்னவரின்

முகத்தில் எந்தவித கவலையின் சாயலும் தென்படவில்லை.

நன்றி சொன்னவரின் முகத்தில் கவலையின் சாயல் தெரியவில்லை என்றதும் குழப்பமாக இருக்கிறதல்லவா? என்னருகே நின்றவருக்கு இரண்டு கால்களும் இல்லை செயற்கைக் கால்கள் பொருத்தப்பட்டிருந்தன. ஆனால் அவர் செயற்கைக்காலுடன் இருப்பதாகவே காட்டிக் கொள்ளவில்லை. டீசர்ட்டும் பர்முடாஸும் அணிந்திருந்தார்.

அவருக்கு முழங்கைக்கு கீழ் இரண்டு கைகளும் இல்லை. விபத்தால் அப்படியானதா அல்லது பிறவியிலேயே அப்படியா என்று தெரியவில்லை. ஏனென்றால் இரண்டு கைகளும் ஒரே மாதிரி இருந்தது. இரண்டு கைகளிலும் முழங்கைக்கு கீழே முடிவில் ஒரு நெல்லிக்காய் வடிவில் உருண்டையாக இருந்தது.

சன்பரி தொடர்வண்டி தடத்தில் தொடர்வண்டி வந்து நின்றது. அவரிடம் சொன்னதும் ஒன்றுமே அலட்டிக் கொள்ளாமல் என்னுடன் இயல்பாகவே வண்டியில் ஏறி இருக்கையில் அமர்ந்தார். தொடர்வண்டி ஓட ஆரம்பிக்கவும் அவர் வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க நான் அவரைப்பற்றியே எண்ணிக்கொண்டுருந்தேன்.

நமக்கெல்லாம் கைகால்கள் எல்லாம் நன்றாக இருந்தும் எவ்வளவோ பிரச்சனைகள். அவற்றையெல்லாம் சமாளித்து வருகிறோம். ஆனால் இவருக்கும் வாழ்க்கையில் பிரச்சனைகள் இல்லாதிருக்காது. அந்த பிரச்சனைகளோடு கைகால்களும் இல்லாதது பெரிய பிரச்சனையாகவே இருக்கும். அதுவும் அன்றாட அவரின் தேவைகளை செய்யவே எவ்வளவு அல்லல்பட வேண்டியிருக்கும் என்று எண்ணிக் கொண்டிருந்தேன்.

தொடர்வண்டி டாட்டினம் நிலையத்தில் வந்து நின்றது.

"அடுத்த தொடர்வண்டி நிலையம் சன்சைன்.

அங்குதான் இறங்கவேண்டும்"

"அப்படியா, நன்றி" என்று அவர் சொல்லவும் அடுத்த நிறுத்தம் சன்சைன் என்று அறிவிப்பும் வந்தது.

சிறிது நேரத்தில் சன்சைன் தொடர்வண்டி நிலையத்தில் வண்டி நிற்கவும் உற்சாகமாக எழுந்து வண்டியிலிருந்து இறங்கினார். நானும் அவரைத் தொடர்ந்தேன். மேல்தளத்தில் வெளியேற வேண்டிய இடம் இருந்ததால் லிப்டில் நுழைந்தோம். அவரே லிப்ட் மேலே செல்வதற்காக உள்ள குறியை தனது முழங்கை முடிவிலிருந்த உருண்டையான பகுதியினால் அழுத்தினார். லிப்ட் மேலே சென்று நின்றது.

லிப்டில் இருந்து வெளிவந்ததும் அவர் தன் முழங்கையின் அடிப்பகுதியால் பர்முடாஸில் இருந்த பாக்கெட்டின் அடியில் மேல்நோக்கி ஒரு தட்டு தட்டினார். பாக்கெட்டிலிருந்த கைபேசி மேமே எழும்பிக் குதிக்க மறு முழங்கையால் கீழேவிழாதபடி சரியாகப்பிடித்தார். அந்த போனுடன் இருந்த மைகீ கார்டை ஸ்கேனரில் காட்டி வெளியேறியவர் கீழ் தளத்துக்கு செல்ல திரும்பவும் கீழிறங்க லிப்டுக்கு சென்றார். நானும் உடன் சென்றேன். கீழிறங்கியதும் நன்றி சொல்லிவிட்டு விடைபெற்றார்.

அவர் சென்றதும் எனக்கு மனதுக்குள் வலித்தது. என்னையும் அறியாமல் என் கண்கண்கள் கலங்குவதை உணர்ந்தேன். என்னால் கண்களில் இருந்து கண்ணீர் முத்துக்கள் உதிர்வதை கட்டுப்படுத்த முடியவில்லை. இறைவன் இருக்கிறான் என்கிறார்களே? அவன் எங்கே இருக்கிறான்? இங்கே சிலரைக்கேட்டால் போனபிறவியில் செய்த பாவம் என்பார்கள். அவனோ அந்த இறைவனையே மன்னித்தவனாக இயல்பாக நடந்ததை கடந்து செல்கிறான். தூரத்தில் நடந்து சென்று கொண்டிருக்கும் அவன் என் கண்முன் இறைவனாக சென்று கொண்டிருக்கிறான்.

வானம்பாடி.

பிரியும் தருணங்களிலும்.....

இதோ
நம் நட்புக்கு விடுதலையளிக்கிறேன்
இனியும் நமக்குள்
கடக்கமுடியாத சாட்சியங்களாய்
சில நினைவுகள்
இருக்கத்தான் செய்யும்
இருந்தாலும்
அவற்றையும் கண்ணீரில் கரைத்து
புதைத்துவிடவே முயற்சிக்கிறேன்,
முடியாத போது சப்தங்களின்றி நெருக்கிக்
கொள்ளும்
இதயம் உனக்காக
அடிக்கடி தற்கொலைகள்
செய்து கொள்ளட்டும்!
அப்போதும்
பிணைப்பை முறித்துக் கொண்ட மகிழ்வில் நீ,
கிடைத்த சுதந்திரத்தை
கொண்டாடி மகிழேன்!
முள்வெளியொன்றில்
அடைந்து கிடப்பது
பூக்காடொன்றிற்கு
பெரும் நோக்காடுகள் தான்
அதற்காக வேனும்
உதறி விடுவிக்கிறேன்
உன்னை,
பிரியும் தருணங்களும்
நமக்குள்ளிருக்கும்
வெறுமையை நிவர்த்தி செய்ய
பரிமாறட்டும்
வருத்தங்களில்லா
மென் மொட்டுக்களின்
சிரிப்பொலி கொண்டு..

சாய் மீரா....

கத்தி வீச்சு....

பெரியதும் சிறியதுமான
பிடிவாதக்கத்திகளை
தூக்கிவைத்திருக்கிறோம்...
சீனத்திரைப்பட
முழு வேகக்காட்சியமைப்பாய்
நிஞ்சா கத்திகள்
சுழற்றி வீசுவதாக
சொற்களை கழற்றியெறிகிற
போது....
கண்ணை உறுத்தும்
முற்றாக கண்ணீர்.....!
பேரண்டப் பெருவெடிப்பாய்
வந்து விழுகிற
சொற்களோடு மனமும்
வெடித்துச் சிதறிய
போது....!
நீயொரு மூளையிலும்
நானொரு மூளையிலும்
இதயங்கள் மட்டும்
மூளையை வாய்மூடும்படி
வாஞ்சையோடு கெஞ்சுவதாக....!
சரி.... யுத்தம் முடித்தபின்
கால்கழுவி கைதுடைத்து
போகலாம் தான்....
கட்டிலில் கிடத்தியிருக்கிற
கைக்குழந்தைக்கு
யார் பதில் சொல்ல....
விழித்தபடி நிற்கிறது
அதனருகே நாய்க்குட்டி....!



கவிஞர் புல்லாங்குழலன்

கொரோனாவும் தடுப்பூசியும்

நீக்கமற உலகெங்கும் நிறைந்த கொரோனா
தேக்கமானது மக்களின் அசைவுகள் முரணா
ஆக்கமான வாழ்வியல் நடப்புகள் வீணா
ஊக்கமடைய தடுப்பு மருந்துகள் தானா
ஏழை பாழை என்றெல்லாம் கனிவில்லை
ஊழையும் மாற்றும் வல்லமையில் நிகரில்லை
கூழைக் குடிப்பவரையும் விட்ட பாடில்லை
வாழையடி வாழை மனிதரையும் விட்டதில்லை
உலகை ஆளும் எண்ணத்தில் இறங்கியே
கலகம் புரியும் நாரதராய் சுற்றுகிறாயே
இலக்கின்றி எட்டும் மனிதரை பிடிக்கிறாயே
விலக்கின்றி எங்கும் இறங்கி விளையாடினாயே
உயிர்க்கொல்லியாய் உலகு வலம் வரலாமோ
துயிலின்றி துடிக்கத் துடிக்கக் கொல்லலாமோ
வெயிலில் வாடும் எலும்பில்லா பிராணிகளோ
பயிலும் வில்லங்க அரக்கியாக ஆகலாமோ
முகமுடி மனிதர்களாய் வலம் வருகிறோமே
அகமெங்கும் அச்ச ரேகைகளை விதைத்தாயே
சுகமான உலகியலை மறந்து உறைகிறோமே
நிகரான எதிரியில்லை எனத் திரிகிறாயே
உன்னையும் வீழ்த்தும் ஆற்றல் உண்டிங்கே
மின்னும் ஆராய்ச்சிகளில் வெற்றி கண்டிங்கே
வென்றிடும் முனைப்பில் தடுப்பூசி இங்கே
நின்று தடுக்கும் கேடயமாய் முளைத்ததிங்கே
சர்வாதிகாரி வாழ்வில் சுக இன்பமிருக்கும்
பொற்பனையாய் வாழ்வு வளம் இருக்கும்
கற்பனையை வேரறுக்க தடுப்பூசி நிற்கும்
அற்பனைப் போல் அழிவும் அடுத்திருக்கும்
தடுப்பூசி துடுப்பாக பயணம் மாறியதே
விடுப்பு எடுத்து கொரோனா ஓடியதே
இடுப்பு ஒடிக்கும் தடுப்பூசியால் திணறியதே
மிடுக்கான நிலை மாறி நடுக்கத்திலானதே
கோவாக்சின் கோவிட்சீல்டு என இரண்டு
மோவாயை அமுக்கும் தடுப்பூசிகள் திரண்டு
நோவா அதெங்கே போனதின்று அரண்டு
போவோம் என கொரோனா வறண்டு
ஒன்று இரண்டென இரண்டு முறையாக
சென்று தடுப்பூசிகள் மக்கள் இட்டனரே
நின்று மிரண்டு போனது கொரோனாவே
வென்று நின்றது வெற்றிமிகு தடுப்பூசிகளே
சொல்லாமல் கொள்ளாமல் ஓடத் தொடங்கியது
கொல்லாமல் கொன்ற கொரோனா பயந்து
நில்லாமல் ஓட அழுத்தமிகு தடுப்பூசியுண்டு
பொல்லாத கொரோனா போனதெங்கே இன்று

கவிஞர் கோ.டோன்குமார்

சாதிகள் மலை ஏறிடும்
வீதிகள் விதி மாறிடும்
புயல் காற்றை பூ எதிர்க்குமே....!!
நட்பில் காதல் புதிதில்லை
சாதிச்சண்டை முடிவில்லை
சேரி ஊரும் சேர
தேசம் நன்மை காண
காதல் ஜோடி தீபம்....!!
வெண்ணிலா ஊரிலே
சாதிச் சங்கம் உண்டோ
ஏதுமில்லா தேசமே
வாழும் அன்பில் நாளுமே.....!!
நிலவுக்குப் படையெடு
நிம்மதிப் பூக்கள் பயிரிடு.....!!
பூ மரம் தோட்டம்
வலம் வரும் காற்றும்
புதுமொழி பேசும்.....!!
புரியாது வாழும் மனிதரில்
சமத்துவம் பிறக்கும்.....!!
இரத்தம் ஒன்று
சுவாசம் ஒன்று
தேகம் ஒன்றல்லவோ
தேய்ந்த நிலா குறையில்லை
மனிதா
உண்மை உனக்கு
புரியவில்லை......!!

ச. இராஜ்குமார், திருப்பத்தூர் மாவட்டம்

ஹைக்கூ

வேகத்தடையில் குலுங்கும் தண்ணீர் லாரி /
இறைத்துவிட்டுச் செல்கிறது
மழை ஞாபகத்தை......!

❦

வைரமாய் ஜொலிக்கிறது
இரவு பனித்துளியில் நனைந்த
தும்பியின் இறக்கைகள்.

❦

சுழலும் மின்விசிறி
கொஞ்சம் கொஞ்சமாக குறைகிறது
தேனீர்க் கோப்பையின் சூடு...!!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

எழுத்தின் வைத்தியர் - ஆண்டன் செக்கோவ் : சிறுகதை வடிவத்தை உன்னத கலை வடிவமாக்கியவர்! புனைகதை இலக்கிய உலகில் தலை சிறந்தவர்!!

ஆண்டன் செக்கோவ் (Anton Pavlovich Chekhov) புனைகதை இலக்கிய உலகில் தலைசிறந்தவராகக் கருதப்படுகிறார். இலக்கிய உலகில் முதன்முதலில் சிறுகதை வடிவத்தை மிகச்சிறந்த கலைவடிவமாக்கியவர் யாரென்று கேட்டால் தயங்காமல் ஆண்டன் செக்கோவ் என்றே இலக்கிய வரலாற்று ஆய்வாளர் கூறுவர்.

வெறும் தனிமனித வரலாற்று அனுபவங்களாக இருந்த நாவல் வடிவத்தை மனிதநேயமும் கருணையும் தத்துவ விவாதங்களும் கொண்ட பெரும் படைப்புக்களாக ஆக்கியதில் ஆண்டன் செக்கோவின் படைப்பாற்றல் அளவிட முடியாதது.

எழுத்தும் வைத்தியமும் ஆண்டன் செக்கோவின் கற்ற தொழிலாக இருப்பினும், எழுத்திற்காகவே தன் வாழ்வை மெய்ப்பித்தவர். நாடக ஆசிரியராக இருந்து இவர் படைத்த கடற்புறா, அங்கிள் வான்யா, மூன்று சகோதரிகள், செர்ரிப் பழத்தோட்டம் ஆகிய நான்கு செவ்வியல் நாடகங்கள் மற்றும் இவரது சிறந்த சிறுகதைகளும் ஏனைய எழுத்தாளர்கள் மற்றும் விமர்சகர்களிடம் இவருக்குத் தனி மரியாதையை ஏற்படுத்தின.

நவீனச் சிறுகதைக்கான பாதையை உருவாக்கித்தந்தவரும் ஆண்டன் செக்கோவே. நூற்றாண்டுகள் கடந்தும் கதை வடிவம், மொழிநேர்த்தி, சித்தரிப்பு, நுட்பம் என சிறுகதையின் ஒவ்வொரு இலக்கணத்திலும் செகாவின் அழுத்தமான முத்திரை இன்றும் மெருகிழக்காமல் இருப்பதே அவரது மேதமைக்குச் சான்று. தமிழில் இதுவரை வெளிவராத இக்கதைககள் செகாவின் புனைவுலகின் மேலும் சில ஆழங்களைத் துலக்கிக் காட்ட வல்லவை.

உலக அளவில் புகழ்பெற்ற ரஷ்ய எழுத்தாளர்களின் பட்டியலில் லியோ தோல்ஸ்தோய்க்கும், தஸ்தாயேவ்ஸ்கிக்கும் அடுத்திருப்பவர் ஆண்டன் செக்கோவ். முந்தைய இருவரும் நாவல்களில் செய்திருக்கும் சாதனைக்கு நிகராக செக்கோவ் சிறுகதைகளில் நிகழ்த்தியிருக்கிறார்.

பாரதிக்கு முன்னோடியான ஆண்டன் செக்கோவ் :

தமிழின் முதல் சிறுகதை 'ஆறில் ஒரு பங்கு' சுப்ரமணிய பாரதியாரால் 1913ம் ஆண்டு எழுதப்பட்டது. ரஸ்ய எழுத்தாளரான ஆண்டன் செக்கோவ் மறைந்து ஒன்பது ஆண்டுகள் கழித்தே தமிழில் தமிழ்ச் சிறுகதை பிறந்துள்ளது.

தமிழின் முன்னோடி எழுத்தாளர்களில் தொடங்கி இன்றைய தலைமுறை எழுத்தாளர்கள் வரைக்கும் அவரது கதைகளை முன்பு மொழி பெயர்த்திருக்கிறார்கள். ஏன், இன்றும் மொழிபெயர்த்துக் கொண்டிருக்கின்றார்கள். இவர் புனைகதை இலக்கிய உலகில் தலைசிறந்தவராகக் கருதப்படுகிறார்.

மருத்துவ கல்வி பயின்ற செக்கோவ் :

ஜனவரி 29, 1860ல் ரஷ்யாவிலுள்ள அஸோவ் கடற்கரையோர தகரோங் எனும் இடத்தில் (Taganrog) பிறந்த ஆண்டன் பாவ்லோவிச் செக்கோவ், மூன்று சகோதரர்களையும் ஒரு சகோதரியும் கொண்ட பெரிய குடும்பம். அவருடைய பெற்றோர்கள் எளிமையானவர்கள், அவ்வளவாய் படிப்பறிவு கிடையாது.

பாடசாலைக் கல்வியை 1879ல் முடித்ததும் மாஸ்கோவில் மருத்துவம் பயிலத் தொடங்கினார்.

குடும்பத்துக்கு உதவவும் தன் கல்விச் செலவுக்காகவும் பிரபல பத்திரிகைகளில் நகைச்சுவைத் துணுக்குகளையும் சிறிய கதைகளையும் புனைப்பெயர்களில் எழுதத் தொடங்கினார் செக்கோவ்.

1884ம் ஆண்டு மருத்துவக் கல்வியை முடித்த அவர், இறுதிவரை தொழில்முறை மருத்துவராகப் பணியாற்றவில்லை. ஆனால், தான் கற்ற மருத்துவத்தின்மேல் பெரும் மரியாதை கொண்டிருந்தார். பிற அறிவுத்துறைகளைக் கற்பதற்கும் அறிவியல்பூர்வமான தன் அணுகுமுறைக்கும் மருத்துவக் கல்வியே காரணம் என்பதில் நம்பிக்கை கொண்டிருந்தார்.

மெலிகோவாவில் இருந்த நாட்களில் எண்ணற்ற மருத்துவ முகாம்களை ஒருங்கிணைத்து விவசாயிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இலவச மருத்துவம் செகாவ் அளித்தார்.

நவீனத்துவத்தை நாடகங்களில் தொடங்கி வைத்ததில் செக்கோவ் முக்கியமானவராக குறிப்பிடப்படுகின்றார். அதேவேளை செக்கோவ் தனது இலக்கியப் பயணத்தினுடன் கூடவே, மருத்துவர் பணியையும் செவ்வனே மேற்கொண்டு வந்தார். "மருத்துவம் என் சட்டப்பூர்வமான மனைவி" என்றும், இலக்கியம் எனது துணைவி என்றும் கூறியுள்ளார்.

நாடக ஆசிரியராக இருந்து இவர் படைத்த கடற்புறா, அங்கிள் வான்யா, மூன்று சகோதரிகள், செரிப் பழத்தோட்டம் ஆகிய பிரமிக்கத்தக்க செவ்வியல் நாடகங்களும், இவரது சிறந்த சிறுகதைகளும் இவரைப் பூமியில் என்றும் நிலைத்திருக்க வைப்பவை.

ஆரம்பகால எழுத்தும் முதல் சிறுகதை தொகுப்பும் :

ஆண்டன் செக்கோவ் தனது ஆரம்பகாலத்தில் கல்விக்காகவும் அன்றாடத் தேவைகளுக்காகவும் பிரபல பத்திரிகைகளில் சுவாரஸ்யமான வாழ்வியல் சம்பவங்கள், விநோதமான மனிதர்கள் என்பதுபோல நிறைய எழுதினார்.

1880 முதல் 1887 வரையிலான இந்த முதல் காலகட்டத்தில் எழுதப்பட்டவை அத்தனை முக்கியமற்றவை. அவற்றில் பெரும்பாலானவை நகைச்சுவை உணர்வு ததும்புபவை.

ஆயினும் அவற்றில் சுருக்கமான தொடக்கம், நுட்பமான விவரணைகளின் வழியாக கதாபாத்திரத்தைச் செறிவுடன் வார்ப்பது, மனமோதல்கள், எதிர்பாராத முடிவு போன்ற செகாவின் தனித்துவமான அடையாளங்கள் பலவும் இடம்பெற்றிருந்தன.

1884ம் ஆண்டு வெளியான செக்கோவின் முதல் சிறுகதைத் தொகுப்பான "Tales of Melpomene"வில் இடம்பெற்றிருந்த கதைகள் பலவற்றிலும் இத்தன்மைகளைக் காணலாம்.

'குறும்புக்காரச் சிறுவன்', 'ஒரு எழுத்தரின்

மரணம்’, ‘மெலிந்தவனும் பருத்தவனும்’, ‘பச்சோந்தி’, ‘வேட்டைக்காரன்’ ஆகியவை இந்தக் காலகட்டத்தில் எழுதப்பட்டவை. 235 கதைகள் இந்தச் சமயத்தில் எழுதப்பட்டவை என்று கூறப்படுகிறது.

வாழ்வின் அழகியல் உணர்வின் வெளிப்பாடு:

1888 முதல் 1893 வரையிலான காலகட்டத்தில் ஒழுக்கம், தீமையை எதிர்ப்பது, நற்பண்புகள் ஆகியவற்றை முன்வைத்த தல்ஸ்தோயின் ஒழுக்கம் சார்ந்த கொள்கையினால் பெரிதும் ஆட்கொள்ளப்பட்டிருந்தார் செக்கோவ்.

வெறுப்பு, அற்பத்தனம், மரணம் ஆகியவற்றுக்கு மாறான வாழ்வின் அழகையும் உணர்வு நிலையையும் அணுகிப் பார்க்கும் விதத்தில் கதைகளை எழுதிப் பார்த்தார்.

1890ம் ஆண்டு கிழக்கு சைபீரியாவில் சகலின் என்ற இடத்திலிருந்த வதைமுகாமைச் சென்று பார்த்த பின்பு மனித வாழ்வின் துயரங்களை கண்டு

அவருக்குள் பாரிய உளமாற்றம் நிகழ்ந்தது. இதன்பின் ‘ஸ்டெப்பி’, ‘பந்தயம்’, ‘முதியவனின் நாட்குறிப்பிலிருந்து’ ‘குடியானவப் பெண்கள்’, ‘மனைவி’, ‘அண்டைவீட்டார்’, ‘ஆறாவது வார்டு’ ஆகிய படைப்புக்கள் இக் காலகட்டத்தில் எழுதப்பட்டவை ஆகும்.

1894ம் ஆண்டிலிருந்து அவரது இறுதிப் பருவத்தில்தான் மிகவும் சிக்கலான தனித்துவம்கொண்ட சிறுகதைகளையும் நாடகங்களையும் அவர் எழுதினார். ‘கருந்துறவி’, ‘ரோத்சிடின் பிடில்’, ‘கழுத்தில் அன்னா’, ‘மாடவீடு’, ‘நெல்லிக்கனிகள்’, ‘நாய்க்காரச் சீமாட்டி’, ‘பேராயர்’, ‘மணமகள்’ ஆகியவை இந்தக் காலத்தில் எழுதப்பட்ட படைப்புக்களாகும்.

44 வது வயதில் வரலாறு படைத்தவர் :

மிக இளமையாக நாற்பத்தி நான்கு ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்த ஆண்டன் செக்கோவ் 568 கதைகள் எழுதியுள்ளார். இவை பதிமூன்று தொகுதிகளாக வெளிவந்துள்ளன. இவை தவிர அவருடைய கடிதங்களும் நாட்குறிப்புகளும் தனியாகத் தொகுக்கப்பட்டு பல மொழிகளிலும் வெளியாகி உள்ளன.

மரணத்தின் பின்னரும் வரலாற்றைப் படைத்த ஆண்டன் செக்கோவ் 1904 ஜுலை 15இல் ஜெர்மனியிலுள்ள பாதன்வெயிலரில் ஓய்வெடுக்கப் போன ஓர் அதிகாலை நேரத்தில் தன் 44 வது வயதில் இயற்கையுடன் தன் மூச்சுக்காற்றை இறுதியாக இணைத்துக் கொண்டார்.

சந்திரா மனோகரன்

கனவுகளின் துர்க்கம்

நான் கனவுகள் சேகரிப்பவன்
ஆனால் விற்பனைக்கல்ல
விதைகளைப்போல் தூவுவதற்கும்
இல்லை
துயிலிடத்தில் அவளைச் சந்தித்து
சொப்பன மழை பொழியப்
போகிறேன்!
இடம் பெயர்ந்து... உடலசைந்து
மடியில் சென்று விழும் கனவுகள்...
அறியாதவள் ஆசைப்பட்டு விட்டாள்
வெறும் சொற்கள்
குன்றக்கூறல்
இருக்கட்டுமே...
பிரக்ஞையற்ற கனவுகள் கூட
அவளுக்குள் ஓர் உயிர்ப்பு நிலை தரும்
கனா ஒரு மிதவை!
அதனைக் கவ்விக்கொண்டே பயணித்து
தொலைந்துபோய்...மீண்டும்
இருவரையும் அலங்கரித்து
குறுநகைக்கச்செய்யும் மந்திரம்!
வண்ணப் பூச்சுப் பெற்று...
கொட்டும் மழையில்
கரைந்தோடும் கருமை!
வெளுத்துப்போன நரைமுடியில்
அவைகளும் விருத்தாப்பியங்கடந்து
மதிப்பும் மரியாதையும் அடையும்
அப்புறம்.. அப்புறம்
சகசோதியாய் மனதை நிரப்பிய
கனவுகளுள்
நான் துலைந்து துர்க்கமாய்
உருவெடுப்பேன்.

பிரேமா இரவிச்சந்திரன் சென்னை.

நூல் அறிமுகம் : மணிமேகலை நாவல்

காவியங்கள் காலத்தின் படிமங்களென அமைந்திருக்க, கடந்த காலத்தில் சீத்தலைச் சாத்தனார் எழுதிய மாதவியின் மகள் மணிமேகலையின் கதையை, நிகழ்காலத்தில் வாசிக்கும் வண்ணம் எழுத்தாளர் சத்யப்பிரியன் அவர்களால் எளிமைப்படுத்தி எழுதப்பட்ட நாவலே மணிமேகலை. தமிழ் தாத்தா உ.வே.சா அவர்களால் கண்டடையப்பட்டு உயிர்பிக்கப்பட்ட மூல நூலுக்கு உரை எழுதியவரும் அவரே என்றிருக்க, தமிழை முதன்மைப் பாடமாக கொண்ட ஆர்வம் உள்ளவர்கள் மட்டுமல்லாமல் அனைவரும் வாசித்து உள்வாங்கும் வண்ணம் நாவல் வடிவம் கொண்ட மணிமேகலை எனும் இந்த நூலானது தனித் தன்மையை பெற்றிருக்கிறது.

காவிரியின் கரையில் தோன்றிய கலைகளில் ஒன்றாக இக்காப்பியம் இருக்கும் பொழுது, கணிகையர் குலத்தில் பிறந்து கற்பு நெறியோடும் அற நெறியோடும் வாழ முயலும் மணிமேகலைக்கு புத்த மதமானது அவள் பற்றிக்கொள்ள துடுப்பாக இருந்திருக்கிறது. காவிரியின் வளத்தால் அதன் கரைகளில் விளைந்திருக்கும் மூலிகைகளின் மருத்துவப் பண்புகளை ஆராய்ந்து அதன் பலன்களை மக்களுக்கு அளித்த ஆராய்ச்சியாளராக அகத்திய மாமுனிவர் விளங்கிய பொழுது, புராணங்களில் குறிப்பிட்டவையாக, அவர் குடகில் பிறந்த காவிரியை



தன் தவ வலிமையால் தென் தமிழகத்திற்குத் திருப்பி விட்டவர் என்ற கதைகளெல்லாம் அம்மாமுனிவருக்கு அளித்த நன்றியாகவே பார்க்க முடிகிறது.

கதையின் படி, வானம் பொய்த்து நாட்டில் பஞ்சம் ஏற்படும் பொழுது, அதனைத் தீர்க்கும் விதமாக மணிமேகலையின் கையில் ஏந்திய அட்சயப் பாத்திரமானது, அள்ள அள்ளக் குறையாத உணவினைக் கொடுத்து உதவி வருகிறது. வானில் பறக்கும் வல்லமை பெற்றவளாகவும் மணிமேகலை திகழ்கிறாள். தீர்க்க முடியாத துன்பங்களுக்கு விடிவாக, மாயக் கதைகள் போல் தோற்றமளிக்கின்ற கற்பனைகள் மிகுந்த காவியமாக இந்த நூல் அமைந்திருக்கிறது. புத்தர் பிறப்பதற்கு முன்பே அவருக்காக எழுப்பப்பட்ட பத்மபீடமானது முற்பிறவிகளையும் அடுத்த பிறவிகளையும் அறிவிக்கும் வல்லமை பெற்றதாக கற்பனையில் கொண்டு கதைகளை வடித்திருக்கிறார். அவ்வப்போது தோன்றுகின்ற தெய்வங்கள் பெரும்பாலும் பெண் தெய்வங்களாகவே இருக்கின்றன. தான் பிறந்த குலத்தின் வாழ்க்கையை தொடர்ந்து வாழ விருப்பம் கொள்ளாமல் அற நெறிகளைப் போற்றி வாழ எண்ணம் கொண்டவளுக்கு தன்னை காத்துக் கொள்ளும் கருவியாக புத்த மதத்தின் போர்வை தேவைப்பட்டிருக்கிறது. தான் விரும்பிய வாழ்க்கையை போராடிப் பெற்ற பெண்ணின் வாழ்க்கையாகவே மணிமேகலையின் சரித்திரத்தைக் காண முடிகிறது.

ஊர் மக்களை ஒருங்கிணைக்கும் விழாக்களை ஒற்றுமையோடு கொண்டாடுவதற்கு, அரண்மனையிலிருந்து வந்த செய்தியாக முரசறிவிப்பவன் கூறும் முன்னறிவிப்புகள், அசம்பாவிதம் ஏதும் நடந்து விடாமல் இருக்க வேண்டுமென்கிற பய உணர்வே விழாக்களில் மக்கள் கூடுவதற்கு காரணமாகி இந்திர விழா சிறப்பாக கொண்டாடப்படுகிறதென்று நேரடியாக இந்த நூலில் சொல்லப்படாத செய்திகளின் மூலம், ஆட்சியின் சூழ்ச்சிகளையும் நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.

ஒன்று கூடிய மக்களால் ஆற்றோரங்களில் விளைந்த நாகரீகமாகவும் வளர்ந்த கலைகளாகவும் விழாவின்போது இடம்பெற்ற ஆடல் பாடல் நிகழ்ச்சிகளும் யாழிசை கூத்துகளும் இடம்பெற்று பறைசாற்றுகின்றன.

வீசும் காற்றினாலோ ஓடும் நீரினாலோ இடம்பெயர்கின்ற மணலினால் நகரங்கள் புதையுண்டு போவதும், கடல்கோள் கொள்வதால் நீரில் மூழ்கிப் போவதும், இயற்கையில் அவ்வப்போது இடைவெளியில் நிகழ்ந்து கொண்டே தான் இருக்கின்றன என்பதையும் காவியங்கள் பதிவில் கொண்டிருக்கின்றன. மணிமேகலையில் இடம் பெற்றிருக்கும் கடல்கோள் கொண்ட பூம்புகாரும், பேரியாறு என்று அறியப்பட்ட நகரம் பெரியாற்றின் கரையில் அமையப்பெற்று, பிறகு காலப்போக்கில் அந்த ஆறு கொண்டு வந்து கொட்டிய மணலினால் மூழ்கிய அந்நகரைக் குறித்தும் அதன் நடுவே கட்டப்பட்டிருந்த புத்த விகாரம் குறித்தும் தகவல்கள் இந்த நூலில் இடம் பெற்றிருக்கின்றன.

உலக வரைபடத்தில் புவியின் அமைப்பானது தன்னை அவ்வப்போது தகவமைத்துக் கொண்டே இருக்கிறது. இரண்டு புள்ளிகளுக்கு இடைப்பட்ட குறுகிய கால இடைவெளியில் வாழும் மனிதன் அவற்றை முழுமையாகக் கண்டு, அறிந்து விட முடிவதில்லை. வாழ்கின்ற மக்கள் அவரவரது காலத்தில் பதிய வைத்துவிட்டுச் செல்கின்ற படிமங்களே, மாற்றங்களை புவியியல் பரப்பு நிகழ்த்திக் கொண்டிருப்பதை சாட்சியாக தன்னுள் பதிய வைத்திருக்கிறது.

காவிரியின் போக்கில் அதன் பயணத்தில் உடன் பயணித்து நூறாண்டுகளுக்கு முந்தைய காவேரியின் வரலாற்றையும் உள்ளடக்கிய ஜானகிராமன் சிட்டி அவர்களால் எழுதப்பட்ட, "நடந்தாய்; வாழி, காவேரி!" நூலில் இடம் பெற்ற கர்நாடக மாநிலத்தில் மணற் குவியல்களால் மூடப்பட்ட கோவில் ஸ்தலங்களையும் இவ்விடத்தில் குறிப்பிடத் தோன்றுகிறது. இதே நூலில் சேர நாட்டின் தலைநகரான வஞ்சி என்று அழைக்கப்பட்ட மாநகரானது தற்போது கேரள மாநிலத்தின் பெரியாற்றின் கரையோரம் உள்ள கரூர் பட்டிணம் என்பதற்கு ஆதாரங்கள் இல்லை என்றும், தமிழகத்தில் காவிரி ஆற்றின் கரையோரமுள்ள கரூரே, அக்காலங்களில் தலைநகராகத் திகழ்ந்து வந்திருக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டு, இதற்கு சாட்சியாக கிரேக்க வரலாறுகளும் கி.பி மூன்றாம் நூற்றாண்டின் கல்வெட்டுகளும் இருக்கின்றன என்று சுட்டிக் காட்டுகிறார். அகழ்வாராய்ச்சியின் மூலம் தொன்மையான பொருள்கள் கிட்டினால் இதனை உறுதிப்படுத்தலாமென்றும் எழுதியிருக்கிறார். இதனை நிரூபிக்கும் வண்ணமாக பிற்காலங்களில் 1973ஆம் ஆண்டுகளில் கரூர் பகுதியில் நிகழ்த்திய அகழ்வாராய்ச்சியானது ரோமானியக் காசுகளையும் கடல்கடந்த கலைப் பொருட்களையும் நமக்கு அளித்து, மேற்கு கடற்கரையிலிருந்து கிழக்கு கடற்கரை சாலையோடு தொடர்பு கொண்ட கரூரானது தலைநகராகத் திகழ்ந்து வாணிபத்தில் சிறந்து விளங்கியதற்கு சாட்சியாக தற்பொழுது இருக்கிறது. தோண்டி எடுக்கப்பட்ட பொருள்களை பாதுகாப்பாக வைப்பதற்கு சேரர் அகழ் வைப்பகமும் கரூரிலேயே அமைக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறாக வரலாற்று நகர்வுகள் இருக்கின்றன.

சீத்தலைச் சாத்தனார் எழுதிய மணிமேகலை காவியத்தில் வஞ்சி மாநகரம் என்று அக்காலத்தில் அழைக்கப்பட்ட சேர நாட்டின் நகரானது, தற்போதுள்ள கேரளா மாநிலத்தின் பெரியாற்றின் கரையோரம் இருக்கும் கரூர் பட்டணம் என்று 2022 ஆம் ஆண்டில் எழுதப்பட்டிருக்கிற இந்நாவலின் ஆசிரியர் சத்தியப் பிரியன் அவர்கள் குறிப்பிட்டிருப்பது, நிரூபிக்கப்பட்ட கருத்திற்கு முரணாகத் தோன்றுகிறது.

தேசிய கவி சுப்பிரமணிய பாரதியார் தனது பாடலில், இந்தியத் தாயானவள் தான் செப்பும்மொழிகளை பதினெட்டுடையவள் என்பதை தேசத்தின் பெருமையாக குறிப்பிட்டிருக்கும் பொழுது, மணிமேகலையின் காப்பியத்தில், காஞ்சி மாநகரானது பல்கலைக்கழகங்களை தன்னுள் கொண்டு, கல்வியில் சிறந்து விளங்கி, அங்கு பதினெட்டு மொழிகளை பேசும் மக்கள் வாழ்ந்திருந்தார்கள் என்பதையும் இந்த நூல் பதிவில் கொண்டிருக்கிறது. காவிரி ஆற்றின் செழிப்பால் அதன் கரையோரம் அமைந்திருந்த மாநகரத்தின் மீதான வர்ணனையில் அந்நாட்டில் சிறப்புற்றிருந்த வாணிபமும், சிதறிய முத்துக்களை கோர்க்கும் செழிப்பும், கண்ணிற்கே புலப்படாத மெல்லிய துணிகளும், மரத்தாலான தெய்வமும், புழக்கத்திலிருந்த செறிவான சொற்களும், எந்திரங்களின் உதவியால் நீர் இறைக்கப்படும் கேணியும், மலர்ந்த மலர்களும், வாழ்ந்த விலங்குகளும், காவிரியின் ஆற்றங்கரை நாகரீகத்தையும் நமக்கு அறிவித்துவிடுகின்றன.

சீத்தலை சாத்தனார் இயற்றிய மணிமேகலையின் 30 காதைகளையும் தமக்கே உரிய தொனியில் கதைகளாக விளக்கமளித்து ஒவ்வொன்றிற்கும் இறுதியில் பின் குறிப்புக்களைக் கொடுத்தும் வாசிக்க விருப்பமிருக்கும் மக்களிடம் மணிமேகலையை எளிமையாகக் கொண்டு செல்லும் செறிவு மிக்க சொற்களாலான நூலின் நாவல் வடிவம் சிறப்பு. பாதுகாக்கப்பட வேண்டிய ஆய்வு நூல். ஆசிரியருக்கு நன்றி.

நூல் : மணிமேகலை

ஆசிரியர்: சத்தியப் பிரியன் வடிவம். : நாவல்

பதிப்பகம்: சுவாசம்

விலை. : ₹ 260

பக்கங்கள்: 239

பொலிகை ஜெயா.(சுவிஸ்)

வம்சக்கொடி

ஈனும்வரை சுமந்தாள்- அன்னை
காற்றில் மிதந்த மகரந்தமணிபோல்
காலம் வரும்வரை காத்திருந்தோம்`
இளவேனில் காலத்தில் வந்துதித்தாய்
இன்பமும், மகிழ்வும் சிறகடித்து
பனைபோல் உயர்ந்து நிற்க ...
உன் வரவைக்கண்டு-கிழக்கில்
உதித்தான் உதய சூரியன்...
பூமித்தாய் பூரித்தாள்
பூக்களும் செடிகளில் பூத்தன...
குயில் இசையமைக்க
மயில் தோகை விரித்து ஆடின...
தென்றலின் தாலாட்டில்
ஊசியிலை மரங்கள்-உனக்கு
சந்தோச சாமரை வீசின...
கார்மேகம் உனைப்பார்க்க
வானத்திலிருந்து மழையாக
பூமிநோக்கி பயணித்தாள்...
ஆண்டவன் அற்புதப்படைப்பில்
அசைக்க முடியா அதிசயம் - நீ...
உறவென ஆயிரம் இருந்தும்,
உன் வரவே எம்மிதயத்தில்
இன்பமாய் பூத்துக் குலுங்குகிறது...
உன் மழலை முகம் கண்டு
எம் மனக்கவலையெல்லாம்
காற்றிலே கரைந்து போனது...
உன் கண்ணசைவைக் கண்டு
உலக அதிசயங்கள் வியந்து நிற்கிறது...
உன் முதல் அழுகுரல் கேட்டு
குடும்பமே வானத்தின் எல்லைவரை
சென்றது - மகிழ்ச்சிக் கடலில்...
உன் செவ்விதழ் சிரிப்பழகில்
றோஜா மலரே பொறாமை கொள்ளுதடி...
அதிகாலை பூக்களின் சிரிப்பை
விஞ்சி நிற்கிறது- உன் மழலைச்சிரிப்பு...

எம்கையில் கிடைத்த பொக்கிசமே`
கோடைகால குளிர்த் தென்றலே
என்றும் எமக்கு நீ – வசந்தமே..!
பல குடைகளாலும் மழையை
நிறுத்த முடியாது- உன் குரல்கேட்டு
மழைகூட நின்று போனது...
நீ சுட்டும் பிஞ்சு விரல் - இனி
உங்களுக்கு எல்லாமே நானென
உரைக்கிறது கட்டியம் கூறி...
உன்னுடன் இருக்கும் ஒவ்வொரு
நொடியும் எம்வாழ்வில்`
பொன்னான கணங்களே...
வானத்து நட்சத்திரங்களை
கோர்வையாக்கி ★அம்மா அப்பா★
தொட்டில் கட்டி களிப்புற்றனர்...
அருமை மாமா "மைலா"வுக்கு
புன்னகையுடன் பொன்னகை
போட்டு பூரித்தான்...
சித்தியோ-"மைலாக்குட்டி..
மைலாக்குட்டி"என விழித்து
முத்தமழை பொழிகிறாள்...
"குட்டி அம்மா.. குட்டி அம்மா" என
உன் "பாட்டி" குரல் கொடுத்து கூவுகிறாள்...
தமிழும் அழகு - நீயும் அழகு
மொழிகளெல்லாம் தோற்று
நிற்கும் - உன் மழலை மொழியில்...
உன்னழகை கூட கவிதையானது`
உனதன்புத் ★தாத்தாவிற்கு★...
நான் எழுதும் கவிதைகளில்`
நான் கண்ட மிகச்சிறந்த
நாலெழுத்து - ★பேர்த்தி★

மைத்திரி அன்பு, காஞ்சிபுரம்.

புதுக்கவிதை உருவாக்க மரபும் சிறுபத்திரிகை அரசியலும்

சிறுபத்திரிகை – புதுக்கவிதை இரண்டுக்குமான அரசியல் காலகட்டமாக 1960 முதல் 1980 வரையிலான காலகட்டம். இக்காலச் சூழலில் எழுத்து மரபை அடிப்படையாகக் கொண்டு கசடதபற, பிரக்ஞை, ழ, கவனம் போன்ற பத்திரிகைகள் தோன்றின. நவீன கவிதைகளை உருவாக்க இச்சிறுபத்திரிகைகள் தொடர்ந்து போராடியுள்ளன. மேலும் இலத்தின் அமெரிக்க இலக்கியத்தின் தாக்கத்தாலும், ஆப்பிரிக்க இலக்கியத்தின் தாக்கத்தாலும் புதிய கவிதை முயற்சிகள் இக்காலச் சூழலில் முன்னெடுக்கப்பட்டன. இச்சூழலில்தான் சிறுபத்திரிகைக்கான அரசியலும், புதுக்கவிதை உருவாக்க மரபும் தொடர்புகொள்கிறது. பொதுவாக தமிழிலக்கிய உருவாக்க மரபு, காலந்தோறும் எம்மாதிரியான தத்துவார்த்த, அறம் சார்ந்த அணுகு முறைகளையும், வடிவங்களையும் ஏற்றுவந்தன என்பதை நாம், நிலப் பாகுபாட்டின் கீழான வாழ்வியல், அகம்-புறம், அறத்தோடான கற்பு, புனைகதைகளாலான காப்பிய இலக்கியங்கள், பக்தி நெறிப்பாடல்கள், இலக்கண வடிவங்களான பல்வேறு பாவகைகள், வசனம், ஹ-கூ உள்ளிட்ட பல்வேறு உரைநடை தொடர்பான கவிதைப் போக்குகள் மூலம் அறியலாம். அதேபோல் தற்கால புதுக்கவிதைகளுக்கும் சிறுபத்திரிகை கருத்தியல்களுக்கும் இடையிலான அரசியலை, அதன் வரலாற்று போக்குடன் பார்க்கவேண்டிய தேவை ஏற்படுகிறது. அதன்கீழ் எழுத்துக்குப் பிறகான சிறுபத்திரிகைச் சூழல், ஆங்கில இலக்கிய பயிற்சியற்ற, மொழிபெயர்ப்பு இலக்கியங்கள் அல்லாத தாய்மொழி – படைப்புகளுக்கும் படைப்பாளர்களுக்கும் முக்கியத்துவம் தரும் வகையில் அமைந்துள்ளது. இதற்குச் சிறந்த உதாரணமாக இடதுசாரி இயக்கத்தின் தாக்கத்தால் வெளியான தாமரை ஆகும். அதேபோல எழுத்து வெளியிட்ட நவீன அறிமுகங்களை விரிவுபடுத்தும் விதமாக இலக்கியவட்டம், நடை, கசடதபற, ஞானரதம், யாத்ரா, கொல்லிப்பாவை, வைகை, காலச்சுவடு உள்ளிட்ட சிறுபத்திரிகைகள் எழுத்து வெளியிடாத நவீன ஓவியங்கள், கவிதைகள், கருத்தியல்கள் ஆகியவற்றை வெளியிட்டன. இதில் எழுத்துவைக் காட்டிலும் பன்மடங்கு மொழிபெயர்ப்பு இலக்கியத்திற்கு முக்கியத்துவம் தந்த சிறுபத்திரிகையாக இலக்கிய வெளிவட்டம் அமைந்திருக்கிறது. மேலும் இதில்,

“வெளியான மொழியாக்கங்கள் ஒருவித அரசியல் உருவாக்கங்களாக அமைந்திருந்தன. படிகள் தொடங்கி டால்ஸ்டாய், தாகூர், கார்க்கி, மாயாகோவஸ்கி, புஸ்கின் உள்ளிட்ட பலரின் ஆக்கங்கள் மிகுதியாக தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, சிறுபத்திரிகைகளில் வெளிவந்தன. சோசலிச சார்பாளர்கள் மற்றும் கம்யூனிஸ்டுகள் என்று சொல்லிக்கொண்டவர்கள் தங்கள் இதழ்களில் இவ்வகையானப் படைப்புகளை மொழியாக்கம் செய்தனர். க.நா.சு. இலக்கிய வட்டம் வழியாக செய்த மொழியாக்கங்கள் மேற்குறித்த படைப்புகளிலிருந்து அரசியல் ரீதியாக கருத்து வேறுபட்ட படைப்புகளாகவே பெரும் பகுதி இருந்ததைக் காண்கிறோம்,”

(வீ.அரசு., சிறுபத்திரிகை அரசியல்., பரிசல் வெளியீடு., சென்னை., 2006., ப.19)

அதேபோல எழுத்து வெளியான காலக்கட்டத்தில் கணையாழி திராவிட இயக்கத்தை விமர்சனம் செய்யும் பத்திரிகையாகவும்; நா.பார்த்தசாரதியின் தீபம் பல்வேறு படைப்பாளிகளின் நேர்காணல்கள் மற்றும் தொடர்கட்டுரைகள், தொடர் விமர்சனங்கள் ஆகியவற்றை வெளியிடும் பத்திரிகையாகவும்; 1967 இல் வெளியான புதிய தலைமுறை, பரிமாணம், 1983 இல் வெளியான நிகழ், மார்க்சியம், இன்று ஆகிய பத்திரிகைகள் தீவிரமான மார்க்சியத்தை முன்னெடுக்கும் பத்திரிகைகளாகவும் இருந்திருக்கின்றன. இதனடிப்படையில் இருத்தலியம், அந்நியமாதல் போன்ற கருத்துக்கள் செயலூக்கம் பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

சுயமரியாதை இயக்கம் (1925), திராவிட பாரம்பரியம் (1912), தனித்தமிழ் இயக்கம் (1918), திராவிட மாணவர் சங்கம் (1912), தென்னிந்திய நல உரிமைச் சங்கம் (1914), நீதிக்கட்சி (1917), தமிழிசை இயக்கம், இந்தி எதிர்ப்புப் போராட்டம், சைவ எழுச்சியமைப்பு என 1910 க்குப் பிறகு தோன்றிய தேசிய முதன்மையாக்கச் சங்கங்களின் உருவாக்கங்கள் இதற்கெல்லாம் அடித்தளமாக அமைந்திருக்கின்றன. இதன் தாக்கத்தால் சிறுபத்திரிகை மரபு - வைதீகம் மரபு, திராவிட மரபு, இடது சாரிய மரபு என்னும் மும்முறை பண்பாட்டைத் தோற்றுவித்துள்ளது. அதன்கீழ், நவீன புனைகதைகள், நவீனகவிதைகள் முன்னெடுக்கப்பட்டதோடு,

"நவீன சினிமா மற்றும் ஓவியம், ஓவியம் பற்றிய உரையாடல்கள்; தெருக்கூத்து போன்ற பாரம்பரிய நிகழ்கலை வடிவங்களில் நுண்ணிய அரசியல் சார்ந்த உரையாடல்கள்; கர்நாடக இசை மற்றும் பரதநாட்டியம் போன்ற வைதீக கலை வெளிப்பாடுகள் சார்ந்த விமர்சனங்கள்"

(வீ.அரசு., சிறுபத்திரிகை அரசியல்., பரிசல் வெளியீடு., சென்னை., 2006., ப.22)

ஆகிய நவீன, மாற்றுக்கருத்து வடிவங்களும் முன்னெடுக்கப்பட்டன. இதற்குப் பிறகு நவீன அரங்க அமைப்புகள், சுத்த இலக்கியம், சுத்த கலைநிகழ்வுகள் ஆகியன உருவாயின. இதில் யாத்ரா, வைகை போன்ற சிறுபத்திரிகைகளின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

புதுக்கவிதை மரபில் உருவான தத்துவார்த்தம்

கவிஞன் தான், கண்ட அனுபவநிலையைப் பொதுவான ஒரு உண்மையோடு கொண்டு சேர்ப்பது தத்துவார்த்தமான வெளிப்பாடாக அமைகிறது. இதில் கவிஞன் சொல்ல வரும் பொருள், புதிய உணர்வையும் வலுவையும் ஒரு புதிய கோணத்தையும் பெறுகிறது.

ஒரு அனுபவசாலியின் சிதறிய மன உணர்வுகளின் வெளிப்பாடாகவும், சித்திரங்களாவும் வாசிப்பாளர்களின் ஆழ்மனதிற்குள் செல்லும் கவிதையின் கருத்தாகவும் தத்துவார்த்தங்கள் அமைவதால், அதன் புரிதல் மிகுந்த கடினத்தைப் பெறுகின்றன. ஏனெனில், பொதுவாக புதுக்கவிதைகள் பரந்த பொருளாழம் மிக்கவைகள். அதன்கீழ் கவிஞனின் அனுபவம் தந்த ஒருசொல் வாசகனுக்கு வேறொரு அனுபவத்தை ஏற்படுத்தியிருப்பின், கவிஞன் சொல்ல நினைத்தபொருள் வெகுஇயல்பாக மாற்றம் பெற்றுவிடும். இச்சுதந்திரம் புதுக்கவிதைக்கு இயல்பானதாகும். அதேநேரத்தில் கவிஞன் உணர்த்த விரும்பும் சில குறிப்பிட்ட அனுபவங்கள் எல்லா வகையான வாசகர்களையும் சென்று சேரும் தன்மையுடையதாகத் திகழ்கின்றது. உதாரணமாக,

"கருப்பு வளையல் கையுடன் ஒருத்தி
குனிந்து வளைந்து பெருக்கிப் போனாள்
வாசல் சுத்தமாச்சு மனம் குப்பையாச்சு"

(தி.சு.நடராசன்., கவிதையென்னும் மொழி.,(நூ.இ).,ப.49.,கல்யாண்ஜி கவிதை., சித்திரை நிலவு வெளியீடு., மதுரை., 2002., (எ.ஆ.ப))

இக்கவிதை வரிகளைக் குறிப்பிடலாம். இதில் கவிஞனின் தனிப்பட்ட அனுபவம் மட்டும் வெளிப்படாமல், இன்னும் சிலரின் அனுபவங்களும் வெளிப்படுவதைக் காணமுடிகிறது. மேலும் இக்கவிதைக்குப் பின்னால் ஒரு வக்கிரமான மனப்பான்மை வெளிப்படுவதை காணலாம். இவ்வக்கிரமான மனப்பான்மை நிச்சயம் ஒரு கவிஞனின் அல்லது அக்கவிதையை வாசிக்கும் வாசிப்பாளனின் மனப்பான்மை மட்டுமல்ல. இது ஒரு இனத்துக்கான மனப்பான்மையாக இக்கவிதையில் பொதுமைப் படுத்தப்பட்டுள்ளது. மேலும் இக்கவிதை மீண்டும் மீண்டும் வாசிக்கப்படும் பொழுது, நம் ஆழ்மனதுக்குள்ளான வக்கிர மனப்பான்மையைத் தெளிவாக்கி – நமக்குள் பெண்கள் வெறும் போகப்பொருளல்ல என்ற மனநிலையை உண்டாக்குகின்றது. இங்குதான் கவிஞனின் அனுபவம் சமூகம் சார்ந்த வெற்றியை அடையப்போராடும் போராட்டம் நிகழ்கிறது. அதேபோல் கறுப்பு வளையல் போட்ட பெண் என்ற சொற்றொடர் காலம் காலமாக பெண்கள் அடிமைப்படுத்தப் பட்டிருக்கும் சூழலையும் விளக்குவதாக அமைந்திருக்கிறது. இம்மாதிரியான கவிதைக்குள் கவிஞன், தான் சொல்லவரும் அனுபவத்தைப் பரவலாக்கும் பொழுது அந்த அனுபவம் போதிய புரிதலுக்கு வராத சூழலில் தத்துவார்த்தமாக வெளிப்படும். இத்தகைய தத்துவார்த்த வெளிப்பாட்டு மரபு, தமிழ்க்கவிதை மரபில் மிகவும் பழமையான மரபாகும். இம்மரபு இலக்கியச் செய்நேர்த்தியோடும் சமூக நோக்கோடும் தத்துவங்களை இணைத்துச் சொன்ன பாரதியிலிருந்து, ந.பிச்சமூர்த்தி, கு.ப.ரா என வளர்ந்து, இன்று அயல்மொழி வரவுகளான நவீனத்துவம் போன்ற புதிய உள்ளீடுகளைப் புதுக்கவிதையில் கொண்டு வந்திருக்கிறது. அதன்கீழ் புதுக்கவிதை வரலாற்றில் எழுத்து ஒருவகையான தத்துவார்த்த உரையாடலை உருவாக்கியது. அதிலிருந்து படிகள் அம்மரபை வளர்த்தெடுத்து, சிறுபத்திரிகை இயக்கம் என்பதை

அடிப்படையில் ஓர் மாற்று இயக்கமாக மாற்றியிருக்கிறது. இதனடிப்படையிலேயே இலக்கு அமைப்பு பெண்ணியம், தலித்தியம் குறித்த விவாதங்களையும்; தேசியம் குறித்த கருத்தாக்கங்களையும் தொடர்ந்து வெளியிட்டது என்பது குறிப்பிடத்தக்கது. அதேபோல் படிகள் செய்து வந்த இலக்கிய மேம்பாடுகளை மேலும் (காலாண்டிதழ்) பல்கலைக்கழகங்களுக்கும், கல்லூரிகளுக்கும் எடுத்துச்சென்றது. மேலும் படைப்புகளுக்கு முக்கியத்துவம் தருவதை நிறுத்திக்கொண்டு படைப்புகள் சார்ந்த நவீன கருத்தாக்கங்களைக் கட்டுரைகளாக வெளியிட்ட மிகமுக்கிய சிறுபத்திரிகையாகும்.

பொதுவாக தமிழ் இலக்கியத்தின் சூழல் கால அணுகுமுறைக்கு ஏற்ப மாறும் தன்மைகொண்டது. இதனை சமஸ்கிருதம் அறிமுகமான சூழலில் எஸ். வையாபுரிப்பிள்ளை, தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் கிரேக்கம் மற்றும் கிருத்துவம் அறிமுகமான சுழலில் பேரா.க.கைலாசபதி, இவருக்குப்பிறகு க.நா.சு, சி.சு. செல்லப்பா, இவர்களைத் தொடர்ந்து கா.சிவதம்பி, கே.கேசவன் ஆகியோர் உருவாக்கிய ஒப்பாய்வு, மற்றும் பொருள்முதல்வாதம், நவீன வெளிப்பாட்டுத் தன்மைகள் முதலான அணுகுமுறைகளால் நாம் அறிகிறோம். இத்தகைய இலக்கியத்தின் மீதான மாறுபட்ட அணுகுமுறைகளையும் நமக்கு சிறுபத்திரிகைகளே கொண்டுவந்து சேர்த்துள்ளன.

தற்கால சிறுபத்திரிகைகளும் இலக்கிய இயங்குதளங்களும்

தமிழில் பன்முகப்பட்ட சிந்தனைகள் வாசகர் மனங்களைத் தைக்கும் விதத்திலும், ஒரு அறிவார்த்தமான சமூகத்தைக் கட்டியெழுப்பும் விதத்திலும் சிறுபத்திரிகைகள் பல அறிய செயல்களை முன்னெடுத்துள்ளன. அதில் மணிக்கொடி, சூறாவளி, சரஸ்வதி, எழுத்து முதலான பத்திரிகைகளின் செயல்பாடுகள் முதன்மை பெறுகின்றன. அதன்கீழ் மேற்கத்திய சிந்தனைகளை அப்படியே ஏற்றுக்கொள்ளும் விமர்சன முறை, தமிழின் வளமான கவிதை மரபு தந்த எழுச்சி, உத்வேகம், இடதுசாரிய போக்கும் அணுகுமுறையும், நவீன சிந்தனைகளை மரபிலக்கியங்களோடு பொருத்திப்பார்க்கும் முயற்சி ஆகியன சிறுபத்திரிகைச் சூழலால் ஏற்பட்ட அடிப்படை மாற்றங்களாகும்.

தற்காலம் என்னும் சொல்லாடலுக்கு இங்கு மானுட அற ஒழுக்கங்கள் மீதான சிந்தனைகள் முன்னெடுக்கப்பட்ட 1980 களுக்குப் பிறகான காலகட்டத்தைப் பொருளாகக் கொள்ளலாம். இக்காலச் சூழல், வெகுசன சமூக இலக்கியத்திற்குள் பெண் இருப்பு பற்றிய கருத்துக்களையும் பெண்ணிய இலக்கியங்களையும் அதற்கு நிகராக அல்லது இணையாக விளிம்புநிலை மக்களுக்கான இருப்பும் வாழ்வியல் பதிவும் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. இத்தகைய தன்மைகளை உள்ளடக்கி முதன்முதலில் வெளிவந்த சிறுபத்திரிகையாக படிகள், நிறப்பிரிகை முதலிய பத்திரிக்கைகளைக் குறிப்பிடலாம்.

“படிகள் இதழில் தமிழவன் எழுப்பிய தமிழில் தலித் இலக்கியம் தோன்றுமா? என்கிற கேள்வியும், தொடர்ந்து அப்பத்திரிகைகளின் வேறு வேறு வெளியீடுகளில் எழுதப்பட்ட தலித் இலக்கிய விவாதங்களும் 1983-இல் இந்திரன் மொழிபெயர்த்த அறைக்குள் வந்த ஆப்பிரிக்க வானம் கவிதை தொகுப்பு தந்த உத்வேகமும், தமிழில் தலித் இலக்கியச் சொல்லாடல்கள் தோன்றுவதற்கு முன்முயற்சிகளாக அமைந்தன. தலித் இலக்கியத்தின் ஒட்டுமொத்த எழுச்சியை 1990 களுக்குப் பிறகு நடந்த அம்பேத்கர் நூற்றாண்டு கொண்டாட்டங்களிலே வெகுவாகக் காணமுடிந்தது. இதன் வளர்ச்சியில் நிறப்பிரிகையின் செயல்பாடுகள் என்பவை அபாரமானவையாகும். மேலும் தலித் என்பவர் யார்? தலித் இலக்கியத்திற்கான கோட்பாடுகள் எவை என்பதான விளக்கமுறை பதிவுகள் இவ்விதழின் வழியே முன்னேடுக்கப்பட்டன.”

(ச.பச்சைநிலா., சமகாலச் சிறுபத்திரிகை மீதான உரையாடல்(க.இ)., திண்ணை.,

தமிழின் முதல் இணைய வாரப்பத்திரிகை., ப.20183)

அதைத்தொடர்ந்து பெண்ணியம், தலித்தியம், என்ற கருத்தியல்கள் நிலைப்பெற்று இந்தியாடுடே (1995) போன்ற வெகுசன பத்திரிகைகளில் விவாதிக்கப்பட்டன. எனினும் பெரிய அளவில் வெகுசனப் பத்திரிகைகளில் தலித்தியம், பெண்ணியம் குறித்த விவாதங்கள் இடம்பெறவில்லை. அதோடு வெகுசன மக்கள் தளத்திலும் இச்சிந்தனைகள் குறித்த பார்வை சிறிதும் இல்லாமல் இருப்பதையும் நாம் காண்கிறோம். இந்நிலையில் வெகுசனப் பத்திரிகைகளில் இருந்து சிறுபத்திரிகைகள் எவ்வாறு வேறுபடுகின்றன என்ற சூழலை வீ.அரசு,

“சமூகத்தில் கட்டப்படும் நம்பிக்கை சார்ந்த சடங்குகள் அவைகளின் மூலமாக உருப்பெரும் விழுமியங்களாகிய சிலவற்றை வெகுசனப் பண்பாடு கேள்விகளின்றி ஏற்றுக்கொள்ளும். மாறாகச் சிறுபத்திரிகைப் பண்பாடு இதனைக் கேள்விக்குள்ளாக்கும்

(வீ.அரசு., சிறுபத்திரிகை அரசியல்., பரிசல் வெளியீடு., சென்னை., 2006.,ப.24)

என்று குறிப்பிடுகிறார்.

இதுபோல சிறுபத்திரிகைகளின் இலக்கிய உருவாக்கத்திற்கும் வளர்ச்சி சூழலுக்கும் ஏற்ப பல்வேறு பங்களிப்புகளை நிகழ்த்தியுள்ளன. கொள்கைக்காகவும், இடதுசாரிய கருத்தியலுக்காகவும் சில தனித்து இயங்கும் பத்திரிகைகளும் வெளி வந்திருக்கின்றன. இச்சூழல் இன்னும் புதுக்கவிதை உள்ளிட்ட புத்திலக்கிய மரபை அடுத்த நிலையைக்குக் கொண்டுசெல்லவும், அதன்மீதான அரசியலை தன்வசமாக்கிக் கொள்ளவும் உறுதுணையாக இருக்கக் காணலாம். இவைபோன்ற செயலாக்கங்களும் சிறுபத்திரிகைகளால் கிடைக்கப்பெற்றனவே.

நௌஷாத் கான்.லி

என்னுடைய பார்வையில் திருவிழா

கதைச்சுருக்கம்

அண்ணன் -தம்பிகளுக்குள் நடக்கும் சிறு பிரச்சனை எப்படி பூதாகரமாக உறவுகளை பல வருடங்களுக்கு பிரிக்கிறது.தகப்பனார் மூத்த மகனின் குடுமபத்தை மட்டும் விலக்கி வைக்கிறார்.சகோதர-சகோதரிகளும் தன் அப்பாவால் மூத்த அண்ணனின் குடும்பத்தோடு எந்த நல்லது -கெட்டதுகளிலும் கலந்து கொள்வதில்லை இவ்வளவு ஏன் நேருக்கு நேர் பார்த்தால் கூட முகம் கொடுத்து பேசாமல் இருக்கும் சூழ்நிலையில் அவர்கள் மீண்டும் ஒன்றாக இணைந்தார்களா,இல்லையா என்பதை காதல்,கோபம்,வீராப்பு,நட்பு,பகை,பண்டிகைன்னு எல்லாவற்றையும் கலந்து கட்டி சுபமாய் தந்திருக்கும் சக்கரை பொங்கல் தான் இந்த திருவிழா

பெரியவர் அழகர்சாமி,கோவிந்தன்,கருப்பன்,ராஜு,சுப்பிரமணி,தீபா,கந்தசாமி,ராஜி,ராஜு அழகப்பன்,கனகவல்லி,கண்ணன் -புவனா என்கிற புவி,மல்லிகா,குணா அழகப்பன்,சுந்தரி,ராதா,சினேகா,ராகவி,பவானி சுலோச்சனா,செல்வராணி,சுபா, செல்வம்,சந்தோஷ்,ஆகாஷ்,ராமனாதன்,மனோரஞ்சிதம், இராமச்சந்திரன், இராமதாஸ், ராஜமாணிக்கம், பெருமாள்,சேகர் மற்றும் பெரியவரின் மனைவி என இந்த நாவலில் நிறைய கதாப்பாத்திரங்கள் வந்தாலும் ஒவ்வொரு கதாப்பாத்திரம் தேவையில்லாமல் புகுத்தப்பட வில்லை..

ஒரு குடும்பத்தின் வீராப்பால் ஏற்படும் பிரிவு அதை ஒட்டிவரும் கதை என எளிமையாக தோன்றினாலும் ஒவ்வொரு கதாப்பாத்திரத்தின் கிளைக்கதைகளும் ரசிக்கும் படியாக இருந்தது.குறிப்பாக கண்ணன் -குணா புளிய மரத்தடியில் பேசிக்கொள்ளும் சில காட்சிகளை இயக்குனர் சுந்தர் சி ரைட்ஸ் வாங்கி அவர் படத்தில் வைத்து கொள்ளலாம்.அவ்வளவு நகைச்சுவையாக அந்த பகுதி இருந்தது

“எள்ளு தான் எண்ணெய்க்கு காயுதுன்னா
எலிப் புழுக்க ஏண்டா காயணும்?
எனக்காக இத செய்ய மாட்டீயா?
முருகனுக்காக நாரதரு தூது போகல
உன்னைய தூது போக சொல்லல
தொணக்கித தானே நிக்க சொல்றேன்
டேய் அப்படி பார்க்காதேடா
இட்லிய திங்க சொன்னா
நீ அவளத் திம்பே போல
அகங்காரம் மாப்ள அகங்காரம்
ஆமாம் மாப்ள காரம் தான்
வர மிளகாய் சாம்பாருல அதிகமா போட்டுட்டாங்க

குணா -ஆகாஷ் -கண்ணன் வரும் சில இடங்களில் எல்லாம் கிராமத்து மனிதர்களின் குசும்பும் பேச்சும் வாசகனை வெகுவாக ஈர்க்கிறது.

திமுக,அதிமுக வை போகிற போக்கில் யாரும் கோபித்து கொள்ளாதவாறு சில வாசகங்களை வைத்து நக்கல் அடித்திருப்பது ரசிக்கும் படியாக இருந்தது

காதல்,நகைச்சுவை,கிராமத்து குசும்பு,உறவுகளின் வெட்டி வீராப்பு என சிலவற்றை யதார்த்தமாய் பேசினாலும் நாவல் போகிற போக்கில் சில அழுத்தமான விஷயங்களை பாடம் எடுக்காமல் அவசியமாய் அழகாய் சொன்னது வெகு சிறப்பு..அதற்க்கு உதாரணமாய் சில விஷயங்களை கீழே பட்டியலிட்டு சொல்கிறேன்

“ஏதாவது விசேஷம்ன்னா உனக்கு இதெல்லாம் வந்து தொலயும் என்று ராஜி கடுப்படிக்கும்போது “ஏம்மா இது வாரதுக்கெல்லாம் நான் என்ன பண்ண முடியும்?

இது ஏண்டா வருதுன்னு நினைக்கிறவளுக்கு வயித்து வலியோட துடிக்க ஆச பாரு

இதை விட பீரியட்ஸ் -ன் வலியை பெண்களின் வேதனைகளை பதிவு பண்ணி விட முடியுமா என்ன?

எங்கள ஒதுக்குன உங்களுக்கு
வலி தெரியாதுங்க
ஒதுக்கப்பட்ட,ஒதுங்கி நின்ன
எங்களுக்கு தான் வலி தெரியும்
அதெல்லாம் சொன்னா புரியாது

அனுபவிச்சு இருக்கணும்னு புவி கண்ணனை பார்த்து சொல்லும் இடங்களில் நம்மையும் அறியாமல் கண்கள் கலங்கி தான் போகும்.ஒதுக்கப்படுதல்,ஒதுங்கி நிற்கும் படி இருக்கச் செய்தல் என்பது வலிகளை உணர்ந்தவர்களுக்கே புரியும்.

இனிமே எனக்கு மொத மரியாத கொடுக்க வேணாம்,சேகர் மாமா சொல்ற மாதிரி எல்லோரும் ஒண்ணு தான் இதுல எதுக்கு மொத மரியாத? எங்கம்மா உழைச்சா தான் எனக்கு சாப்பாடும் -படிப்பும் என அந்த சிறுவன் சொல்வதை பரிவட்டத்துக்கும்,மொத மரியாதைக்கும் அடித்து கொள்ளும் சில பெரியவர்கள் கேட்டால் திருந்துவதற்கு வாய்ப்புண்டு

தன்னை விரும்பாத கண்ணன் நல்லா இருக்க வேண்டும்,அவன் விரும்பிய படி புவனாவை கல்யாணம் செய்து கொண்டு நன்றாக வாழ வேண்டும்,அந்த பெரியவரின் குடும்பமும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என நினைக்கும் சுபாவின் உயர்ந்த உள்ளம் சில பெரியவர்களுக்கு கூட வராது

இப்படி உச்சி முகர்ந்து பாராட்டும் படியும்,நெகிழும் படியும் இந்நாவலில் நிறைய விஷயங்கள் உள்ளன.

ஒரு நதி போல கதையின் போக்கிலேயே குயிலி,வேலு நாச்சியார் மற்றும் மருது சகோதரர்கள் வரலாறு சொன்னது அருமை.சில வரலாறு மறைக்கப்படுவதையும்,சில வரலாற்றை மிகைப்படுத்தி சொல்வதிலும் பின் உள்ள அரசியலையும் சொன்னது சிறப்பு.

மதுரை திருவிழா பொழுதுகளில் தட்டைப் பயறு,மாங்காய் போட்ட குழம்பு வைப்பது பற்றியும்,பச்சை உடை,வெள்ளை உடை அணிவதற்குரிய காரணம் பற்றியும்,கொல்லங்குடி ஊர் பெயர் காரணம்,சில கோயில்களின் வரலாறு,குலதெய்வ வழிபாட்டு முறை,கம்ப சேவை,எதிர்சேவை விழா மற்றும் இந்த நாவலினுள் உள்வரும் சில நூல் பற்றிய குறிப்புகள் என ஆசிரியர் சொன்னது மிக சுவாரஸ்யமாய் இருந்தது.

வெட்டுக்குத்து,அடிதடி நடக்குமென பட படப்புடன் ஒவ்வொரு பக்கத்தினையும் புரட்டியவன்,கண்ணன் -புவனா காதல் எப்படி கை கோர்க்கும்,ஏதாவது பிரச்சனை வருமா என நினைத்தவனுக்கு பெருசுங்களே பஞ்சாயத்தை கூட்டி பேச்சு வார்த்தை நடத்தி காதலுக்கு மரியாதை செலுத்தியது சந்தோசத்தை தந்தது.

மதுரைன்னாலே அருவா,வெட்டுக்குத்துன்னு போலியாய் பயாஸ்கோப் காட்டும் கோடம்பாக்கத்துக்கு நடுவே மதுரைக்காரர்களின் அன்பு,பாசம்,உறவுமுறை,உணவுமுறை,வழிப்பாட்டு முறை என அசத்தல் ஜிகர்தண்டாவாக இந்த திருவிழாவை வாசகனுக்கு படைத்திருக்கிறார்கள்.

கோவில்,வயல்,கண்மாய்,குலதெய்வம்,வழிப்பாடு,கிராமத்து மனிதர்கள்,மற்றும் அற்புதமான உறவுமுறைகள் ஆகியவற்றை அறிந்து கொள்ள கண்டிப்பாக திருவிழாவை படிக்கலாம்.

● கட்டுரை

இரா.வெங்கடேஸ் குமார்

நேரத்தின் பரிமாணங்கள்

முன்னுரை:

அறிவியலின் கண்டுபிடிப்புகளில் பரிமாணங்களும் அதனை குறித்த முரண்பாடுகளும் அதிகமாகவே காணப்படுகிறது. எப்பொழுதெல்லாம் கால பயணம் மற்றும் அண்டத்தின் ஆராய்ச்சியை பற்றிய சிந்தனை வருமோ அப்போதெல்லாம் பரிமாணம் என்கிற வார்த்தையும் அதில் பெரும் பங்கு வகிக்கும். அதற்கு பரிமாணத்தை பற்றிய சில விளக்கத்தினை காண வேண்டும்.

அறிவியலின் பரிமாணம்:

அறிவியலின் கண்டுபிடிப்பை பொருத்தவரை அதனை செயல்பாடாக செய்து அதன் முடிவினை வெளியிடுவது உண்டு, அதுவே நம்மில் பெரும்பாலோரால் நம்பப்படுவது, ஆனால் அண்டத்தினை பற்றிய ஆராய்ச்சி தொடங்கிய காலத்தில், அதனை பற்றிய எந்த தகவலும் கிடைக்காத போது சிலரின் யூகம், அவர்களின் அண்டத்தைப் பற்றிய கணிப்பே இத்தனை கண்டுப்பிடிப்புகளுக்கு காரணமானது. அறிவியலின் முதல் படியே அதனை பற்றிய கணிப்பு. அப்படி தத்துவார்த்தமான ஆராய்ச்சியின் வெளிபாடே நாம் இன்று கானும் நடைமுறை அறிவியல் பல. அதே போல், தத்துவார்த்தமான அறிவியலில் உருவான ஒரு சொல்லே பரிமாணம், இதனை குறித்து பல காலங்களில் பல அறிவியலாளர்கள் எடுத்துரைத்துள்ளனர், அதனை ஆதரித்தும் அதனை எதிர்த்தும் பல விளக்கங்களும் வந்தவாரே உள்ளன இன்றளவும். ஆனால், பெரும்பாலோரால் நம்ப படுவன நாம் மூன்றாம் பரிமாணத்தில் வாழ்பவர்கள் என்றும், ஆகையால் தான் நம்மால் ஒன்று மற்றும் இரண்டாம் பரிமாணங்கள் ஆகியவற்றை கண்கூடாக காண முடிகிறது என்றும் அந்த ஆராய்ச்சி கூறுகிறது, இதனை புரிந்து கொள்ள பரிமாணங்கள் பற்றி தெரிய வேண்டியுள்ளது.

பரிமாணம் – தத்துவார்த்த புரிதல்:

பரிமாணம் பற்றிய விளக்கம் இன்றளவும் புரிதலுக்கு கடினமான ஒன்றே, அதலால், அவற்றினை ஒரு எடுத்துக்காட்டுடன் சேர்த்து காண்கையில் அதனை பற்றிய பொருள் உணர முடியும். ஒரு பரிமாணம் என்பது சாதரணமாக நம்மால் இடப்பட்ட ஒரு புள்ளியே அன்றி வேறில்லை, ஆனால் இரண்டாம் பரிமாணம் என்பது ஒரு புள்ளியின் அருகில் மற்றொரு புள்ளியினை இட்டு அந்த இரண்டினையும் இணைக்கும் ஒரு கோட்டினை குறிக்கும், இரண்டாம் பரிமாணத்திற்கு நீளம் மற்றும் அகலம் உண்டு ஆலம் என்பது இல்லை. முப்பரிமாணத்தினை எடுத்துரைக்க என்னற்ற பொருள்கள் உண்டு. ஆனால், மனிதர்களின் கண்கள் முப்பரிமாணத்தை முழுவதுமாக காணமுடியாது, உதாரணமாக கனசதுரம் முப்பரிமாணம் ஆகும், மனிதனின் மூளை இதனை முப்பரிமான பொருள் என்பதை உணர்ந்து உற்று நோக்கும் இருந்தும் கூட கன சதுரத்தின் ஒரு பக்கத்தினையும் மறு பக்கங்களின் சில பாகங்களினையும் காணும், ஆனால், மற்ற இடத்தினை மூளை பிம்பமாக உருவாக்கி அதனை முப்பரிமாணமாக சித்தரித்து விடுகிறது. ஆனால், இன்னும் சில பரிமாணம் இருப்பதாகவும் அதனை பற்றிய அறிவியல் விளக்கங்களும் இன்றும் வெளி வந்து கொண்ட படியே தான் உள்ளது.

பரிமாணம் அண்டத்தின் பக்கம்:

நாம் கூறும் அனைத்து விளக்கங்களும், பூமியினுள் வாழும் உயிர்களுக்கு பொருந்துவன. அதில், அண்டத்தினை பற்றிய ஆராய்ச்சியில் பரிமாணத்தின் பங்கு இன்றியமையாதது. ஏனெனில், நேரத்தினை பற்றிய அனைத்து விளக்கங்களும், பூமியினை தாண்டி இருக்கும் போது மாற்றம் அடைந்தே காணப்படுகிறது. பரிமாணமும் அவ்வாறான மாற்றம் நிகழுமா என்பதை வைத்து ஆராய்ச்சியினை முன்வைத்தால், அண்டத்தில் செயல்முறை ஆராய்ச்சி என்பது இன்றைய அறிவியல் முன்னேற்றத்திலும் நடக்காத ஒன்றே. ஆனால், அண்டத்தினை பற்றிய கணிப்பு, யூகம், இதுவரை நமக்கு கிடைத்த அண்டத்தினை பற்றிய தகவல் இவற்றையெல்லாம் வைத்து தத்துவார்த்த ஆராய்ச்சியில் மற்றும் அறிவியலினால் இதுவரை கண்டறியா சில விளக்கங்களையும் எடுத்து பல ஆராய்ச்சிகள் மற்றும் அவற்றினை குறித்த குறிப்புகளும் வெளிவந்த வண்ணமே உள்ளன. இவற்றில் ஏராளமான முரண்பாடுகளும், எதிர்ப்புகளும் மற்றும் ஆதரவுகளும் கூட அடங்கும். அவற்றில் ஒன்றான "பல அண்ட கோட்ப்பாடு" இது நம்மிடம் இருக்கும் அறிவியலினை கடந்து கால பயணம் செய்வதால் எற்படும் ஒரு முரண்பாட்டினை சரி செய்ய ஒரு யூகத்தின் விளைவாக தரப்பட்ட விளக்கமாகும். இவ்வாறாக, பல ஆராய்ச்சிக்கும் அதன் முரண்பாடுகளை கலையவும் பல ஆராய்ச்சி நீடித்து பரிமாணமும் அதில் இணைந்து, "பல அண்ட கோட்பாடு" என்ற விளக்கத்தில், பரிமாணத்தை பற்றிய ஒரு கேள்வியும் எழுகிறது. பல அண்டம் ஒன்று உண்டு என்ற ஒரு கோட்ப்பாட்டினை ஒரு யூகமாக வைத்தால், நம் கண்களுக்கு தெரியும் இந்த அண்ட மற்றும் அவற்றில் உள்ள அனைத்தும் நாம் ஒரு பரிமாணத்தினை மட்டும் காண்பதாக உள்ளது என்றே புரிந்து கொள்ள வேண்டும்.

அண்டம் –ஒரு பரிமாணம்:

இப்படி நமக்கு கண்களுக்கு தெரியும் அண்டமானது ஒரு பரிமாணம் என்றால், இரண்டாம் பரிமாணம், மூன்றாம் பரிமாணம் என்று அண்டத்தின் பரிமாணங்கள் நீண்டு கொண்டே இருக்கும். அப்படியானால், நம் கண்களுக்கு தெரிந்த அறிவியலினை வைத்து இது மாதிரியாக இருக்க இயலாது என்று இதனை ஒதுக்கி விடவும் முடியாது. அப்படி இந்த கோட்பாட்டினை வைத்து பார்த்தால், பல அண்டங்களில் பல பரிமாணங்களை காண முடியும் என்றே புலப்படுகிறது, அப்படி யூகத்தினை தொடர்ந்தால், இடையில் நம்மை வழி மறிக்கும் ஒரு காரணி நேரம், நேரத்தினை நம்மால் கடந்து முன்னும், பின்னும் பயணிக்க முடியாமல் ஒரு புள்ளியில் இருக்கும். அப்ப்டியென்றால், நாம் நேரத்தின் முதல் பரிமாணத்தில் இருக்கின்றோம் என்றே எடுத்து கொள்ள முடிகிறது.

நேரத்தின் பரிமாணம்:

இவ்வாறான வகையில் நேரத்தை காணும் போது, நேரத்தின் ஒன்றாம் பரிமாணமே நாம் இருக்கும் அண்டம். ஆகையால் தான் நம்மால், முன்னும் பின்னும் செல்லாமல் ஒரு புள்ளியில் இருக்கும் ஒரு பரிமாணத்தில் இருக்கிறோம் என்றே எடுத்து கொள்ள முடிகிறது. அப்படியென்றால், இரண்டாம் பரிமாணத்தின் நேரம் முன்னும் பின்னும் பயணிக்க கூடிய வகையில் ஒரு கோட்டினை போல இருக்கும் என்றே யூகிக்க முடிகிறது, அதே போல், மூன்றாம் பரிமாணத்தினை குறித்த முழுவதையும் நாம் காணும் போது நம் நேரத்தினை குறித்த கணிப்பும் நீண்டு கொண்டே இருக்கும்.

முடிவுரை:

மனித வளர்ச்சியில் அறிவியலின் கண்டுப்பிடிப்புகள் இன்றியமையாதது, ஆதலால் நாம் முன்னரே கண்டுப்பிடித்து இருக்கும் அறிவியலினை வைத்து மட்டும் ஒரு யூகத்தினை வைக்காமல் அதனை கடந்து கணித்தால், புது புது கண்டுப்பிடுப்புகளும் பிறக்கும், அதன் வளர்ச்சி மெல்ல மெல்ல நகர்ந்து அதன் முடிவினை தரும் போது அது ஒரு அறிவியல் புதுமையாய் திகழும். அறிவியலின் கண்டுப்பிடிப்புகள் எண்ணற்றவை இன்றளவும் ஆனால் அவற்றின் விதை அதனை பற்றிய யூகமும், கணிப்பே ஆகும்.

சுந்தரிமணியன், புதூர்

கெக்கலிப்பு

சந்தானத்திற்கு ஊருக்குப் போகிறோம் என்று சொன்னவுடன் மனது ஒரு பக்கம் குதியாளம் போட்டாலும் சட்டென அத்தை மகன் சிவாவின் நினைவு வந்தவுடன் மனதில் இருந்த மகிழ்ச்சி மொத்தமும் வடிந்து போனது.

சொந்த பந்தங்களின் ஏச்சுகளும் பேச்சுகளும் ஆச்சி, தாத்தாவின் மனதைப் புண்படுத்திய நினைவுகளும் நெஞ்சின் ஓரம் அலைக்கழித்தன. தாத்தாவின் கம்பீரமான முகமும் மீசையும் நேர்த்தியான உடற்கட்டும் குரலும் அவனுக்குச் சிறுவயதிலிருந்தே நிரம்பப்பிடிக்கும். அப்படிப்பட்ட தாத்தா தன் மகனுக்குக் குழந்தை பிறந்தவுடன் நிலைகுலைந்து போனார். யார் செய்த பாவமோ? இந்தப் பிறவியில் நானும் என் மனைவியும் எந்தப் பாவமும் செய்யவில்லை. போன பிறவியில் ஏதாவது பாவம் செய்துவிட்டோமோ? மனதுக்குள்ளிருந்த கலக்கம் அவரைத் தூங்கவிடாமல் கலங்கடித்தன. அவரது உடலும் உள்ளமும் சோர்ந்து போனது.

சொந்த பந்தங்களிடம் துடுக்குத்தனமாய்ப் பேசும் தாத்தாவின் பேச்சுக் குறைந்து போனது. சிவா பிறந்த கொஞ்ச நாள் நன்றாக இருந்தான். ஆச்சியின் வளர்ப்பில் வளமாகவே இருந்தான். கருகருவென்ற முடியும் சிவந்த நிறமும் காண்பவரின் கண்ணைக்கவரும் முகமும் வீட்டுக்கு வந்த எல்லோரும் தூக்கிக் கொஞ்சினர். அவனது குழந்தைப் பருவம் சிறப்பாக இருந்தது. எனக்கு எதுவும் விகல்பமாகப் படவில்லை.

சிவா எட்டுமாதக் குழந்தையாக இருந்தபோது மாமா குடும்பத்தோடு வெளியூருக்குச் சென்றார். அதன் பிறகு சிவாவுக்கு அடிக்கடி பிக்ஸ் வந்து மருத்துவமனைக்குச் சென்றதாக மாமா மூலம் தகவல் அறிந்து குடும்பத்தார் அனைவரும் கவலை கொண்டோம்.

நான்கு வயதுக்கு மேல்தான் சிவாவை மாமா ஊருக்குத் தூக்கி வந்தார். சிவா வந்தவுடன் மத்த பிள்ளைகள் மாதிரி இயல்பாகப் பேசமால் ஊ...ஊ என்று கத்திக் கொண்டு பாட்டுப்பாடுவது போல் ராகமிட்டுக் கொண்டும் இருப்பதைப் பார்த்து அம்மா பதறிப்போய் ஆச்சியிடம் கேட்டாள்.

“என்னதாம்மா ஆச்சு இவனுக்கு”

“என்னத்த சொல்லச் சொல்ற. பிறந்தவுடன் குழந்தை அழுகல என்று சொல்லும்போதே எனக்குச் சந்தேகமா இருந்துச்சு. இங்கே இருந்தவரை நல்லாதான இருந்தான். இப்ப இயல்பான பிள்ளைங்க மாதிரி தெரியல. பேசமாட்டேங்கிறான். வெளிய போறத சொல்லத் தெரியல. ஆனா நாம எது பேசுனாலும் புரிஞ்சுக்கிறான்.”

என்று கூறிய ஆச்சியின் வார்த்தைகள் அம்மாவிற்கு வருத்தத்தைக் கொடுத்தன. “ஏம்மா ஆஸ்பத்திரில காண்பிக்கலாம்ல” என்றாள்.

“உங்கண்ணனும் காண்பிச்சுக்கிட்டுதான் இருக்கான்.பிள்ளைக்கு மனவளர்ச்சியில்லனு டாக்டர் சொல்லிட்டாங்களாம். அடிக்கடி பிக்ஸ் வந்து பிள்ளைய பாடாய்ப்படுத்துது” என்றாள் ஆச்சி.

எப்பொழுதும் விளையாடிக் கொண்டே இருக்கும் சிவாவைக் கண்காணித்துக் கொண்டும் அவனோடு விளையாடிக் கொண்டும் பொழுதைப் போக்குவேன். அம்மா அவனைக் கொஞ்சினால் என்றால் அம்மாவின் மடியின்மீது வந்து படுத்துக்கொள்வான். அம்மா அவனின் தலையைக் கோதிவிடுவாள். சிவா மாடிப்படியின் மீது ஏறினான் என்றால், ஏறாதே என அதட்டும் அம்மாவின் சொல்லை மீறி மாடியில் ஏறிவிட்டு அவளைப் பார்த்துச் சிரிப்பான். அம்மாவும் அவனின் கன்னத்தைக் கொஞ்சி சிரிப்பாள். சிவாவுக்கு நாம் பேசுகின்ற வார்த்தைகள் புரிகிறது என்பதையறிந்து எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

சிவாவின் குறையைப் பார்த்து அவனுக்கு எதனால் இந்தக் குறை ஏற்பட்டது என்ற ஆராய்ச்சியில் சொந்தபந்தங்கள் இறங்கினர். தாத்தாவின் வழியில் யாரும் இப்படி இல்லை. எனவே அத்தை வழியில்தான் ஏதாவது கோளாறு இருக்கவேண்டும் என்று பேசினர். எனக்கும் அம்மாவுக்கும் கூட அது உண்மையென்றே தோன்றியது.

சிவாவைக் குணப்படுத்தவே முடியாது என்ற நிதர்சனமான உண்மை எல்லோரையும் பாதித்தது. சிவாவுக்குப் பத்து வயதிற்கு மேல் ஆனபோதும் உடல்நறுங்கிப்போய் இன்னும் பேசமுடியாமல் குழந்தை போல ராகம்போட்டு அவனது மொழியில் பாடிக்கொண்டும், கத்திக் கொண்டும் இருப்பது யாருக்கும் தொந்தரவு இல்லையென்றாலும் அவனது முரட்டுத்தனம் சில சமயங்களில் வெளிப்பட்டது. கோபம் வரும்போதெல்லாம் சுவற்றில் தலையை முட்டிக்கொள்ள ஆரம்பித்தான். மாமா அவனை அதட்டினார் என்றால் அழ ஆரம்பித்துவிடுவான். இதனால் அவனையே கவனித்துக் கொண்டு பொழுதைப் போக்கும் அத்தையின் செயல் ஆச்சிக்கு வெறுப்பை ஏற்படுத்தியது. கிடைக்காத ஒன்றுக்காக ஏங்குவதை விட கிடைத்த செல்வமான இரண்டாவது பிள்ளையைப் பொறுப்போடு அத்தை வளர்ப்பதில்லை என்பது ஆச்சியின் பெருங்குறை.

குறைசொல்வது மாமியாரின் குணம் என ஊர் உலகம் நினைத்தாலும் ஆச்சியின் எண்ணம் சரியானதுதான் என்று எனக்குத் தோன்றியது. ஒரு நாள் ஆச்சி கோபத்தில் அம்மாவிடம்

“இப்படி ஒரு பிள்ளை இருந்து என்ன பயன்? இது செத்துப்போனால் கூட பரவாயில்லை. அவள் அடுத்த குழந்தையையாவது ஒழுங்காக வளர்ப்பாள்” என்று கூற,

“ஏன் இப்படிப் பேசுகிறீர்கள். இப்படியெல்லாம் பேசாதீர்கள்” என்று என் அம்மா கண்கலங்கினாள்.

“இல்ல அவனை ஏதாவது ஹோம்ல சேர்த்துவிடலாம்..ல. எதுக்குமே ஒத்துவரலன்ன எப்படி” என்றாள் ஆச்சி.

குழந்தைகளால் பெற்றோருக்கும் மற்றோருக்கும் பயன் இருக்கிறதோ இல்லையோ, பிறந்த குழந்தை இறந்துபோகவேண்டும் என்று எந்தப் பெற்றோரும் விரும்புவதில்லை. மனிதநேயமுள்ள யாரும் விரும்புவதில்லை. பிறந்த குழந்தை குறையோடு பிறக்கும்போது குழந்தை மட்டுமல்லாது குடும்பமும் சேர்ந்து அத்துன்பத்தை அனுபவிக்கிறது. நாட்கள் செல்லச் செல்ல சிவா வளர்ந்து பெரியவன் ஆனான். ஆனால் எந்த முன்னேற்றமும் அவனிடம் தெரியவில்லை. மாமா இவனை நினைத்துக் கவலையிலேயே குடித்துக் குடித்து இறந்து போனார்.

சிவாவுக்கு இருபது வயதானபோது ஒரு நாள் அதிகாலையில் அத்தை சிவாவை எழுப்பினாள். எந்த உணர்வுமில்லாது அசைவின்றிக் கிடந்த சிவாவின் சடலம் எல்லோரையும் தூக்கிவாரிப்போடச்செய்தது. தூக்கத்திலேயே இறந்து போன சிவாவின் மரணம் எங்களுக்கு ஒரு பேரதிர்ச்சியை ஏற்படுத்தியது. அழகும் கலங்கமில்லாத சிவாவின் முகமும் இன்னும் என் கண்களுக்குள் நிழலாடுகிறது.

சிவாவைக் காரணம் வைத்து எந்த வேலைக்கும் போகாமல் இருந்த அத்தை இப்பொழுதும் காரணத்தைத் தேடிக்கொண்டு சோம்பேறியாய் பொழுதைப் போக்குகிறாள். சிவாவின் நிலையைக் கூறித் திட்டிய ஆச்சியை, அவன் இறப்புக்கும் அவள்தான் காரணம் என்பதுபோல, எல்லோரும் வைது இப்பொழுதும் சாபம் விடுகின்றனர். சிவாவைக் காரணம் காட்டி தாத்தாவைக் கெக்கலிப்பு செய்த சொந்த பந்தங்களும் ஊரும் ஊமையாகிப் போனது.

சா. கா. பாரதி ராஜா,

துளிப்பாக்கள்

நிழலைத் தேடி
ஓடுகிறார்கள்
அன்று மரங்களை வெட்டியவர்கள்

ஃ

ஞாயிறு விடுமுறை
வானில் பறக்கின்றன
இரை தேடும் பறவைகள்

ஃ

இலையுதிர் காலம்
நீல வண்ணத்தை சூடியது
கிளைகள் படர்ந்த மரம்

ஃ

பாதி உணவை விட்டு
ஓடுகிறது நாய்
குட்டிகளின் சத்தம்

ஃ

இடித்துத் தள்ளியும்
ஆசி வழங்குகிறது
புத்தனின் கைகள்

பிரசாத் சரணியா – திருகோணமலை

உன் பக்கமோடு (சிலேடை)

ஆசையாய் தட்டி
எடுத்துக் கொண்டேன்
உன்னுள் இறுகிய இதழ்களை
தட்டி நினைகிறேன் அறிவில்
உணர்வின் ஊடுருவல்களில்
உந்தித்தள்ளி தட்டித்தள்ளுகையில்
பட்டுத்தெறித்த தென்றல் வேகமாய்
உன் பக்க வாசம் அள்ளி வந்து
மேலும் இறுக்கிக் கொள்கிறது
உன்னோடான கூடலை
மெத்தப் பெரிய பாசம் உன்னோடு
எனக்கு ஏனோ
உலகியல் தந்த சலிப்பு
உன்னோடு உணரவில்லை உத்தமனே
தற்பெருமை தாழா
உன்தலைக்கு
உன் பெருமை
உனக்குரைக்க என்னாசை
எழுதிவிட்டேன்
நீ கேட்பாய் என்று
கேட்கிறது உலகமே.

கவிஜி



காற்று வெளி - ஒரு பார்வை

மணிக்கொடி காலம் தொட்டு வானம்பாடி காலம் கடந்து இதோ இப்போது காற்றுவெளி என்று மின்னிதழ் காலம் வரை இலக்கியம் தன்னை எப்படியும் தக்க வைத்துக் கொள்ளும் வல்லமை பெற்றிருக்கிறது. தமிழின் விரல் பிடித்தோர் வழி தவறியது இல்லை என்பதாகவே நாம் எழுதும் வரலாறு இருக்கட்டும். அந்த வகையில்...காற்றுவெளி மின்னிதழ் பல வருடங்களாக அச்சிதழாகவும்... காலத் தேவைக்கு தகுந்தாற் போல தன்னை தகவமைத்துக் கொண்டு மின்னிதழாகவும் வெளிவருவது நாம் அறிந்ததே.

கவிதை... சிறுகதை... நூல் அறிமுகம்... இலக்கிய ஆய்வுகள் என படைப்புகள் நிறைந்த பொக்கிஷமாகவே தான் ஒவ்வொரு மாதமும் நான் அதைக் காண்கிறேன். இந்த மாதத்தில் நம்ம படைப்பு எதுவும் வந்திருக்கிறதா என்று ஒவ்வொரு படைப்பாளிக்கும் ஆவலை அதிகப்படுத்தும் வகையில் அதன் கட்டமைப்பு அமைத்திருப்பது இலக்கிய தரத்துக்கு சான்று. அவ்வப்போது சிறுகதைச் சிறப்பிதழ்... சிற்றிதழ் சிறப்பிதழாகவும் வருவது இலக்கிய இணைப்பு...இல்லை இல்லை... இலக்கிய இனிப்பு.

படைப்புகள் மானுட சமூகத்தின் கண்ணாடி. முடிந்தளவு நம்மை நாமே பிரதிபலிக்கும் தத்துவத்தை வடிவமைத்துக் கொண்டே இருக்க... கலை இலக்கியம் உதவுகிறது. தன்னை தானே உணர்தல் மூலமாக பிறரையும் உணர செய்யும் வடிவத்தை எழுத்துக்கள் மூலமாகத் தான் கண்டடைய முடியும் என்பது எழுத்தால் ஆன மனம் நம்பும் இயல்பு. அகம் நோக்கி நகரும் அதே வேளையில் புறம் நோக்கியும் நகரும் எழுத்துக்கள் தான் காலம் தாண்டியும் நிற்கும். ஏதோ ஒரு வகையில் மனித குலத்திற்கான தத்துவ விசாரணையை தொடர்ந்து எழுத்து நிகழ்த்த வேண்டும். அத்தகைய நகர்வுக்கு அடித்தளம் அமைத்து தந்திருக்கிறது காற்றுவெளியின் காகித வெளி. ஆரம்ப கட்டத்தில் இருந்து அடுத்த கட்டம் நகர நினைக்கும் படைப்பாளிகளுக்கு ஆசிரியராக மாறும் காற்றுவெளி ஒவ்வொரு பக்கத்திலும் மொட்டவிழுந்த மலரினைப் போல சொற்களைக் கொண்டிருக்கிறது.

தொடர் வாசிப்பு தான் தொடர்ந்து இலக்கிய உலகத்தில் இயங்க வைக்க ஏதுவாகும். அப்படி காற்றுவெளி இதழின் வழியே ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு துளிர் விடுகிறது... படித்துணரும் மானுடம். அதன் தொடர்ச்சியில்... மனதின்.....அறிவின்.... விசாலம் பெருகும் என்பதில் ஐயமில்லை. இலக்கியமே இந்த வாழ்வின் முரண்களை களையும் மானுட மொழி. அதன் உருவம் உடமை... உயிர் எல்லாமே மனித நேயம் தான். அதன் தீர்க்கத்தின் தீஞ்சுவாலைகள் எழுத்துக்களின் வழியே தன்னை நிகழ்த்தி நிகழ்த்தி சரி செய்து கொண்டே இருப்பதை நாம் உணர்ந்தே இருக்கிறோம். பொதுவில் போட்டு பொதுவில் கிடைக்க செய்யும் அறிவின் தீர்க்கமே இங்கு ஆதுரம். பொதுமையில் தான் புதுமைகள் நிகழ வாய்ப்பிருக்கிறது. அந்த புதுமைகளை சத்தமில்லாமல் நிகழ்த்திக் கொண்டிருக்கும் காற்றுவெளி இதழ் நமக்கெல்லாம் நமக்கு நாமே எழுதும் அன்பின் மடல்.

வாசகர்களின் அலைபேசியில் உருகும் காற்றுவெளி ஒவ்வொரு மாதமும் அந்த மாதம் முழுக்க ஓடி உழைத்த மனங்களில் உற்சாகம் ஊற்றுகிறது என்றால் மிகை என்று நினைப்போர் பற்றி சொல்ல ஒன்றுமில்லை. அதன் அமுதம் பருகியோர்... ஆம் என்பார்கள். ஒவ்வொரு பக்கத்திலும் பார்த்து பார்த்து செதுக்கிய பவள கூடுகள்... பாறை நடுவே செய்து பார்த்த சித்திர வேலைகள்... இலை உதிர்த்த மரங்களின் தனித்த சொல்லாடல்கள்... நதி ஓட நாள் ஓடும் கரையின் தவிப்புகளென சிறுகதைகளும் கவிதைகளும் அமர்க்களப் படுத்துவதை யாம் அறிவோம். நேர்த்தியான வடிவமைப்பும் நெகிழ்வான கருத்தியல்களும் கோலோச்சும் காற்றுவெளி ஏனோ தானோவென எழுதுவோருக்கு ஒருபோதும் இடம் கொடுப்பதில்லை. தரத்தினால் தாகம் தீர்க்க எண்ணுவோருக்கு தன்னையே நீராக்கி பக்கம் பக்கமாய் சொட்டுவதில் காற்றுவெளி வான மழை. தெளிவான இடைவெளியில்... தெவிட்டாத சொல்வனத்தில்... சொற்களுக்கான வடிவம் நுண்ணிய தொழிநுட்பத்தை லாவகமாக கையாண்டிருக்கும்.

ஒவ்வொரு படைப்புக்கும் நேர்த்தியாய் நெய்யப்பட்ட நெருப்புத்துண்டு போல ஒவ்வொரு ஓவியமும் கோடுகளால் அந்தந்த படைப்பின் பொருள் பாடியிருக்கும். மெனெக்கெடாமல் அது சாத்தியமில்லை. கருப்பொருளுக்கு தக்க கனப்பொருளென ஓவியத்தை வடிவமைத்தல் பெருங்காற்றில் படபடக்கும் பச்சை இலை மினுங்கல் என்கிறேன். ஆசிரியர் சோபா அவர்களுக்கும்... வடிவமைப்பு செய்யும் தோழர் நெகிழன் அவர்களுக்கும் மற்றும் இந்த காற்றுவெளியில் சிறகடிக்கும் அத்தனை இசைகளுக்கும் மனமார்ந்த வாழ்த்துக்கள். ஒன்று கூடி தேர் இழுப்பதை விட கடினம்... நன்று கூடி தமிழ் காப்பது. அதை செவ்வெனே செய்து கொண்டிருக்கும் இந்த சித்தம் எந்த யுத்தத்திலும் நின்று விட கூடாது. சிந்தாந்தங்கள் வேறுபடலாம். சிந்தனை வேறுபடலாம். எல்லாமே தமிழின் வேர் பற்றி நகர வேண்டும் என்பது தான் நாடு கடந்தும் நாம் கண்ட திரவியம்.

சிற்றிதழ்கள் குறித்து பேசுவதும்.. கலந்துரையாடுவதும்.... காலத்தின் தேவை என்றே கருதுகிறேன். ஏனென்றால் சமூக புரிதலின் ஓர் அங்கமாகவே தான் சிற்றிதழ்கள் இருக்கின்றன. மனிதன் தன்னை தொடர்ந்து பண்படுத்திக் கொண்டே இருக்க கலை இலக்கியம் மிக அவசியம். அந்த கலை இலக்கியத்தின் முக்கியமான வடிவம் சிற்றிதழ்கள் என்று நம்புகிறேன். என்னை பொறுத்த வரை... வளர்ந்து வரும் எழுத்தாளனுக்கு சிற்றிதழ்களின் பங்கு மிக அலாதியானது. ஆழம் காண சொல்வது சிற்றிதழ்கள் தான். அடிப்படை வாதத்தில் இருந்து விலகி வேறொரு கோணம் காண செய்வது சிற்றிதழ்கள் தான். மேம்போக்காக நுனிப்புல் மேய்தல் சிற்றிதழ்களில் நிகழாது. அந்த வகையில் காற்றுவெளி... கவிதைக்கு... கதைக்கு... ஓவியத்துக்கு... நூல் விமர்சனத்துக்கு... நூல் அறிமுகத்துக்கு... என்று தன் ஆக்கபூர்வமான பக்கங்களை கருப்புவெள்ளை கிளாஸ்க்கில் கண்கள் கவர தொடர்ந்து தந்து கொண்டிருக்கிறது.

சமகாலத்தில் கொலுசு மின்னிதழ்... தகவு மின்னிதழ் என்று ஆங்காங்கே தரமான மின்னிதழ்கள் தனது சேவையை செவ்வனே செய்து கொண்டிருக்கின்றன. அதன் வரிசையில் காற்றுவெளி தனக்கான இடத்தை மிக நுட்பமாக பெற்றிருக்கிறது. காற்றுவெளியில் தன் படைப்பு வருவதை அங்கீகாரமாக நினைக்கும் எத்தனையோ நண்பர்களை அறிந்ததால் அதை உறுதிபடவே பதிகிறேன்.

சிற்றிதழ்கள் நடத்துவது அத்தனை எளிதான காரியம் அல்ல. மாதம் ஒரு முறை வந்தாலும் அந்த மாதம் முழுக்க வேலை வாங்கும். ஒவ்வொரு பகுதியும் பயனுள்ளதாக இருக்க வேண்டும். அதே சமயம்.... சுவாரஷ்யம் குறையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நாகரீமும் இருக்க வேண்டும். அதில் நவீனமும்

கலந்திருக்க வேண்டும். அட்டைப்படத்தில் இருந்து.. எண்டு கார்ட் வரை.. பரபரவென அறிவு பூர்வமான... உணர்வு பூர்வமான விஷயங்களை சேர்த்து அசல் இலக்கியத்தை வாசகனுக்கு மடை மாற்றி விடுவது மிக ஈடுபாட்டுடன் செய்ய வேண்டிய பணி. அதை காற்றுவெளி அற்புதமாக செய்து கொண்டிருப்பது கண்கூடு. பொழுது போக்க படிப்பது அல்ல சிற்றிதழ். பொழுதை ஆக்க படிப்பவை. சம கால தத்துவங்களின் கோர்ப்பு சிற்றிதழ்களில் தான் செவ்வனே நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. கால பிரதியாய் எல்லா பிரதிபலிப்பும் இப்படி படைப்புகளாகி சேமித்து வைக்கப்படுவது சிற்றிதழ்களில் தான்.

அந்த மாதம் ஒருவர் படைப்பு வருகிறதென்றால் அவருக்கே அந்த மாத மாதிரியை அனுப்பி அந்த குறிப்பிட்ட படைப்பில் எதுவும் எழுத்துப் பிழை இருக்கிறதா என்று சோதித்து தரும்படி கேட்பது... அந்த குறிப்பிட்ட படைப்பாளியை இன்னும் கூர்மையாக அணுக பழக்குகிறது. அடுத்த முறை அந்த தவறு நிகழாமல் இருக்க பார்க்கிறது. அந்த வகையில் இந்த-முறை இதுவரை காற்றுவெளியில் தான் முதல் முறை. கவிதை எனப்படுவது கால சீற்றத்தில் எழும் முன் பின்னற்ற ஒரு நொடி. அதை பத்திரப்படுத்தி அதை மேடையேற்ற பார்க்கும் எத்தனையோ கவிஞர்களுக்கு அது தரமாக இருப்பின் தாராளமாக இடம் தரும் காற்றுவெளி தன் பெயரிலேயே கவிதையைத் தான் வைத்திருக்கிறது. கவிதைகளின் கூட்டில் காணும் கண்ணெல்லாம் காதல் வண்டுகள் தான். தீராத தேன் கூடென இந்த காற்றுவெளி... காலத்துக்கும் வேண்டும் என்பது தான் ஆவல்.

இத்தனை காலமாக லண்டனில் இருந்து வெளிவரும் ஓர் இதழை எந்தவித பலனும் எதிர்பாராமல் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கும் முல்லை அமுதன் ஐயாவுக்கு எத்தனை நன்றிகள் சொன்னாலும் தகும். தமிழ்பால் அவர் கொண்டுள்ள தொண்டுள்ளம் மீண்டும் மீண்டும் அவரை வணங்க செய்கிறது. பாகுபாடோ.. செல்வாக்கோ அவரிடம் செலுத்த முடியாது என்று தான் நினைக்கிறேன். நன்றாக எழுதுபவர் நன்றாக எழுதவில்லை என்றாலும் அது இடம் பெறாது. யார் எழுதினாலும் அதில் அறமும் கூற்றும் ஆதி தமிழின் மடியில் தவழ்ந்தால் மட்டுமே அந்த மாதம் உங்கள் பெயர் காற்று வெளியில் இடம் பெரும். அதை நானே கண் கூடாக எனக்கே உணர்ந்திருக்கிறேன். கடமைக்கு அனுப்பிய எதுவும் இதுவரை வந்ததில்லை. கண்ணும் கருத்துமாக பார்த்து பார்த்து பக்குவமாய் சொல் அடுக்கி வார்த்தை கோர்வையில் வாக்கிய சேவை இருக்க... இந்த கருத்து சமூகத்துக்கு போக வேண்டும் என்று நினைத்ததெல்லாம் வந்திருக்கிறது.

எந்த ஒரு சுயநல தவிப்புக்கும் காற்றுவெளி வீசாது. மாறாக பொதுநல தகிப்புக்கு அதன் இறக்கைகள் கண்டிப்பாக அசையும்.

கனகசபாபதி செல்வநேசன், அல்வாய்.

சுதந்திரம்

இன்றைய இருப்பில் நாளையை மறந்த
இலவங் காய்கள்
கிளிகளை ஏமாற்றுகின்றன.
வலிகள் சுமந்த தாயக இடுக்குகளில்
வழிகோலும் வஞ்சகம்
வன்முறை பழக்குகின்றது.
அறுதலை நாட்டில் தறுதலைக் கூட்டம்
சுயம்தனைப் பறித்து
சூழ்ச்சிக்கு இணங்குகிறது.
கூலிச் சண்டையில் வேலிகள் எரிக்கும்
வெள்ளை வேட்டிகள்
வேட்பு மனுக்கள் செய்கின்றன.
அனுதாப ஆத்திரம் அவரவர் வேசம்
தன்னினம் தகர்த்திட
அடிமைச் சாசனம் எழுதுகிறது.
கூட்டுப் பாலியல் வல்லுறவு வல்லுனரால்
நித்தம் நித்தம் விற்பனையாகிறது
தாய்நிலத்தின் அவலம்.
சங்கைத் திருகி சாத்வீகம் பேசி
அகந்தையில் திணிக்குது
வாளேந்திய சுதந்திரம்.

தங்கேஸ்

பறவை

கண்களை மூடிக்கொள்கிறேன்
இன்னொரு முறை விழிகளுக்குள் பறந்து போ
பறவையே!
அந்த இளவேனிற் காலம்
திரும்பி வரும்போது
ரேடியோப் பூக்கள் பூத்த மலைச்சரிவுகளில்
நாம் பசுந்தளிர்களிடம்
உரையாடியபடி நடந்து கொண்டிருப்போம்!

ஃ

பால்கொடிகள்

என் மேனியெங்கும் பற்றிப் படர
மெய்சிலிர்ப்பில் நான் மீண்டும் பனிச்சிலையாகி
விடுவேன்.
தெளிந்த வானமும்
அதன் மீது நிலவும்
அரைவட்டமடித்துப் போகும்
வெண்நாரைக்கூட்டங்களும்
மீண்டும் தோன்றும் போது
கடைக்கண்ணோரம் துளிர்க்கும்
ஒரு துளி கடலில்
நீ படைத்த அத்தனை உயிரினங்களும் உன்
முன்னால்
இரகசியமாய் நீந்தி மறைந்து விடும் கண நேரத்தில்

ஃ

நதி

அந்த நதி இன்னும் ஓடிக்கொண்டே தானிருக்கிறது
மனம் பிறழ்ந்த பொழுதொன்று
அதன் மீது குப்புற கவிழ்ந்து கிடந்தது
சாரமற்ற நிலவும் கோலமாவைப் போல
பொடிப்பொடிப்பாக
அதன் மீது தன்னை தூவிக் கொண்டிருந்தது
நீ ஒரு சொல்லை உதிர்க்கிறாய்
ஓசையின் இனிமையில்
அர்த்தத்தை தவற விடுகிறேன்
தவறவிடுவதே நம் இயல்பானதை எண்ணி
நீ ஆழமான புன்னகையை சிந்துகிறாய்
வழியை தவறவிட்டு
தலைக்கு மேல் பறந்து கொண்டிருந்த
கொத்துவெண் நாரைக் கூட்டமொன்று
கூடடையாத அந்த சொல்லை
அலகுகளில் கல்விப் போகிறது
அன்று காணாமல் போன
அந்த செல்லை மட்டும் இன்று
கண்டு பிடிக்க நேர்ந்தால்
நாம் இப்பொழுது அதைப் போல
ஒரு அந்தியை சிருஷ்டிக்க இயலும்
சுவரில் பதுங்கி பதுங்கிப் போகும்
சங்குப் பூனையையும் அதன் நிழலையும் சேர்த்தே
படைக்க முடியும்
வெண்கொத்து நாரைகளை
சரியான திசையில் திருப்பி விட முடியும்
மனதில் ஓடிக்கொண்டிருக்கும்
அந்த நதியை சுதந்திரமாக விடுவித்து விடலாம்
மீண்டும் நீ ஆழமான புன்னகை சிந்தும் போது
நான் சொல்வேன்
“கண்ணே என்னையும் ஒரு சொல்லாக மாற்றி
காலத்தை முன்னும் பின்னுமாக நகர்த்திக்
கொண்டேயிரு”

ஃ

மாசற்ற சுவாசம்

படபடக்கும் வெள்ளை தாட்கள்
குருவிகளாகும்
ஒரு மாலைப் பொழுது
நம் முத்தத்தில்
சிவந்த சூரியனுக்கு
கொள்ளை அழகு
விரல் தீண்டும்
இந்த சிறு கணத்திற்காகவா
இத்தனை காலங்கள் காத்திருந்தாய்?
ஆனாலும் உன்னை ஆதி அந்தமாய்
தழுவும் போது சொல்வேன் நின்னினும்
என் தவம் பெரிதே கந்தர்வா!
கல்லாய் சமைந்திருந்தவளை
உயிர்ப்பித்தது
ஒரு மாசற்ற சுவாசம் எனில்
அந்த ஒரே ஒரு மாசற்ற சுவாசத்திற்காக
உன் பெயரைச் சொல்லி சொல்லியே
கல்லை திரவாகமாய் கரைத்தவள் நான்.

மல்லை.மு.இராமநாதன்.

வாழ்ந்து பார்ப்போம் வா

உயிர்த்தேனே!
உன் பிரிவால் எனக்கு
உயிர் வலி,,
நிரந்தர பிரிவாகி
உயிர்ப்பலி வாங்கி டாதே
காதலெனும்
ஆயுதமின்றி
காண்பதெவ்விதம்?
வாழ்வுப் போர்க்களம்-
புறமுதுகு காட்டுபவன்
போர்க் களம் புகலாமா?
புன்னகையை விரும்புகிறாய்-உடல்
புண்படபய மேன்?
தேனெடுப்பவன்
தேனீக்கடியையும்
தேனீராய்க் கருதனும்.
நீ பிரிவைக் கொடுத்த
பிறகுதான்
உள்ளம் எரிகிறது
காதல் புரிகிறது.
வாழ்க்கை ஒரு
விளையாட்டு மைதானம்
மைகரைய கண்ணீர் சிந்தாதே
இதயத்தின் வைகறையே
வெற்றியோ தோல்வியோ
வாழ்ந்து பார்ப்போம் வா

ச.ஆனந்தகுமார்

என் ஜன்னலுக்கு வெளியே

வானம் கொஞ்சம் வெள்ளை மேகங்களை தந்து
விட்டுப்போக வெளியே காத்திருக்கிறது.
காற்றும் கனவுகளையெல்லாம் பொட்டலமாக்கி
சுமந்து கொண்டிருக்கிறது..
விபத்தொன்று சொல்லாமல் களவாடியதில்
நட்சத்திரமாய் மின்னுகிற அப்பாவும் வெளியே
இருக்கலாம்..
பைத்தியம் என பட்டம் கொடுத்து பணத்தின்
பின் திரிந்த காதலி..
வீட்டு வேலையில் தேய்ந்து போய்
சொர்க்கத்தில் சிரிக்கிற அம்மா..
படிப்பு அறிவுக்கென தப்பாய் வழிகாட்டிய
தமிழாசிரியர்..
மொட்டை மாடியில் எதிர்பாட்டிசைக்கும்
குயில்.. பார்த்தவுடன் வந்து வாரி
அணைக்கும் சலிப்பற்ற அலைகள்..
வரும்போதெல்லாம் திட்டு வாங்கி சிரிக்கும்
மழை
அன்பு விதையொன்றில் வனமாய்
முளைத்தெழுந்த கவிதைகள் என
எல்லோரும் என் பிறந்தநாளுக்கு
வாழ்த்த ஜன்னலுக்கு வெளியே ஒவ்வொரு
வருடமும்தவமிருக்கிறார்கள்..
நான்தான் சாளரத்தை சுவர்களாக
மாற்றிவிட்டதை இன்னும் ஒருவரிடமும்
சொல்லவில்லை..

இளையவன் சிவா , மடத்துக்குளம்

நூல் அறிமுகம்: சின்னப்புள்ள பேத்தியே..

ஒரு நல்ல இலக்கியம் என்பது நம் மனதைக் கட்டிப்போட்டு அதைப் பற்றியே எப்போதும் நினைக்கும்படியான தோற்றத்தை உருவாக்கும். எப்படியெல்லாம் மொழியின் ஆளுமையில் சொற்கள் இலக்கியங்களின்வழி கதைகளாக, சிறுகதைகளாக, நாவல்களாக, பாடல்களாக உருமாறி நம் மனதை அசைத்துப் பார்க்கின்றன என்பதை நல்ல இலக்கியம் எடுத்துக்காட்டிக் கொண்டே இருக்கும்.

நம் மனதிற்கு நெருக்கமான உறவினரோ, நண்பரோ இவ்வுலகை விட்டுச் செல்கையில் அவரின் பிரிவு நம் மனதிற்குள் ஏற்படுத்தும் ஆழமான வலி எவ்வளவு காலமானாலும் நமக்குள் உழன்று கொண்டே இருக்கும்.

அந்த வலியின் வேதனையைப் போக்குவதற்கு ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான முறையைக் கையாளுகிறார்கள். சிலர் மனதிற்குள் இருப்பதை கோபத்தின் வழியாக வெளிக்காட்டிக் கொள்கிறார்கள். சிலர் அதையே புலம்பலாக வெளிப்படுத்திவிட்டு தனது அன்றாடப் பணிக்குத் திரும்பி விடுகிறார்கள். ஒரு சிலர் இழப்பைத் தாங்க முடியாமல் தன் மனதிற்குள் அதைப் போட்டு அழுத்தி அழுத்தி தம்மையும் அந்த வேதனைக்குள் ஆட்படுத்திக் கொள்கிறார்கள். ஆனால் ஒரு சிலரோ துன்பத்தின் வலியை மறக்க, அந்த வலியிலிருந்து விடுபட இலக்கியத்தை நாடி தமது எண்ணங்களை வெளிப்படுத்தி அமைதி அடைகிறார்கள்.

தன் மனதிற்கு மிக நெருக்கமான அன்பை விதைத்துச் சென்ற, ஒரு மிகப்பெரிய வாழ்க்கையை வாழ்ந்து காட்டி வழிகாட்டலை அமைத்துக் கொடுத்த அம்மாச்சி எனப்படும் அம்மாவின் அம்மாவைப் பற்றி பேரன் எழுதும் ஒப்பாரிப் பாடலை இந்த நூல் மிக சிறப்பாக மாற்றிக் காட்டி இருக்கிறது.

தன் தாய் தன் மீது காட்டும் பிரியத்தைவிட, பாசத்தைவிட தனது பாட்டி காட்டிய பரிவும் பாசமும் அனுபவமும் அவருக்குள் மிகப்பெரிய உயரத்தை எட்ட வைத்திருக்கிறது. அப்படிப்பட்ட பாட்டி திடீரென்று மறைந்த போது அந்த வலியை, வேதனையை வெளிப்படுத்துவதற்கு அவர் ஒப்பாரிப் பாடலைத் தேர்ந்தெடுத்து தனது ஆற்றாமையை வெளிப்படுத்தும் பண்பை சிறப்பாக வெளிக்கொணர்ந்திருக்கிறது இந்த நாட்டுப்புற இலக்கிய நூல்.

நூலின் தொடக்கத்தில் அமைந்துள்ள நாட்டுப்புறப் பாடல் பற்றிய முன்னுரை நாட்டுப்புற இலக்கியத்தின் மீதான நமது மனதுக்குள் கிடக்கும் வினாக்களுக்கு சிறந்த வழிகாட்டியாக அமைகிறது.

“”நாட்டுப்புற இலக்கியங்கள் நாட்டுப்புற மக்களின் நம்பிக்கையையும் நம்பிக்கைக்குரிய செயலையும் எண்ணங்களையும் பிரதிபலிக்கும் மண்வாசனை கலந்த மகத்தான மக்கள் இலக்கியங்கள் என்று முனைவர் ச. அகத்தியலிங்கம் கூறுகிறார்””.(முன்னுரையில் ஆசிரியர் பக்கம் 20)

"விண்ணையும் மண்ணையும் மலைகளையும் பொழில்களையும் நதிகளையும் மாறுபடும் பருவங்களையும் வர்ணிப்பதோடு மனித உள்ளத்தெழுகின்ற வெவ்வேறான உணர்ச்சி பாவங்களையும் நாட்டுப்புறப் பாடல்கள் வெளியிடுகின்றன என்கிறார் எர்வின். (முன்னுரையில் ஆசிரியர் பக்கம் 22.)"

கிராம மக்கள் நிறைய பெண் தெய்வங்களை தங்களது வாழ்வில் ஒன்றெனக் கொண்டு வழிபடும் பழக்கம் உடையவர்கள். அதேபோல தம் மனதுக்கு நெருக்கமானவர்கள் மறைந்துவிடுகையில் அவர்களையும் தெய்வமாக வழிபடத் துவங்குவார்கள். கிராமங்களைச் சுற்றி பல்வேறு பெயர்களில் பெண் தெய்வங்கள் காட்சியளிப்பதன் பின்னணியைப் பற்றியும் இந்நூல் நமக்கு தகவல்களை அளிக்கிறது.

இதில் அவர் தனது பாட்டியைப் பற்றிய குணநலங்களை மட்டுமல்லாமல் அவர் வாழ்ந்த வாழ்வை, தனது சொந்தங்களை மதித்து அவர்களின் வாழ்வு மேம்பட உதவிய தன்மையை, அவர் செய்த வேலைகளின் பாங்கை, தனக்கென சேர்த்து வைத்த சொத்துக்களை, தன் உற்றார் உறவினர்களை அவர் பேணிக்காத்த பண்பை, எளிய கைமருத்துவத்தில் தனது உறவினர்களுக்கு நோயை குணப்படுத்திய விதத்தை, கிராமங்களில் நிலவும் பல்வேறு விதமான உணவு முறைகளை அவர் சமைத்துப் போட்டு தனது வாரிசுகளை உருவாக்கிய ஆளுமையை என ஒவ்வொரு குணங்களையும் ஒப்பாரிப் பாடலில் வெளிப்படுத்தி உயர்ந்த இடத்தில் தனது பாட்டியை நிறுத்தி வைக்கிறார்.

சிறு வயது முதல் தன் கைபிடித்து தன்னை வளர்த்து ஆளாக்கிய அந்த ஆளுமையை அவரின் நினைவுகளை காலம் என்றென்றும் மறக்காமல் இருப்பதற்காக ஒப்பாரிப் பாடலென எழுதி கல்வெட்டுகளைப் போல நிலைக்கச் செய்திருக்கும் ஆசிரியரின் முயற்சி பாராட்டத்தக்கது.

"அழகான கும்பாவட்டி
அது நிறையா முட்டச்சோறு
பொழுசாயக் கொடுத்துப்புட்டு-ஞானத்தங்கமே
போனவளே வரக்காணுமே.. சின்னப்புள்ள பேத்தியே!"

பக்கம் 38

"ஆத்துக்குள்ள கிளிஞ்சி
ஆராய்ஞ்சு பொறுக்கி வந்து
கொழம்பு வச்சுக் கொடுத்தீகளே-ஞானத்தங்கமே!
பொலம்ப வச்சுப் போயிட்டீகளே- சின்னப்புள்ள பேத்தியே!"

பக்கம் 39

இந்த நூலினை வெறும் ஒப்பாரிப் பாடலாக மட்டும் நாம் வாசித்துவிட்டு கடந்து சென்றுவிட முடியாது. ஆதியில் இருந்து தமிழர்கள் தம் வாழ்க்கை முறையோடு பயன்படுத்திய ஒவ்வொரு பொருட்களையும் நினைவு கூற வைத்து கிராமங்களில் இன்று தொலைந்து போன வாழ்க்கை முறையையும் திரும்பிப் பார்க்க வைக்கிறது. கிராமத்து மனிதர்கள் தம் வாழ்க்கையோடு இயற்கையையும் பிணைத்து பயன்படுத்திய பொருட்களையும் இதன் வழியாக அறிந்து கொள்ள முடிகிறது. புதுப்புது கலைச்சொற்களை இந்த பாடல் எடுத்துக் கூறியிருக்கிறது.

இந்த பாடல்களை நாம் வாசித்து மீள்கையில் ஒரு அழகிய கிராமத்தின் இன்பமான குடும்பத்திற்குள் நாமும் சிறந்ததொரு ஆளுமையை பெற்ற வாரிசாக வளர்ந்து நிற்க முடியும் என்பதை எடுத்துக் கூறுகிறது சின்னப்புள்ள பேத்தியே என்ற இந்த ஒப்பாரி பாடல் இலக்கியம்.

இந்த நூலில் ஆசிரியர் சுமார் 50 பக்கங்களில் ஊர், அழகு, குலம், வாழ்க்கை, சொந்தங்கள், சொத்துகள், வேலைகள், விரதங்கள், மருத்துவம் போன்ற தலைப்புகளில் தனது பாட்டியின் அன்றாட செயல்பாடுகளையும் அவரின் பண்பு நலன்களையும் சமுதாயத்தில் அவர் எவ்விதமான நற்செயல்களை விரித்துச் சென்று மிகப்பெரிய பாதையை பின்வரும் சந்ததியினருக்கு அமைத்துக் கொடுத்திருக்கிறார் என்பதைப் பற்றியும் அழகான நாட்டுப்புற இலக்கியமாக எடுத்துக் கூறி ஒப்பாரிப் பாடலையும் உயர்ந்த இடத்திற்கு எடுத்து சென்றிருக்கிறார்.

சுமார் 50 பக்கங்களுக்கு சொற்பொருள் அகராதி வழங்கப்பட்டிருக்கிறது. அதில் கூறப்பட்டுள்ள ஒவ்வொரு சொற்களுக்கான பொருளும் நாம் இன்று பயன்படுத்தாத சொற்களாகவும் கிராமங்களில் கொஞ்சம் கொஞ்சமாக வழக்கொழிந்துவரும் வாழ்வுமுறைகளாகவும் காணப்படுகின்றன. கன்னிப் பொங்கல், காளைப்பொங்கல், காது வளர்த்தல், கானந்துறை என சொற்களின் புதுப்புது அர்த்தங்களை இந்நூலிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது.

அகப்பை, அகப்பையின் வகைகள், அத்துப்போகும், அலுப்பு, அவிச்செடுத்தல், இலுப்பக்களம், உப்புக்கறி, உரம்பு கட்டல், ஊர்த்துறை, ஊரைத் தண்ணீர், ஒட்டான் குழி, கச்சேரிப் பத்திரகாளி, கட்டுச்சாராயம், கம்பறகத்தி, கருத்தழகி, கிளிஞ்சி, கும்பாவட்டி, குழிதாழி, குந்து, கூசம், கைச்சப்பை, இன்னிக்கி சேத்து உழவு, சேம்பந்தண்டு, சால்ப்பானை, சோத்துப்போனி, திருகுகல்லு, தொண்டை முள்ளு என ஒவ்வொரு சொற்களுக்குமான பொருள் விளக்கத்தை அறிகையில் புதுப்புது வாழ்க்கை முறையை அறிந்து கொள்ள முடிகிறது. இதில் தனது குழந்தைகளுக்கு எவ்விதமான உணவுகளை சமைத்துப் பரிமாறி அவர்களை வளர்த்து ஆளாக்கினார் என்பது பற்றிய பட்டியல் மிக நீண்ட

ஒன்றாக விரிந்து நிற்கிறது. இவ்வளவு உணவு வகைகள் இன்று கிராமத்தில் பயன்படுத்தப்படுகின்றனவா என்றால் அது ஐயத்திற்குரியதே.

தனது பாட்டியின் பிறந்த ஊர் மற்றும் புகுந்த ஊர் பற்றிய வர்ணனைகளில் ஆரம்பித்து பாட்டியின் அழகைப் போற்றி அவர் பிறந்த குலத்தையும் புகுந்த குலத்தையும் பெருமைப்படுத்தி சொந்தங்களை எவ்வாறு அவர் கையாண்டு அவர்களுக்கு எவ்வகை உணவு வகைகளைப் பரிமாறினார் என்பதைத் தெளிவாக விளக்கி தனது வாழ்க்கையில் சொத்துக்களாக தான் வைத்திருந்தவற்றை எப்படி எல்லாம் பின்வரும் தலைமுறையினருக்கு பயன்படுத்துவதற்கு விட்டுச் சென்றார் என்பதைக் கூறி மருத்துவத்தில் முடித்து ஒப்பாரியை நிறைவு செய்கிறார் ஆசிரியர்.

ஒவ்வொரு வரிகளும் வாசிக்கையில் நம் கண்களுக்குள் கண்ணீர் அலை அடிக்கிறது. இதயம் கனத்துப் போகிறது. நம் நெஞ்சுக்குள் ஏதோ ஒரு பாரம் இறங்கி நம்மை அடுத்த கட்டத்தை நோக்கி நகர்த்த விடாமல் அழுத்திச் செல்கிறது. ஒப்பாரிப் பாடலின் பயன் என்பது அதை பாடுபவருக்கான மனவலியைப் போக்கி அவரை இயல்பானவராக மாற்றிக் காட்டுவதே. அவ்வகையில் சின்னப்புள்ள பேத்தியே நூலாசிரியருக்கு ஒரு மிகப்பெரிய ஆறுதலைத் தந்திருக்கிறது என்பதே உண்மை.

“எங்களுக்கு காய்ச்சல் வந்தால்
மந்திரிக்க கூட்டிச் சென்றாய்
உங்களுக்கு வந்த போது- ஞான தங்கமே மந்திரமும் பலிக்கலையே சின்னப்புள்ள பேத்தியே”

“”ஊரு சனத்துக்கு எல்லாம்
ஒப்பாரிகள் படுச்சீகளே
உங்களுக்குப் படிக்கையிலே-ஞானத்தங்கமே
ஒப்பாரியும் மறந்ததென்ன சின்னப்புள்ள பேத்தியே””

இந்த இரண்டு அடிகள் போதும் இந்நூலின் முழு வரலாற்றை எடுத்துச் சொல்ல. தனது அம்மாவின் அம்மாவான பாட்டியை வர்ணிக்கும் அழகு என்ற தலைப்பிலான ஒப்பாரிப் பாடலில் இப்படி ஆரம்பிக்கிறார் ஆசிரியர்

“நரச்ச முடியழகி
நாக்கினிச்ச சொல்லழகி
தேங்காய் முடியழகி
தெளிஞ்செடுத்த சொல்லழகி
கன்னக் குழியழகி
காது வளர்த்த பேரழகி
நெத்தியில பச்ச குத்தி
நேராக வழிநெடுத்து
வட்டுக் கருப்பட்டியே
வாசமுள்ள ரோசாப்பூவே”

இந்த வரிகளை மேலோட்டமாக வாசித்துக் கடந்தால் வெறும் ஒப்பாரிப் பாடலாக மட்டுமே நின்றுவிடும். ஆனால் இவற்றிற்கான சொற்பொருளை அறிந்து நிற்கையில் பெண் என்பவள் எவ்விதமான செயல்களை முன்னெடுத்தாலும் தேர்ந்தெடுத்த வார்த்தைகளைக் கொண்டு தனது சொந்தங்களையும் மதித்து அவர்களையும் மாண்புள்ளவர்களாக உருமாற்றும் குணநலமும் கொண்டவர்களாக இருத்தல் என்பது காலத்தின் அவசியம். அதையே இந்த வரிகளும் எடுத்தியம்புகின்றன.

ஒரு கிராமத்தின் ஏதோ ஒரு மூலையில் பிறந்தோம் வளர்ந்தோம் இறந்தோம் என்று முடிந்துவிடும் ஏதோ ஒரு பாட்டன் பாட்டியின் கதையல்ல இது. பின்வரும் சந்ததியினரை வளர்த்து ஆளாக்கி உடன் பிறந்த சகோதரர்களின் குணங்களைக் கண்டு அவை பிடிக்காமல் ஒதுக்கி வைத்து தன்னந்தனி மனுஷியாக நின்று தனது வாரிசுகளை மண்ணில் நல்ல குணநலம் மிக்கவர்களாக உருவாக்கிக் காட்டிய ஒரு சாதனைப் பெண்ணின் முழு வரலாற்றை கிராமத்தின் இயல்போடும் வாழ்க்கை முறைகளோடும் அறிந்து கொள்ள முடிகிறது. நூலின் நாயகி அழகம்மை நாச்சியார் பயன்படுத்திய பொருட்களின் புகைப்படங்கள் நூலுக்கு அழகு சேர்க்கின்றன.

அவர் தொடர்பான நினைவலைகளென நிற்கும் புகைப்படங்களும் நம்மை ஈர்க்கின்றன.

இனிவரும் தலைமுறை இந்நூலை வாசிக்க நேர்கையில் இப்படியான கிராம அமைப்புகள் தாய் வழி சமூகத்தை எப்படி அடுத்த தலைமுறைக்கு கடத்துகின்றன என்பதை உணர்த்தும்படியான நூலாகவும் இந்நூல் உருமாறி நிற்கிறது.

நிறைய நூல்களை ஆராய்ந்து செவி வழிச் செய்திகளுக்கான விளக்கங்களைத் தேடித் தேடிக் கண்டறிந்து அவற்றையும் தனது பாடல்களுக்கு இடையில் இணைத்து நல்லதொரு நாட்டுப்புற இலக்கியத்தை படைத்திருக்கும் நண்பர் ஜெய வீர சசிக்குமார் மேலும் மேலும் அருமையான படைப்புகளை தமிழுக்கு நல்கிட நல்வாழ்த்துகள்.

ஜெயவீர சசிக்குமார்
நாட்டுப்புற இலக்கியம்
முதல் பதிப்பு: ஜனவரி 2023
பக்கம்: 134
விலை: ரூபாய் 100
பதிப்பகம்: சேவகன் பதிப்பகம் பழனி



மு தனஞ்செழியன்.

குடல்கள் மீது முளைத்த கால்களால் ஆடிக்
கொண்டிருந்தான்.
அப்படி ஒரு குதியாட்டம்.
காலை இட்டிலி துணுக்குகள்
விழுந்த குடல்கள் செரிமானத்தோடு நின்று
பார்த்துக்கொண்டிருந்தன.
பசி கண்களைத் திறந்து
பார்த்துக் கொண்டிருந்தது.
சில்லறைக் காசுகள் விழாத வெறும் துணியை.

ஃ

ரோமங்கள் சொட்டச் சொட்ட நனைந்து
மேலே எழும்பும் மந்தாளி கடல் பறவை.
கடலுக்கு சிறகு முளைத்து அவை பறந்து
விடாமலிருக்க அதன் மீது எச்சம் இட்டுச்
செல்கிறது.

ஃ

நிலா சூரியனை நோக்கி நகர்ந்து விட
நினைந்துக்கொட்டிருந்தது.
செயற்கை கோள்கள் செய்த சாதியை பாய்
விரித்து நிலாவை பேரண்டத்தில் பூட்டி
வைத்தனர்.

ஃ

கணக்கு வாத்தியார் கரைத்த சாக் பீஸ்
தூள்களை எல்லாம் சேர்த்து வைத்தால் ஒரு
நிலாவையே உருட்டி விடலாம்.

ஃ

எரிய மறுக்கும் சடலங்களை அப்புறப்படுத்தி
விட்டு.
'இனி எரியும் பிணங்களை மட்டும்
கொண்டுவரவும்' என பலகை எழுதி
வைத்தார்கள் எல்லா சுடுகாட்டிலும்.

ஃ

வானில் தெரியும் நட்சத்திரங்கள் அனைத்தும்
பூமியிலிருந்து அனுப்பப்பட்டவை.
அவை பூமிக்கு வர மறுக்கின்றன.
இங்கே பாலியல் தொல்லை அதிகம்.

ஃ

கறுத்துக் கொண்டிருந்த வானத்தின் எல்லா
திசைகளையும் பார்த்துக் கொண்டிருந்தாள்.
பசிக்கு அழ வேண்டிய குழந்தையும் தயங்கிக்
கொண்டிருந்தது.

வாசுகி.நடேசன்

யாழ்ப்பாணத் தமிழரும் தமிழும் - உரைநடைத் தமிழ்

யாழ்ப்பாணத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலேயே தமிழர் சிறந்த பண்பாடுடன் வாழ்து வந்துள்ளனர்.இவர்கள் நாகர் என்ற இனக்குழுவாக அடையாளம் காணப்படுகின்றனர், பெருங்கற்பண்பாட்டுக்கால ஈமத்தாலிகள்,பிராமி தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட கற்கள், பொருட்கள்,நாகசிலைகள் முதலியன கந்தரோடை,ஆனைக்கோட்டை, நவாலி,வட்டுக்கோட்டை பகுதிகளில் கண்டெடுக்கப்பட்டன. இவற்றில் மணிநாகன் என்ற பெயர் பிராமித் தமிழில் எழுதப்பட்டுள்ளதாக பேராசிரியர்

சி.பத்மநாதன் குறிப்பிடுவர்

இத்தகைய பாரம்பரியம் கொண்ட யாழ்ப்பாணத்தவர் பேசும் மொழியில் பல பழைய சொற்கள் வழக்கி வருகின்றன.

"தோய்தல் என்பதே நீராடுவதற்கு சரியான தமிழ் வார்த்தை. தோய்தல் என்றால் ஒன்றிலே முழுமையாக அமிழ்ந்து போதல் என்று பொருள்.

அந்தத் தொல்காப்பியத் தமிழை ஒரு வேலைக்காரனே சாதாரணமாகப் பேசுகின்றான். தூய தமிழ் வாழ்ந்து கொண்டிருப்பது தமிழ்நாட்டில் அல்ல. அது யாழ்ப்பாண மக்களாலேயே பேசப்படுகின்றது. அங்குதான் அது வாழ்கின்றது."

கிருபானந்த வாரியார்

இவ்வாறு பல இந்திய தமிழறிஞரும் யாழ்ப்பாணத் தமிழைப் போற்றுவதற்குக் இடம் தருவதாய் யாழ்ப்பாணத்தமிழ் இருப்பதற்கு

சூழலியலே காரணம் எனலாம். யாழ்ப்பாணம் தனித் தீபகற்பமாய் இருப்பதால் தமிழ்நாடு போன்று வெளி மாநிலங்களின் சொற்கள் பல வந்து சேருவதற்கு இடம் இல்லை. எடுத்துக்காட்டாக சோற்றுக்கு பதிலாக rice என்பதையும் சாதம் என்பதையும் பொதுமக்கள் பரவலாகப் பயன்படுத்துவார்களானால் சோறு என்ற சொல் காலகதியில் மறைந்து வெறும் இலக்கியச் சொல்லாகவே அமைந்துவிடும்.

யாழ்ப்பாணத் தமிழராகிய நாமும் மிகுதியான தமிழ்ப் பிழைகளை விடுகிறோம் என்பதே நிதர்சனமான உண்மை. இதனை இக் கட்டுரை வாயிலாக அறியமுடியும் இக்கட்டுரை யாழ்ப்பாணத்து அறிஞர் உரைநடையைக் கையாள்வதில் எத்தகைய சிறப்புடையவர்களாக விளங்கினர் என்பதையும் இன்று பொதுவாக ஊடகங்களாலும் பொது மக்களாலும் இந்த உரைநடை எவ்வாறுகையாளப் படுகின்றது என்பதையும் பருந்துப் பார்வையாக நோக்குகிறது.

ஆறுமுக நாவலரும் உரைநடையும்

ஆறுமுக நாவலர் நுண்மையான நோக்குடன் மிகவும் ஆழமாகத் தமிழைக் கற்றறிந்தவர்.அதுமட்டுமல்லாது ஆங்கில அறிவும் நிறைவாகக் கைவரப் பெற்றவர். ஆங்கில வழி பெற்ற உரைநடை அறிவை தமிழில் பிழையின்றிக் கையாண்டு தமிழுக்கு புதியதொரு உரைநடையை இவர் அறிமுகப் படுத்தினார்.

இவர் திருமுருகாறுப்படை,கோயிற்புராணம் என்பவற்றுக்கு உரை எழுதியதுடன்..பிரபந்ததிரட்டு என்ற பெயரில் சைவ சமயத்துக்கு முரணான கருத்துகளுக்கு கண்டனமும், கந்தபுராண கதையை வசணமாகவும் எழுதியுள்ளார். மேலும் 2ஆம் 4ஆம் பாலபாடங்கள் ஆகியன இவர் எழுதிய பாடநூல்களாகும்.

இவர் தாம் எடுத்துக்கொண்ட விடயத்துக்குப் பொருத்தமான வெவ்வேறு நடைகக் கையாண்டமையை இந் நூல்கள் வாயிலாக நன்கு அறியலாம். எனினும் புராண வசணங்களும் பால பாட நூல்கலுமே இருபதாம் நூற்றாண்டுக்கான முன்னோடிகளாகக் கொள்ளத்தக்கன.

சிறு சிறு வாக்கிய அமைப்பு,இயற்சொற்களையே கையாள்வது, குறியீடுகளைப் பயன்படுத்துவது என்பன இந்நூல்களில் அவர் பயன்படுத்திய தனித்தன்மைகளாகும்.

பண்டிதமனி சி கணபதிப்பிள்ளை.

நாவலர் வழிவந்த தமிழறிஞரில் இவரும் ஒருவர். பழமையான தமிழ் சைவ மரபுகளிலே அழுத்தமாகக் காலூன்றினாலும் அவற்றை எழுதும் வகையில் புதுமையைக் கையாளும் துணிவும் திறமையும் இவரிடம் இருந்தன.

சிறுசிறு வாக்கியங்களிலே இலக்கியச் சுவையோடும் அங்கதச்சுவையோடும் அழுத்தம் திருத்தமாகத் தமது கருத்துக்களைப் புலப்படுத்தினார். எழுவாய் பயனிலை குன்றிய துண்டு துண்டான சொற்றொடர்களை வாக்கியப் பொருளமைதி குன்றாத வகையில் பலவிடங்களில் இவர் கையாண்டுள்ளார்.வேண்டும் இடங்களில் இலக்கிய சமய நூல் கூற்றுக்களை வாக்கிய உருவிலே தருவதும் இவரது உரைநடைச் சிறப்பாகும்.

இவரது இலக்கியவழி என்ற ஒருகட்டுரைத் தொகுப்பிலேயே கூட இத்தன்மைகளை நன்கு காணலாம்.

பேராசிரியர் வி. செல்வநாயகம்

தமிழிலக்கிய வரலாறு,இலக்கியத் திறனாய்வு ஆகிய துறையில் பெரும் பணியாற்றிய செல்வநாயகம் அவர்களது உரைநடை மிகவும் சிறப்பானது. தமிழ் இலக்கிய வரலாறு, தமிழ் உரைநடைவரலாறு ஆகிய இரு நூல்களும் இன்றுவரை தமிழை உயர் வகுப்பில் கற்கும் மாணவருக்கு நல்வழிகாட்டிகளாக உள்ளன. நடையில் தெளிவும் எளிமையுமே இவரது தனித்துவப்பண்புகள் எனலாம்.

செறிவு, சிந்தனை வீச்சு,தருக்கவியல் கடவாத கட்டொழுங்கு என்பன அமைந்த இவரது உரைநடை,இலக்கண விதிகளுக்கு அமைவானதாயும் அமைந்திருக்கும்.

இவ்வாறு பல தமிழறிஞரின் நடையை எடுத்துக்காட்ட இயலுமாயினும் இங்கு இவ்வளவில் நிறுத்தி தமிழ் உரை நடை இன்று பொதுவாக எவ்வாறு அமைந்திருக்கிறது என்பதை நோக்கலாம்

காலத்தின் போக்குக்கும் தேவைகளுக்கும் ஏற்ப ஒரு மொழி தன்னை இசைவாக்கம் செய்வது இன்றியமையாததே. ஆனாலும் அடிப்படை மொழிக்கட்டமைப்பை மீறுமானல் மொழி அழிவை நோக்கிச் செல்லும் வாய்ப்பு அதிகமாகிவிடும். ஒரு மொழி எந்தக் கருத்தையும் உள்ளீர்க்கும் திறனும் உணர்ச்சி வெளிப்பாட்டு ஆற்றலும் கொண்டமைய வேண்டும். இவ்வாறான பண்புகளை கொண்டமைவதுடன் மொழி பிழையற அமைந்தாலே அது முழுமையடையும். இந்த முழுமை தமிழுக்கு இன்றுள்ள நிலையில் அமைந்து விட்டதா என்பதே கேள்வி.

சொற்பிழைகள், வாக்கிய அமைப்புப் பிழைகள், புத்தாக்கச் சொல் மயக்கங்கள், ஆங்கிலம் போன்ற பிற மொழிச் சொற்களை வரையறை கடந்து கையாள்வதனால் ஏற்படும் கருத்துச் சிதைவுகள் என்ற பலவும் இன்று தமிழின் வளர்ச்சிக்கு தடைகளாக உள்ளன.

இத்தகைய பிழைகளை ஆசிரியரான நாமும் மாணவரும் பொதுமக்களும் மட்டுமன்றி பல்வேறு ஊடகங்களும் செய்து வருகின்றன. அவற்றுள் சிலவற்றினை இங்கு சுட்டிக்காட்ட விழைகிறேன்

கருத்துப் புலப்பாட்டினைத் தெளிவாகவும் மயக்கமின்றியும் தருவதே உரைநடையின் முதன்மையான இலக்கு.காரணகாரியத் தொடர்பும் கருத்துரீதியான ஒழுங்கு முறையும் உரை நடைக்கு இன்றியமையாதன. சொற்களை அவற்றுக்குரிய இடங்களில் அமைக்காது சிதற விடுவதால் நேர்மாறான பொருள் பெறப்படும்.

வாக்கியங்களில் அமையும் வழுக்கள்

"மன்னார் மாவட்டத்தில் மோசமான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது."

மோசமான ஆசிரியரின் பற்றாக்குறை வரவேற்கக் கூடியதே.

"மன்னார் மாவட்டத்தில் ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை மோசமான எண்ணிக்கையில் நிலவுகிறது."

என்பதே சொல்லவந்த கருத்தாக உள்ளது.

"அம்மா நேற்று மாலை கிராமத்தையே அதிரவைத்த அந்த வெடிச்சத்தத்தைக் கேட்டதிலிருந்து ஓரளவு தேறியிருந்த அம்மாவின் மன நிலை மீண்டும் பாதிக்கப்பட்டிருந்தது."

இது சிறுகதை ஒன்றில் வந்துள்ள வாக்கியம்

இவ்வாக்கியத்த்தில் பொருள் 'நேர்மாறாக வுள்ளதையும்',வேண்டாத சொல் வந்திருப்பதையும் காணலாம்.

கிராமத்தையே அதிரவைத்த அந்த வெடிச் சத்தத்தக் கேட்டதிலிருந்து ஓரளவு தேறியிருந்த அம்மாவின் மன நிலை என்பது எழுதியவரின் கருத்துக்கு நேர்மாறானது.

"(முன்பு) ஓரளவு தேறியிருந்த அம்மாவின் மனநிலை, கிராமத்தையே அதிரவைத்த அந்த வெடிச்சத்தத்தைக் கேட்டதிலிருந்து மீண்டும் பாதிக்கப்பட்டது."

"அம்மா" என்ற தொடக்கச் சொல் தேவையற்றது.

தவறு-- "தயவு செய்து இந்தப் பாதையால் செல்பவர்கள் தங்கள் வாகனங்களில் இருந்து இறங்கிச் செல்லவும்."

சரி-- "இந்தப்பாதயில் (வாகனங்களில்) செல்பவர்கள் தயவு செய்து வாகனங்களில் இருந்து இறங்கிச் செல்லவும்."

தவறு.-" கந்தயா. செல்வன்,முன்னாள் மானிப்பாய் மகாவித்தியாலய அதிபர் நேற்று இங்கு வந்திருந்தார்.

சரி- "மானிப்பாய் மகாவித்தியாலய முன்னாள் அதிபர் கந்தயா - செல்வன் நேற்று இங்கு வந்திருந்தார்:"

பொருட் பொருத்தமற்ற வாக்கியங்கள்

"காலம் சென்ற சம்பந்தன் இலண்டன் சென்றார்."

காலம் சென்றவர் எவ்வாறு இலண்டன் செல்ல முடியும்?

"காலமாவதற்கு சில காலத்துக்கு முன்பு சம்பந்தன் இலண்டன் சென்றார்."

"புத்திசுவாதீனம் உள்ள மனநோயாளிகள் தப்பி ஓடினர். "

"புத்தி சுவாதீனம் உள்ள மனநோயாளிகள்" என்ற சொற்றொடர் அது தரவேண்டிய கருத்துக்கு நேர்மாறான பொருளைத் தருகிறது.

சுவாதீனம் (சுவ +ஆதீனம்)தற்கட்டுப்பாடு - புத்தியை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பவர் மனநோயாளி ஆக முடியாது.

ஆக "புத்தி சுவாதீனம் அற்ற மனநோயாளிகள் தப்பி ஓடினர்" என அமைக்க வேண்டும்.

எழுவாய் பயனிலைகள் அமைய வேண்டிய முறை.

வினையடியாகத் தோன்றும் பால் காட்டும் சொற்களும் (வினைமுற்று) பெயரடியாகத்தோன்றும் சொற்களும் (பெயர்) தொடர்கையில் ஒருபாலுக்குரிய சொல் மற்றொரு பாலுக்குரிய சொல்லோடு மயங்குதல் தவிர்க்கப்பட வேண்டும்

அவன் -வந்தான்

அவள் வந்தாள்

அவர் வந்தார்

அது -வந்தது

அவை வந்தன.

பால் மட்டுமன்றி திணை இடம் காலம் வினா விடை என்பவற்றிலும் ஒன்று பிறிதொன்றுடன் மயங்காதிருப்பது இன்றியமையாதது என இலக்கணம் கூறும்.

மேலே எடுத்துக்காட்டியவை எளிய தனி வாக்கியங்கள். இவை போன்றல்லாது பெயரடைகள்,வினையடைகள், இணைப்புச் சொற்கள், இடைச் சொற்கள் கொண்டு விரிக்கப்படும் தொடர் வாக்கியங்கள்,ஒன்றோ ஒன்றுக்கு மேற்பட்டோ அமையும் துணை வாக்கியங்களை உள்ளடக்கிய கலப்பு வாக்கியங்கள் என்பவை ஆக்கப்படும்பொழுதே சிக்கல்கள் உண்டாகின்றன. பல்வேறு வழுக்கள் உண்டாகின்றன.

எ-டு

"சமகாலத்தின் அறிவியற்றேவைகளை நிறைவு செய்வதற்கு உகந்ததான கலைச்சொற்களை உருவாக்கும் பணி மிகவும் இன்றியமையாதனவாகும்"

இந்த வாக்கியத்தில் "உகந்ததான" என்னும் ஒருமைப் பெயரடை

"கலைச் சொற்களை" என்னும் பன்மைப் பெயர் சொற்களுடனும் "பணி" என்னும் ஒருமைப் பெயர் "இன்றியமையாதன" என்னும் பன்மை வினை முற்றுடனும் மயங்கின.

"இக்கற்கை நெறிகளில் கற்க விரும்புகிறவர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்திசெய்து,முத்திரை இடப்பட்ட தபாலுறையையும் இணைத்து அனுப்பி வைக்கப்படும்" என்று அலுவலர் தெரிவித்துள்ளார்.

இங்கு விரும்புபவர்கள் என்ற பெயருக்குப் பயனிலையாக அனுப்பிவைக்கப்படும் என வருவது தவறு, விரும்புபவர்கள் ....அனுப்புதல் வேண்டும் என அமைத்திருக்க வேண்டும்

தவறு---"நேற்று கோப்பாயில் படைகள் சுற்றி வளைத்தனர்"

சரி----"நேற்று கோப்பாயில் படைகள் சுற்றி வளைத்தன."

தவறு --"பிரபாகரன் தனது குறிக்கோளினின்றும் எக்காலத்திலும் தவறியவரல்லர்."

சரி --"பிரபாகரன் தமது குறிக்கோளினின்றும் எக்காலத்திலும் தவறியவரல்லர்"

எல்லா இடங்களிலும் எழுவாய் பயனிலை செயப்படு பொருள் என்பவை வெளிப்பட்டுத்தெரிவது சிறந்தது என இலக்கணகாரர் கருதுவர். ஆனால் பேசும் போதும் இலக்கியங்களிலும் சிறப்பாகப் புனைகதைகளிலும் இவை மறைந்தும் வருவதுண்டு.

தோன்றா எழுவாய்

நாளை பாடசாலைக்கு வருவாயா? நான் தோன்றா எழுவாய்.

நேற்றுத்தான் ஊருக்குப் போனார், அவர் தோன்றா எழுவாய்,.

ஆனால் சில வாக்கியத்தொடர்களில் எழுவாய் வெளிப்படாது இருப்பது கருத்துத் தெளிவின்மைக்குக் காரணமாகிவிடும்.

குமரன் சிறந்த விளையாட்டு வீரன்.நன்றாகப் படிப்பவன். மதுரன் அவன் நண்பன். இருவரும் பாடசாலக்குச் செல்லும்போது அவன் ஆசிரியரைக் கண்டான்.

இங்கு அவன் என்ற எழுவாய் வந்தபோதும் ஆசிரியரைக் கண்டவன் குமரனா.மதுரனா அல்லது மூன்றாவது நபரா என்பது துலக்கமாக இல்லை.

எனவே இவ்விடத்தில் எழுவாயைத் தெளிவாக அமைப்பது கட்டாயமாகிறது.

ஆனால் ஒருகாட்சியை ஆற்றல் நிறைந்த எழுத்தாளன் உணர்ச்சிபூர்வமாகவும் தங்கு தடையின்றி எதார்த்தமாகவும் வெளிப்படுத்துகையில் பயனிலைகள் கூட அவனுக்கு வேண்டாதனவாகிவிடுகின்றன.

"எங்கும் மௌனம், ஏகாந்தப் பெருங்ககனம் ....தூரத்திலே ஒரு நெருப்புச்சுடர் ....அவ்வளவுதான்."

பண்டிதமணி.சி கணபதிப்பிள்ளை

"குலம் அத்த நட்சத்திரம். அத்தம் அதமம் என்றார்கள் சாத்திரிமார்.

அவன் ராஜ துரோகமான காரியங்களில ஈடுபடுவான் என்றும்......

மிகப் பெரய கண்டங்களில் மாட்டிக்கொள்ள நேரும் என்றும்.....

மறியல் வீட்டுக்குப் போகின்ற பலன் கூட அவனுக்கு உண்டென்றும்.....

கிரகங்கள் யாவும் நீசதிசை அடைந்திருக்கின்றன வென்றும்......"

மோகவாசல் -ரஞ்சகுமார்

பிற மொழிச் சொற்கள்

பிற மொழிச் சொற்களைத் தேவைக்கு அதிகமாகப் பயன்படுத்துவது தவிர்க்கப்படுதல் வேண்டும் தேவையற்ற இடத்தில் ஒருகாலத்தில் வடமொழிச்சொற்கள் கையாளப்பட்டன. அதனால் மணிப் பிரவாள நடை உருவாகிற்று. தமிழில் ஆங்கிலச் சொற்களைப் பயன் படுத்தி எழுதுவது நீண்டகாலமாகவே இருந்துவருகிறது. இன்று உலகெங்கும் தமிழர் பரந்து வாழ்கிறார்கள். தாம் வாழும் இடத்தில் வெவ்வேறு மொழிகளைப் பேசுகிறார்கள். அம்மொழிச் சொற்கள் அவர்களை அறியாது அவர்களது பேச்சில் இடம் பெறுகின்றன. கால ஓட்டத்தில் அவை அவர்களால் படைக்கப்படும் இலக்கியங்களிலும் இடம் பெற்று விடுகின்றன. அதனால் தமிழ் தனது தனித்துவத்தை இழக்கிறது. அம்மொழியில் பரிச்சயமில்லாதவருக்குப் புரியாமலும் போகிறது.

"ஒரு நல்ல கதை எனக்குள்ளே ஓடிட்டே இருந்தது. அதை டெவலப் பண்ண ஆரம்பிச்சேன் காலையில் நியூஸ்பேப்பர் படிச்சாக்கூட அதுலே ஏதாவது கிடைக்குமான்னு பார்க்கிற அளவு தீவிரம். சட சடன்னு விபரங்களும் களமும் பிடிக்க நான் என்ஜினியருக்குக் கதை ரெடிபண்ணினேன். பாற் கடலை ராக்கட் வைச்சிருக்கிறமாதிரிக் கதை.."

"ஒரு நல்ல கதை எனக்குள்ளே ஓடிட்டே இருந்தது. அதை வளர்க்க ஆரம்பிச்சேன்.காலையில் செய்தித்தாள் படிக்கும்போதுகூட அதுல ஏதாவது தேடிப்பாக்கிற அளவு தீவிரம் ......" என இயன்றளவு தமிழ் சொற்களைப் பயன்படுத்தலாம்.

ஆக்–கச் சொற்கள்

ஒரு மொழியின் தேவைகள் காலந்தோறும் விரிவடைகின்றன. இந்த விரிவுக்கு அமைவாகப் புதிய சொற்கள் ஆக்கப்படுவது இன்றியமையாததாகும். ஒரு மொழியின் வெளிப்பாட்டுத் திறனும் வளமும் அதன் சொற்களஞ்சியத்திலேயே தங்கியுள்ளது.

சொற்களை ஆக்குகையில் அவை குறிக்க வேண்டிய பொருளின் முழுக் கருத்துமோ சாரமோ எப்பொழுதும் அமைந்து விடும் என்று எதிர்பார்த்தல் இயலாது. எடுத்துக்காட்டாக காகம் என்ற சொல் அது கா கா என்றுகரைவது கொண்டு உருவாக்கப்பட்ட பெயர்.. அதன் நிறம்,இயல்பு,இனம் என்பன காகம் என்ற சொல்லினுள் அடங்குவதில்லை. இது போன்றே ஒவ்வொரு சொல்லையும் நுணுகி நோக்கினால் அது தன்னளவில் முழுமையாய் இல்லாமையை கண்டுகொள்ளலாம்.. பெரும்பாலும் பெயர்கள் போருள்களை அடையாளம் காண்பதற்கு உதவுகின்றனவேயன்றி அவற்றின் சாரம் யாவற்றையும் உட்கொள்வன அல்ல. எனினும் சொற்பிரபஞ்சம் இன்றேல் பொருட் பிரபஞ்சமே இல்லை என்னும் அளவிற்கு சொற்களும் அவை அமைந்த மொழியும் எம்மீது ஆட்சி செய்து வருகின்றன. ஆனால் சொற்களுக்கு அடிமையாகாது அவற்றினை ஆட்சிசெய்து எமது உணர்ச்சி, அறிவுத்தேவைகளுக்குப் பயன்படுத்த வேண்டும்

மிகச் சிறிய வேர்ச் சொற்களோடு இலக்கண உறுப்புக்களை இணைப்பதனால் புதிய சொற்கள் உண்டாகின்றன.

எ-டு

இணை -இணைதல்,இணைத்தல் இணைவு, இணைப்பு.இணையம் இணைகை இணைந்தான் இணைந்த,இணைந்து.---

பண் -பண்பு பண்பாடு, பண்ணுதல், பண்ணிய,பண்ணும்,....

இங்கு ஆக்கச் சொற்களை மேலும் இரண்டு வகையில் பிரிக்கலாம்

1-பிற மொழியில் இருந்து தமிழ் மொழியின் ஒலியமைப்புக்கு ஏற்ப அமைந்தவை

ஒட்சிசன், னைதரசன், இலத்திரன்-

2-பிறமொழிச் சொற்களை,சொற்றொடர்களை மொழிபெயர்த்துக் கையாளல்

இயற்பியல், கணினி, பொதுநல வாயம்.....

மொழியியல் - linguistic

நிறுவனம்-institution

உரிமம் -license

மொழி நூல்- philology

உள நூல்-psychology

மகிழுந்து.-car

பேருந்து-bus

தொடருந்து. train

motivation- ஊக்கல் என உளவியல் அறிஞரும் motive- நோக்கம்- எனச் சட்டத்துறை அறிஞரும் தமது துறை சார்ந்த தேவைகளுகளின் அடிப்படையில் மொழிபெயர்க்கிறார்கள்.

ஆகவே தான் ஆங்கிலச் சொற்கள் சொற்றொடர்களைத் தமிழாக்கம் செய்வதற்கு அறிவியல் துறை,சட்டவியல் துறை,உளவியல் துறை, பொருளியல் துறை,மானிடவியல் துறை எனப் பல்துறை சார்ந்த அறிஞர்கள் தமிழறிஞர்களுடன் இணைந்து செயற்பட வேண்டும் என்பது எதிர்பார்ப்பாக உள்ளது.

மேலும் இன்று ஆங்காங்கே புதிய சொல்லாக்கங்கள் பல்வேறு பகுதியினரால் செய்யப்பட்டுள்ளன என்பது உண்மையே. ஆனாலும் அவை தமிழர் அனைவரையும் சென்றடைவதில்லை என்பதையும் கவனத்தில்கொள்ள வேண்டும். இவ்வாறு எல்லோரையும் ஒருசேர்த்து பொதுமையான சொற்களை உருவாக்குவதும் சவாலான முயற்சியாகவே இருக்கும்.

குமுகாயம்,மகிழுந்து பேருந்து,வானுந்து ஒலிவட்டில் இணையர் போன்ற இன்னோரன்ன புத்தாக்கச்சொற்கள் எல்லோரையும் அடைந்ததனவா என்பதும் கேள்வியாகவே உள்ளது.

ஒரு பொருள் குறித்த பல சொல்

பல பொருள் குறித்த ஒரு சொல்

ஒரு மொழி எவ்வளவு வளமுள்ளது என்பதையும் அம்மொழியைக் கயாளுபவர்களது அவதானத் திறன் எவ்வளவு மேலோங்கி இருந்தது என்பதையும் அம்மொழியின் சொற்களஞ்சியமே எடுத்துக்காட்டும்

ஒரு பொருளைக் குறிக்க ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களைக் கையாளலாம் அச்சொற்கள் அப் பொருளை அடையாளம் காணவும் உதவலாம் ஆனாலும் அவை யாவும் ஒரு கருத்தைத் தரமாட்டா. ஒரு சொல் ஒரு பொருளுக்கு அமையும் போது அதன் ஏதாவது ஒரு இயல்பையே குறிக்கும்.வேறொரு சொல் அதே பொருளுக்கமைகையில் வேறொரு தனமையைக் குறிக்கும். ஆனாலும் இவ்விரு சொற்களும் அக் குறிப்பிட்ட பொருளினை அடையளங் காணும் வகையில் பொதுவாக அமையும்.

1)ஒரு பொருள் பல சொல்

கதிரவன் -கதிர்-அவன் -கதிர்கள் உள்ளவன்.

வெய்யோநன் - வெம்மை தருபவன்

சேயோன் -சேய்மையில் உள்ளவன்

நட்பு-நண்ணுதல் -அருகிருத்தல்- ஒருவரது உள்ளத்துக்கு அருகிலிருத்தல்

கேண்மை- கேள் -உறவு நடபாகிய உறவு.

தோழமை- தொழு -ஆனிரையை கட்டி வைக்கும் குடில் -அன்பினால் கட்டுண்டு இருப்பது

2)பல பொருள் ஒரு சொல்

ஒரே சொல் வெவ்வேறு பொருளுணர்ச்சியை வழங்குகின்ற இடங்களும் உண்டு.

நல்ல மனிதர்,--நற்பண்புடையவர்

நல்ல மழை- பெருமழை

நல்ல பாம்பு--கொடிய பாம்பு

நல்ல கேள்வி--பொருத்தமான கேள்வி

நல்ல அடி -கடுமையான அடி

நல்ல சனம்- பெரும் எண்ணிக்கையிலான சனம். நற்பண்புடைய மக்கள்

பெரியவர்-வயதால் முதிர்ந்தவர்.

பெரியார்- அறிவு பண்புகளால் உயர்ந்தவர்.

பெரிய ஆள்- அற்பன்

பெரியஎண்ணம் தன்னைபற்றி தானே பெருமை கொள்ளல்

பெரிய சண்டை- கடுமையான சண்டை.

இவ்வாறு சொற்களை அதன் பொருள் உணர்ந்து மாணவர்கள் தம் கருத்தில் ஏற்றிக்கொள்வதற்கு ஆசிரியர் வழிகாட்ட வேண்டும்.

நல்ல கவிஞனிடமும் நல்ல புனைகதை

ஆசிரியனிடமும் இச்சொற்கள் கைகட்டிச் சேவகம் செய்யக் காத்திருக்கின்றன.

"சாலையிலே ஒரு கற்சிலை. தளர்ந்து நொடிந்துபோன தசைக் கூட்டத்திலும் வீரியத்தைத் துள்ளவைக்கும் மோகன வடிவம்; ஓர் அபூர்வ சிற்பி பூலோகத்தில் இதற்காகவென்றே பிறந்து தன் கனவையெல்லாம் கல்லில் வடித்துவைத்தானோ என்று தோன்றும் அவ்வளவு லாகிரியை ஊட்டுவது."

புதுமைப்பித்தன்.–சாப விமோசனம்

சொற்களுக்கு இடைவெளி விடலும் குறியீடுகளும் வாக்கியங்களில் குறியீடுகளைப் பயன்படுத்தும் வழக்கம் உரைநடையின் வளர்ச்சியுடன் ஐரோப்பியரிடமிருந்து வந்ததாகும்.இத்தாலியரான பெஸ்கிப் பாதிரியார் -வீரமாமுனிவர்-இந்த வழக்கை பரமார்த்தகுரு கதை முதலான தமது உரைநடை நூல்கள் வாயிலாக முதல் முதல் தமிழுக்கு அறிமுகப்படுத்தினார். அவரைத்தொடர்ந்து ஆறுமுகநாவலரும் குறியீடுகளைத் தமிழில் அமைத்தது மட்டுமல்லாது அவற்றுக்கான பெயர்களையும் வகுத்துத் தந்தார்.

முடிப்பிசைக் குறி-full stop
தொடரிசைக்குறி - semicolon
உறுப்பிசைக்குறி-coma
வினாவிசைக்குறி-question mark
அனுவாதக்குறி-inverted comma
மெய்ப்பாட்டுக்குறி - exclamation mark
விளக்கவிசைக்குறி-colan
இயப்பிலிசைக் குறி- bracket

இக்குறியீடுகளை சரிவரப் பயன்படுத்துவதன் மூலம் மொழிவாயிலாக கருத்துக்களையும் உணர்வுகளையும் மிகச் செம்மையாக வெளிப்படுத்தலாம். மாணவர்கள்,ஊடகவியலாளர்கள் என்போர் சரியான குறியீடுகளைப் பயன்படுத்துகிறார்களா என்பதும் கேள்வியாகவே உள்ளது.

உவமை, உருவகங்களும் படிமங்களும்

கவிதையில் உவைமை உருவகங்கள் முதலான அணிகள் பயன்படுவது போல உரை நடையிலும் அவை பயன்படுகின்றன. உரைநடையில் பொருள் விளக்கத்துக்குப் பயன்படும் இவை புனைகதைகளில் படிமாமாக அமைந்து உணர்வு எழுச்சியையும் அழகணர்ச்சியையும் உண்டாக்குகின்றன.

"பூம்புகார்த் துறைமுகத்தின் கரையிலே பண்டங்கள் இறக்கப்படும் பொழுது கப்பல்கள் சுமை குறைந்து கடலலைகளில் ஆடுவது போல அசைவது போலக் கோவலனின் உளத்தரங்கிலே மாதவியின் எண்ணக் கப்பல் அசைந்து ஆடி... கண்ணகி மீது கொண்ட காதலும் கவர்ச்சியும் நுரைக் குமிழிகலாக அழிந்து போயின.அழிந்தே போயின."

சலதி சொக்கன்

நல்ல வாசிப்பும் நுண்மையான அவதானமும் அழகியல் உணர்வோடு கூடிய சிந்தனைகளும் நல்ல படிமங்களை உருவாக்க உதவுகின்றன.

நடையியல்

தமிழிலக்கண அறிவும் சொற்களஞ்சியத் தேட்டமும் வாய்த்தோர் பிழையற்ற உரைநடையைக் கையாளலாம். அனாலும் தமக்கென த் தனித்துவமான உரைநடையை உருவாக்கிக் கொள்ள அவர்கள் தர்க்க நெறி அறிவும் எளிமையும் ஒருசேர இணைத்து பலவகையிலும் தம்மைத் தகுதியுடையவராக ஆக்கிக் கொள்ள வேண்டியிருக்கும். அப்பொழுதும் தனித்துவமான நடை அவருக்கு கைவராது போகலாம்

அனால் இலக்கியச் சுவைவாய்ந்ததும் கூர்மையானதும் படிப்போரின் நெஞ்சங்களைப் பிணிப்பதுமாகிய உரைநடை,படைப்பாளரான இலக்கிய வாதிகளுக்கும் திறனாய்வாளருக்குமே எளிதாகும். இத்தகையோர் தமக்கென ஒரு நடையினை ஆக்கவல்லவராக இருப்பர். முன்பு எடுத்துக்காட்டிய அறிஞர்களாகிய ஆறுமுக நாவலர், பண்டிதமணி

சி. கனபதிப்பிள்ளை, பேராசிரியர் வி செல்வாநாயகம் ஆகியோரும் தமெக்கென ஒரு நடையியலை வகுத்துக் கொண்டவரே,

மாணவருக்கு அளிக்கப்படும் சிறந்த தமிழறிவு,அவர்களைப் பிழையற எழுத வைக்கும். நல்ல தமிழறிவாளராக ஆக்கும். எதிர்காலத்தில் நடையியலாளராகவும் படைபாளியாகவும் கூட அவர்கள் வருதல் கூடும். இவற்றுக் கெல்லாம் ஆரம்பத்திலேயே வித்திடுவது ஆசிரியரின் தலையாய பணியாக உள்ளது.

துணை நூல்கள்

உரைநடைத் தெளிவு ஓர் அறிமுகம்,வித்துவான் க.சொக்கலிங்கம்,வாசுகி சொக்கலிங்கம்.சுப்பிரமணிய புத்தகசாலை,யாழ்ப்பாணம்1999

சி பத்மநாதன்.இலங்கைத் தமிழ் சாதனங்கள் இலங்கை இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் 2006

திருமுருக கிருபானந்தவாரியார் எழுதிய விளக்கு என்னும் நூலில் இருந்து)

இரா.சம்பந்தன்

இலக்கியக் கருவூலம்,க. சொக்கலிங்கம்,(சொக்க ன்),திருவள்ளுவர் அச்சகம், நல்லூர்,2001

ஐ.தர்மசிங், நாகர்கோவில்...

“சிரிப்பின் அர்த்தம் “.

கேட்டது பத்து ரூபாய்
நானாகக் கொடுத்த
இருபது ரூபாயில்
சுவற்றிலடித்த பந்தாய்
என்னிடமே திரும்பியது
பத்து ரூபாய்...
பசியைத் துரத்த
வாங்கிக் கொடுத்த
நான்கு பரோட்டாவில்
ஆச்சரியமாய்
என்னிடமே திரும்பியது
இரண்டு பரோட்டா...
பரிதாபமாய் கொடுத்த
இரண்டு பழைய சட்டையில்
என்னிடமே திரும்பியது
பத்திரமாய் ஒரு சட்டை...
உதவிக்காக அவர்
எப்போதாவது கை நீட்டும்
சிலரில் நானும் ஒருவன்
வயிற்றின் கொந்தளிப்பு
அடங்காத வேளைகளில் மட்டுமே
மனிதர்களின் உலகில்
நுழைவார் அவர்
இதர வேளைகளில்
அவரின் உலகமே தனி
அவரின் உலகத்தில்
அவரின் ஆளுகைதான்
அடிக்கடி அவரே
சிரித்துக் கொள்வார்
அடிக்கடி அவரே
பேசிக் கொள்வார்
அடிக்கடி அவரே
கைத்தட்டிக் கொள்வார்
சதி இல்லை
வம்பு இல்லை
வழக்கு இல்லை
பேராசை இல்லை
துரோகம் இல்லை
பொறாமை இல்லை
அவரின் உலகத்தில்
சகலமும் படைத்த
மனிதர்கள் பலரிடம்
காணாமல் போன
மகிழ்வில் எல்லையை
எளிதாக தொட்டுத் திரும்புவார்
அந்த வெறுமையான மனிதர்
அவரைத்தான்
பைத்தியக்காரன் என்று
நையாண்டி செய்கிறது
இந்த அறிவார்ந்த சமூகம்
அதற்கும்
ஒரு சிரிப்பை பதிலாக்கி
கடந்து போகும்
அந்த மனிதரின்
சிரிப்பின் அர்த்தம் தான்
இன்னும்
பூடகமாகவே இருக்கிறது
பொருள் புரியாமல்...

● சிறுகதை

பிரம்மியா சண்முகராஜா



இன்பதுன்பக் காரணி நீ

பாறை ஆக்கிய கற்கள் எல்லாம் சிலையாவதில்லை வடிகட்டி தெரிந்தெடுத்து சிற்பச்சாலையில் சேர்ப்பது போல் தேர்வுகளின் தெரிவினில் தேடிச் சேர்க்கப்பட்ட தோழர்கள் கூட்டத்தில் இவர்களும்... இங்க வாங்கோ தமிழ் உதில உட்காருங்கோ மரியாதையை சைகைகளில் காட்டுபவன் அவன். எடி அத்தனா நீ இதுல இரடி வார்த்தைகளில் கூட உறுமல்தான் அவளிடம் மட்டும்தான். எடி எத்தனை தரம் சொல்லுறதடி பொடியளோட பல்லு காட்டிட்டு இருக்காதை என்று. அக்கரை கலந்த பொறாமை வார்த்தையால் அதிகமாக உரிமை எடுத்துக் கொள்வான் அகிலன். அர்த்தனா வேகமானவள் செயலில் பேச்சில் அத்தனை அசைவுகளிலுமே... குளமாய் இணையாத வடகிழக்கை இணைத்து விட தோழமை கொண்டவர்கள் ஆகியும் அர்த்தனாவும். ஐந்து வருடக் கல்லூரி பயணம் இவர்கள் இருவரில் ஒருவர் விடுமுறை என்றாலும் விரிவுரைகள் விறைத்து விறுவிறுப்பு இழந்து விடும். ஆனால் ஒருவர் வருகை தந்தால் போதும் வருகை பதிவில் இருவர் கையொப்பங்களும் பிரசன்னமாக இருக்கும். திருவிழாக்களில் தொலைத்தவர்கள் போல் ஒருவரை ஒருவர் தேடுவதிலும், கீரியும் பாம்புமாய் கடித்துக் கொள்வதிலும் காலம் ஓடிக் கொண்டிருந்தது. இவர்கள் நண்பர்களா எதிரிகளா என சந்தேகப் பார்வை காட்டுபவர்கள் ஏராளம் ஆனாலும் அர்த்தனாவின் ஆருயிர் நண்பன் அவன் என்றும் ஆகியின் அத்தனையும் அவள் என்றும் பல்கலையே அறியும். கல்வி பயணம் இலக்கை எட்டும் நாட்கள் வந்தது தேசங்கள் தேடி தோழமை தொலையும் நாட்கள் அவை. இனிய பொழுதுகள் கழித்தல் இடப்பட்டு நினைவுகள் கூட்டலாய் மீட்டல் ஆகி கொண்டு இருந்தது. சிறுவயதில் இருந்தே உடல் பாகங்களில் ஒரு பகுதி சற்று ஆரோக்கியம் அற்றவனாகவே இருந்தான் அகி. அதனால் என்ன இரண்டு மணி நேர பேருந்து பயணங்களுடனே தினமும் கல்லூரி கண்டவன். குறைகள் அவன் எண்ணங்களைக் கூட எட்டியதே இல்லை. தங்கி வாழ நினைத்ததும் இல்லை. தத்துணிவாளன். இருதய சத்திர சிகிச்சை ஒன்றில் இறைவன் அவனுக்கும் அழைப்பாணை வைத்திருந்தார். அபி ஒரு வாரமாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தான். காலை மாலை மருத்துவர் பார்வைக்கு முன் அர்த்தனாவின் தரிசனம் அவனுக்கு கிடைத்து விடுவது உண்டு. என்ன தோழர்கள் இவர்கள் இந்த நட்பு வரம் என வைத்தியசாலை நண்பர்கள் அவனுக்கு ஆசிபகர்ந்ததும் உண்டு. இன்னும் சில நாளில் அவள் கிழக்கில் நான் வடக்கில் எனக்கல்லவோ தெரியும் என அகி அமைதி குலைந்ததும் உண்டு. அன்று காலையில் அவள் அழைப்பு எனக்கொரு நேர்முகத் தேர்வு முல்லைதீவில் நான் போயிட்டு வாரேன் டா காலையில பார்க்க வர இயலாது மாலை வருவேன்என்றாள். சரியடி உனக்கு கிடைக்குமடி பார்த்து பத்திரமா போயிட்டு வா பதிலுடன் நிறுத்திக் கொண்ட தொலைபேசி மீண்டும் அழைத்தது அவனிடமிருந்து.

அர்த்தனா! என்ன அகி சொல்லடா? நீ வரும்போது எனக்கு சுண்டல் வாங்கி வா நல்ல உறைப்பா நாக்கு செத்துப் போச்சு... சரியடா வாங்கியாறேன். இதய சத்திர சிகிச்சை காரத்தை தவிர்க்க வைத்தியர் கட்டளை அர்த்தனா சிந்தித்தாள் அகியின் ஆரோக்கியம் ஆசை ஏதோ முனுமுனுத்தபடி அவள் வழக்கமாய் அதிர்ஷ்டம் காட்டும் அந்த புடவையை நேர்த்தி செய்து தலைகுளித்து நீளக்கூந்தல் பின்னி இழுத்து, உடுத்தி ஒழுங்கு செய்து நேர்முகத் தேர்வுக்கு ஆயத்தமானாள். நேரமோ மதியம் ரெண்டு தாண்டி விட்டது இவளின் வேலை அறிமுகத் தேர்வில் அனுபவம் இல்லையா இப்போதுதான் பல்கலை நிறைவானதா அதிகாரி எழுத்தார் ஐயா அனுபவம் இருந்தால் தான் வேலை என்றால் எப்படி முடியும் நீங்கள் கொடுத்தால் தானே அனுபவம் பெற்றுக்கொள்ள முடியும் என அர்த்தனா அவர் முடிக்கும் முன் முந்திக் கொண்டால் அதிகாரி அவரை ஏற்றுக் கொண்டார் பார்வையில் மாற்றம் அவளை பாராட்டுவதாகவே உணர்வளிக்கப்பட்டது தேர்வு நிறைவு நாளை அறிவிப்போம் என முடி அளித்தனர் நன்றியுடன் விடைபெற்ற அர்த்தனாவின் எண்ணமெல்லாம் நேரமாச்சு சுண்டல் வாங்குபவன் ஆஸ்பத்திரி போகணும் என்பதில் தான் வேறு வெகுநடை வண்டி கடையில் ஐயா சுண்டல் வேறு வேலாய் சில பொடிகள் கையில் இட்டு கைப்பையில் இட்டு கொடுத்தார் கடைக்காரர் எடுத்துக்கொண்டு ஓட்டமாய் பார்வை நேரம் எல்லாம் அவளுக்கு இல்லை வைத்தியர் நான்தான் என்பதாய் காவலாளி கண்களில் மண் தூவி ஆகியின் இருப்பிடத்திற்கு வந்து விடுவாள் கண்கட்டி வித்தைக்காரி அவள் அன்று அகையின் உடல்நிலை சற்று மோசமாகவே இருந்தது அவன் படுக்கை விட்டு எழும்ப முடியாது இருந்தான் கைகளில் குளுக்கோஸ் வயர்களில் ஏற்றப்பட்ட படி விரிப்புகள் கசங்கிய படுக்கையில் நிமிர்ந்து படுத்திருந்தான் என்னடா புண்டைக்கு அவள் விசாரிக்கமும் சுண்டல் வாங்கியது ஆமாடா என நான்கு பகுதிகளை வெளியே எடுத்தால் என்ன தடி இத்தனை இல்லையடா இதுல சுண்டலும் மரவள்ளி பொரியலும் இருக்கு காரம் சேர்க்காததும் வாங்கி வந்தான் உனக்கு எது வேண்டுமோ சாப்பிடலாம் என சொன்னால் ஆனாலும் அவன் காலத்தை கேட்பானோ என கவலையும் ஒரு புறம் அவள் பேச்சையும் செயலையும் புரிந்து கொள்ள அவனுக்கு கற்றுத்தர வேண்டுமா? அடி நீ காரம் இல்லாததையே தா என்றான். ஏனடா காரம் கேட்டாயே என்றாள்.. அப்போ ஏன் காரம் இல்லாமல் வாங்கி வந்தாய்? என்றான் அகி. அவன் புரிதல் தோழமை தாண்டியது கண்களால் சிரித்துக் கொண்டே அவன் தலையை சற்று உயர்த்தி சுண்டலை ஊட்டி விட்டாள் சுண்டலின் சுவை தாண்டி அவள் செய்கையில் அகி நிறைந்து கொண்டிருந்தான். வலிகள் கூட சில சமயம் சுகம்தான் என குளுக்கோஸ் வயரிடம் பார்வை காட்டினான். தாயானாள்அர்த்தனா சில நொடி கழிய பசியில்லை, வயிற்றிலும் இடம் இல்லை ஆனால் அவள் தாய்மை ருசிக்க நீட்டும் போதெல்லாம் வாய் திறந்தான். போதுமடி நீயும் சாப்பிடு கட்டாயப்படுத்தினான் அவளும் பங்கெடுத்தாள் பேசிக் கொண்டே சுண்டல் சுவையானது. அப்படியே நேர்முகத் தேர்வு விவரணமும் ஒப்புவிக்கப்பட்டது. சரியடா படுக்கை கலைந்து இருக்கே சரி செய்யட்டுமா? அம்மாடி. இன்று என்னவோ அர்த்தனாவின் கலைந்த கூந்தல் புடவை மடிப்பு எல்லாமே வித்தியாசமாய் ஒருவித அழகாய் தெரிந்தாள். அவள் தந்த தாய்மைப் பகிர்வு இன்னும் அவளை அழகாக்கியது ஆகி ரசித்துக்கொண்டிருந்தான். அவனால் உடலை அசைக்க முடியவில்லை கைகளை தூக்கவும் முடியவில்லை. அர்த்தனா அவனை மெதுவாக அசைத்து விரிப்புகளை சரி செய்ய நெருங்கினாள். அவன் தலையை ஒற்றைக் கையால் உயர்த்தி மற்ற கையில் தலையணையை சரி செய்தாள்.அப்படியே அடுத்த புறத்து கட்டிலின் விரிப்பை எட்டி இழுத்து விட எத்தணித்தாள். அவள் பின்னல் விட்டு விலகிய கூந்தல் முடி அவன் கழுத்தில் கோலம் இடுவதாய் உரோமைக் கண்களை சிலிர்க்க வைத்தது. சிலித்த அவன் சிந்தை பேச்சு மறந்தது அவள் ஸ்பரிசம் தொடர் முடியாது ஆனாலும் தேவை தூண்டியது கூந்தல் சாரலை மூச்சு காத்துக் கொண்டு ஓரம் செய்யலாம் என உதடு குவித்தான். விரிப்புகளை சரி செய்த அர்த்தனாவின் கன்னங்களில் இனம் தெரியாத சலனத் தூண்டல் காற்றாடியது. விரிப்பிட்டு தலையை சடுக்கெனத் திருப்பிக் கொண்டாள். குவித்த உதட்டில் ஓரமாகும் கூந்தலுக்குப் பதில் காந்தளின் உதடுகள் மாட்டிக்கொண்டது. இதுவும் சத்திர சிகிச்சை தான் போல் முதல் முறை திட்டமிடாத யுத்தம். கட்டில் களம். பக்கத்து படுக்கைகள் காலியாய் இருந்தது பாக்கியமோ என்னவோ? கசங்கிய விரிப்பு நேர்த்தியானது ஆனால் இன்னும் ஒன்று எதிர்பார்ப்பு இன்றி கசங்கி போனது. கொடுத்தவள் திருக்கென எடுத்துக் கொண்டாள் விழிகள் அயல் தேடியது அப்பா யாரும் பார்க்கவில்லை உறுதி செய்து கொண்டாள். உதட்டு ஈரம் சேலை தலைப்பில் மறைக்கப்பட்டது. அவன் அர்த்தனா!!!! சோறி அடி நான்.... என விக்கி விழுங்கினான். அமைதலாய் அருகே அமர்ந்து கொண்டாள் அர்த்தனா. வேகமானது இதயத்துடிப்பு. பார்வை பரிதவித்தது. பதில் என்ன சொல்ல மெய் மறந்து ஸ்தம்பித்த அசைவுகள் புதிய உணர்வுகள் சிந்துதா? பொங்குதா? எடுத்தானா? கொடுத்தேனா? ஏக்க நிலை. திடுதிடுப்பென பலர் அங்கே ஓஓ பார்வை நேரமா?அகியின் படுக்கை சுற்றி உறவினர்.செய்கை மறந்து விறைத்த அர்த்தனாவின் மேல் பார்வையாளர்கள் யார் இவளோ சொற்கள் இன்றிய அறியும் ஆர்வத்தை விவரணமாகினர் விழிகளில். புரிந்து கொண்டவனாய் ஆகி இவள் என்னவள் என மொழி இன்றி பதில் பகிர்ந்தான். மறு நொடியே புரிதல் அவளிடம் சேர்க்கப்பட்டது.

சுவஸ்திகா ராஜ்பிரகாஷ் –கொழும்பு

இன்பதுன்ப காரணி நீ

பெருக்க பெருக்க போதவில்லை
சுருக்க மனமோ எண்ணவில்லை
பற்று மேல் பற்று வைத்து
பாதி காலம் ஓடி களைத்து
தாலாட்டு வயது தள்ளாடும் வரையில்
சேர்த்து சேர்த்து
போதாமாலே
மாண்டும் வரையில் நிறைய பதுக்கி
தேவைகள் இவையென ஒதுக்கி
தனியவில்லையே தாகம்
பொன் பொருள் மேல் மனிதன்
கொண்ட மோகம்
விதைக்க வீடு தந்து
விதைக்கும் வீடு தந்து
விளைந்து வீடாய் வந்து
அடர்ந்து காடாய் நின்று
படர்ந்து வளியும்
கூடி நிழலும்
இருக்க இடமிவையெல்லாம் தந்து
படுக்க இடமும் பகிர்ந்து
குடில் அமைத்தும்
மனை உயர்ந்தும்
தனியவில்லையே தாகம்
மண் மரம் மேல் மனிதன் கொண்ட
மோகம்
உழைத்த பணத்தை
கரைத்து குடித்து
உருவான மலரை உருக்குலைத்து
பருக வேண்டி பணம் திருட்டு
அகப்பட்டால் பொய் புரட்டு
சுகம் வேண்டி உயிர் பறிப்பு
மலராத மொட்டு;களுக்கும் துர் இறப்பு
விலைகுறித்த அங்கத்திற்கடிமை
விலைமதிப்பில்லா மங்கைக்கு பாலியல் கொடுமை
ஏனோ தனியவில்லையே தாகம்
மது மாது மேல் மனிதன் கொண்ட மோகம்
ஆதியில் தோன்றி அந்தத்தில் மறையும்
நம் தேகம் கூட நமதில்லை
ஐம்புலன் அடங்காமல்
தாகமனைத்தும் தீருவதுமில்லை
பார்ப்பவை நினைப்பவை அனைத்திலும் மோகம்
என்றுமே இதுதானோ அடங்காத தாகம்
ஆசை எனும் தாகம்
பேராசை எனும் மோகம்
கிடைக்காத ஏக்கத்தில் கிடைப்பதோ மரணம்
அனைத்திற்கும் அதுவே காரணம்!
மனிதனுக்கு தீராது இந்த தாகங்கள் என்றுமே....!
சிந்திய பேனா வார்த்தைகளுக்குள்ளே சிந்தனை
செய்த நான்...



கோவை ஆனந்தன்

பூமி செழிப்பதும் உழவாலே

விளையாத மண்ணில் விழுவதும் வீணென்று
விலகிப்போன மழைமேகங்கள்
தூறல்களாய் தவறிவிழ
கள்ளிச்செடிகள் முளைத்த
தரிசு நிலத்தில்
பருவம் தவறிப் பெய்த அடைமழையில்
நனைந்த உழவனின்
கரங்கள் பட்டு
மேடுகள் கரைந்து பள்ளங்களும்
சமவெளியாக
பாழாய் கிடந்த
மண்ணும் மின்னிட
மாடுகள் பூட்டி உழுத பூமியில்
வரப்புகள் கட்டி
உயரத்தேக்கிய நீரால்
மண்ணை பிளந்து முளைத்த
விதைகள்
பச்சை நிறத்தில்
துளிர்விட்டு வளர
காணுமிடமெங்கும் பசுமையை
போர்த்திய பூமியில்
அரும்பிய மொட்டுகளும்
மலர்ந்து வாசம்வீச
விதைத்தவன் வியர்வையும்
குளித்தது மகிழ்ச்சியில்
விரியும் பூக்களிலமர்ந்த
தேனீக்கள் தூதுபோக
கூட்டமாய் வந்த
பறவைகளும் பசியாற
முதிர்ந்த கதிர்களும்
வெட்கத்தில் தலைகுனிய
அருவடைக்கு ஆள்தேடியது சோளக்காட்டு
பொம்மைகளும்
மாட்டுவண்டியில் பயணித்து களத்துமேடு
வந்துசேர்ந்த
பயிரெல்லாம்
பதரென விதையென விலகி
விதைத்தவன் கையில்
பொன்னென நிரம்பி
அடைபட்டு போகிறது
கோணி மூட்டைகளில்
வாழும் உயிர்களின்
பசியை விரட்டி
பஞ்சமெல்லாம் ஒழிந்து
பசியாறிய உயிர்களும்
சொன்னது பூமி செழிப்பதும் உழவாலேயென....

கரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா



கவிதைச் சாலை

குயிலின் குரலை நீ கேட்டிராவிடில்
அண்டங்காக்கைதான்
உனக்கு குயிலாக இருந்திருக்கும்
வீட்டுக்காரனையெல்லாம்
சாமத்தில் உசுப்பி முழிக்க விட்டு
சுகமாக சுருண்டு படுத்துறங்குகிறது
வீடே இல்லாத தெரு நாய்கள்
ஜாலியாகக் குரைத்த களைப்பில்
இருட்டுக்குள் படுத்திருந்த
காமம்
வெளிச்சத்துக்கு வந்தது --
குழந்தை
மழை வெள்ளத்திற்குள்
மூழ்கிக் கிடந்தது நீச்சல் தெரியாத
நீச்சல் குளம்
சாப்பாட்டு மேசை நாற்காலி
கிண்ணங்கள் தட்டுகள் கரண்டிகள்
கட்டில் படுக்கை தலையணை
டி.வி கணினி கண்ணாடி ஆடை அலங்கார
குடுவைகள் பாத்திரங்கள்
திரைச்சீலை பொம்மைகள்
இத்தனை இருந்தும் ஆட்களில்லாத
வெறுமையில் அழகிழந்து கிடக்குது
அலங்கரிக்கப்பட்ட வீடொன்று
இந்தக் கருமங்களையெல்லாம் பார்த்தால்
கடுப்பாகி விடுவாய்
நீ எப்போதும் போல கண்ணை மூடிக்கொண்டே
இரு கடவுளே
பருவம் தப்பி பெய்யும் மழையும்
வீசும் காற்றும் அடிக்கும் வெயிலும்
கூலிக்கு மாரடிக்கிறது
உழவனின் பட்டினி சாவுக்கு வந்து
கோடாலியோடு மரமும்
கூட்டு சேர்ந்துதான்
மரத்தை வெட்டுகிறது
ஒரு மனிதனால்
சந்தேகப்படவே முடியாத
ஒரே நிஜம்
அவனது மரணம்தான்
இந்த கேள்விக்கான பதிலை
முப்பது செகண்டுகளில் எங்களுக்கு அனுப்பி
மொபைல் போன் பரிசு பெறுங்கள் உங்களுக்கான
கவுண்ட் டவுன் டைம் தொடங்கி விட்டது என்று
ஒரு வாரமாக கவுண்டவுன் நடத்துகிறது
வீணாப்போன ஒரு யூட்யூப் சேனல்
ஆண்களின் வாய்தான்
மதுவையும் மாதுவையும்
போட்டுக் கொடுத்து விடுகிறது
மனைவிகளிடம்



கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி.

காலத்துடன் ஓட்டம்

காலத்துடன் விரைந்திட கடினமான ஓட்டம்!
ஞாலத்தில் பொருளைத் தேடவே நாட்டம்!
பொறுப்புகள் சுமந்தே போராட்டம் நாளும்!
பொருளிலா வாழ்விதே நிம்மதியோ தூரம்!
கருவறையில் உதிப்பதற்கும் காலத்தோடு பொருள்!
மின்னறையில் எரிப்பதற்கும் கனத்தோடு பொருள்!
காலம் இருக்கையில் பொருளில்லா வறுமை!
காலம் கரைகையில் இருந்தும் வெறுமை!

ரஜிதா அரிச்சந்திரன்

அந்தநிமிடம்

'ஹலோ,''ஹலோ,' போன் எடுத்தா கதையுங்கோவேன் என்ன? தொலைபேசி கட்டாகிறது, என்னடா இவங்கள் வேலை இல்லாமல் திரியுறாங்கள் போல எனப்பேசியவாறு மரக்கறி வெட்டினாள் சங்கவி மறுபடியும் டிங்டிங்டிங் என தொலைபேசி அடிக்க மறுபடியும் அந்த விசரன் போல இருக்கென பேசிக்கொண்டே வந்து போனை எடுத்து ஹலோ என்ன? யார்? எனக்கேட்டாள். ஏன?; கோபமாய் இருக்கிறீங்களா? என மறுபக்கத்திலிருந்து ஒரு ஆணின் குரல் நீங்கள் யாரென்று சொல்லுங்கள் என சங்கவி கேட்டதும் யாரென்று சொன்னாத்தான் கதைப்பீங்களா? எனக் கேட்டான். இவளுக்கு கோபம் பொங்கி எழுந்தது ஒரே மூச்சில் வேற வேலை இல்லாமல் திரியுதுகள் போல, எவள் கதைப்பாள் என்றே அலையுதுகள் என்று பேசிவிட்டு போனை கட்பண்ணிணாள்.மறுபக்கத்தில் கதைத்தவன் சஞ்சீவ் அவனுக்கு சங்கவியை திருமண முடிக்க நிச்சயித்து ஒரு மாதம் சஙகவியுடன் விளையாட நினைத்தவன் போனில் தொடர்புகொண்டதும் அவள் இப்படி நடந்து கொண்டது வருத்தமாகவே இருந்தது.

அவன் தன் நண்பன் சிராஜ்க்கு மச்சி அவ கூடகதைக்க போன் பண்ணினேன் அவளோ திட்டிவிட்டு கட் பண்Pட்டாள் என்றதும் சிராஜ் சிரித்ததும் என்ர கவலை உனக்கு சிரிப்பாய் இருக்குதா என கத்தியதும் சிராஜ் டே மச்சி சொரிடா நீ அவளுக்கு உன் பெயர் சொன்னியா இல்லடா நான் பெயர் சொல்ல வில்லை போடா அப்ப எப்புடி அவள் கதைப்பாள்? அவப்புடி கதைத்திருந்தால் தானடா அவள் பிரச்சினைக்குரியவள் இப்ப பார் அவள் நல்ல பிள்ளை என்று தெளிவாகிட்டுது. நீ எவ்வளவு அதிஸ்டக் காரன் நீ தேடாமலே அவளைப்பற்றி அறிய முடிந்தது'' என கூறிய நண்பனிடம் "ஆமாட தாங்ஸ் மச்சி'' என்றான்.

என்ன இருந்தாலும் அவன் உள்ளே ஒரே புழுகுதான் அவள் வேறு ஆண்களுடன் கதைக்க விரும்பவில்லை என்னுடன் மட்டும் தான் கதைக்கவிரும்புவாள் என நினைத்த அவன் மனது பட்டாம் பூச்சி போலாய் பறந்துதிரிந்தது ஆயிரம் பூக்கள் அவனைச்சுற்றி மலரக்கண்டான். "டேய் மச்சி'' என்ற குரலால் 'டிஸ்ரப்'; ஆன சஞ்சீவ் 'டோன்ற் டிஸ்ரப் மீ' என்றவனை முறைத்துப்பார்த்து என்னடா கனவாடா என்றதும் சஞ்சீவ் இல்லடா சும்மா இருந்தேன் என்றவனை "ஆமாடா நீ சும்மாதான் இருந்தாய் என நக்கலாய் கூறி வாடா கன்ரீனுக்குப் போவோம் ஆனால் இன்றைக்கு உன்ர ரீற் மச்சி பலமாய் வைக்க வேணும் என்றவனை பார்த்து சஞ்சீவ் போடா நானோ அவளோட கதைக்க முடியல என்று ஏக்கத்தில இருக்கேன் நீவேற? ஆமா அதுவா உன் பிரச்சினை உன் போன எடு'' என பறித்து சங்கவி பேன் எடுத்தான் அவன் ஆசைப்படி போன் எடுத்தது சங்கவி "ஹலோ,யார் கதைக்குறீங்கள்''; என்றதும் மிஸ் சங்கவி நான் சிராஜ், சஞ்சீவ்ட பிறண்ட் சஞ்சீவ் உங்களோட கதைக்க வேணுமாம் என்றதும் சஞ்சவி வெட்கப்பட்டாள் அதை உணர்ந்தவனாக வெட்கப்படாதேங்கோ அவனிடம்; கொடுக்கின்றேன் என்று போனைக் கொடுத்ததும் சஞ்சீவ் '' 'ஹலோ' நான் சஞ்சீவ் கதைக்கிறேன் உங்களிடம் கதைக்க வேண்டும் போல இருக்கின்றது உங்களுக்கு'' என்றது;ம் அவள் "ஹலோ சொல்லுங்கள்'' என்றதை கேட்டதும் செய்த தவம் அந்த நிமிடத்தில் முத்தியளித்தது போலிருந்தது சிறகே இல்லாமல் ஆகாயத்தில் பறந்தான்.

முந்தைய இதழ்கள்

காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
வைகாசி - 2022

சித்திரை - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்

காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
மார்கழி - 2021

மாசி - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
ஆடி 2019

காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
ஐப்பசி 2019

தை - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ்

காற்றுவெளி
மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ் - 2020

பங்குனி - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்